# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இரண்டாம் பதிப்பு

விலை: 20
பக்கங்கள்: 28


சுடர் 32 கதிர் 299 புரட்டாதி 05ஆம் நாள் வியாழக்கிழமை 21 செப்ரெம்பர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048


## மாகாண சபைகள் தேர்தல் திருத்தச்சட்டம் 2/3 பெரும்பான்மையுடன் நிறைவேற்றம்

கொழும்பு, செப். 21
மாகாண சபைகளின் தேர்தலை ஒத்திவைப்பதற்காக, அரசு தூசு தட்டி எடுத்து வந்த மாகாண சபைகள் தேர்தல் திருத்தச் சட்டவரைவு நாடாளுமன்றில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நேற்று நிறைவேறியது. காலை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட சட்டவரைவு மீது குழப்பங்களுக்கு மத்தியில் பகல் விவாதம் நடைபெற்று, இரவு வாக்கெடுப்புக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.
சட்டவரைவுக்கு அரசுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி என்பன ஆதரவு வழங்கின. மகிந்த அணி எதிர்த்து வாக்களித்தது. 157 வாக்குகள் ஆதரவாகவும், 37 வாக்குகள் எதிராகவும் கிடைத்தன.
மாகாண சபைகளின் தேர்தலை ஒத்திவைக்கும் நோக்குடன் அரசு கொண்டு வந்த 20ஆவது திருத்தச் >> 25

## 50-50 முறையில் மாகாணத் தேர்தல்

கொழும்பு, செப். 21
தொகுதிவாரி முறைமை 50 சதவீதமும், விகிதாரசாரப் பிரதிநிதித்துவம் 50 சதவீதமுமாகக் கொண்ட கலப்பு முறையிலேயே மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்றும், வேட்புமனுத் தாக்கலின் போது 25 சதவீதம் பெண் >> 25



## மகிந்த அணி எம்.பிக்களால் சபையில் கூச்சல், குழப்பம்

கொழும்பு, செப். 21
மாகாண சபை தேர்தல் திருத்தச் சட்டவரைவை அரசு சபையில் சமர்பித்ததுமே, மகிந்த அணியினர் நாடாளுமன்றில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தினர். நாடாளுமன்றத்தை நடத்த விடாமல் முடக்கும் நோக்குடன் அவர்கள் பிரச்சினைகளை எழுப்பினர். சட்டவரைவின் திருத்தங்கள் மேற்பார்வைக் குழுவுக்கு அனுப்பி வைக்கவில்லை, மாகாண சபைகளின் ஒப்புதல் பெறப்படவில்லை என்று குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர். சபைக்கு நடுவே வந்து பேரொலி எழுப்பினர்.
தலைமை அமைச்சர் >> 23

மருத்துவர்கள் இன்று புறக்கணிப்பு
விரிவு பக்.09

நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று கொடும்பாவி எரிப்பு
விரிவு பக்.02


அப்ப அடுத்த வருசம் ஒரே எலெக்சன் தான்...

கடும்போக்காளர்கள் எதிர்பார்ப்பதைப் போன்று

## தீர்வை விரைவாக வழங்க முடியாது

ஐ.நா. பொதுச் சபையில் நின்றுகொண்டு மைத்திரி உரை

நியூயோர்க், செப்ரெம்பர் 21
"சில கடும்போக்காளர் துரிதமான பயணத்தை எதிர்பார்க்கிறார்கள். சில கடும்போக்காளர் விரைவான தீர்வுகளை எதிர்பார்க்கின்றார்கள். அவர்களின் விருப்பத்துக்கு ஏற்றவாறு செயற்பட முடியாது. துரிதமான பயணம் ஆபத்தானது. சில கடும்போக்காளர் எதிர்பார்க்கும் துரிதமான- உடனடித் தீர்வுகளை வழங்குவதிலுள்ள சிரமங்களை, எமது ஒட்டுமொத்த சமூகத்திலுமுள்ள சிக்கலான தன்மையின் அடிப்படையில் புரிந்து கொள்வீர்களென நான் நம்புகிறேன்"
இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
ஐ.நா. பொதுச் சபையின் 72ஆவது கூட்டத் தொடரில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்று உரையாற்றினார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது;
2015ஆம் ஆண்டு நான் ஆட்சிக்கு வரும் போது, போர்க்காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையால் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு முகம் கொடுக்க வேண்டிய தேவை இருந்தது.
போர் நிலவிய சூழ்நிலை தொடர்பாக முன்வைக்கப்பட்டிருக்கின்ற முன்மொழிவுகள் பற்றி அரசு என்ற ரீதியில் முன்னுரிமை கொடுத்து செயற்படுவதுடன் அவற்றை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துவருகின்றோம்.
ஐ.நா. அமைப்பின் உறுப்பு நாடென்ற ரீதியில் 62 ஆண்டுகளாக ஐ.நா. அமைப் >> 23

கிழக்கு, வடமத்திய, சப்ரகமுவ

## மாகாண சபைகளுக்கு மார்ச்சுக்குள் தேர்தல்

அரசின் திட்டத்தை வெளியிட்டார் ரணில்

கொழும்பு, செப். 21
"கிழக்கு, வடமத்திய, சப்ரகமுவ மாகாண சபைகளுக்கான தேர்தலை எதிர்வரும் மார்ச் மாதத்துக்குள் நடத்துவோம். மூன்று மாகாண சபைகளுக்கான எல்லை நிர்ணயப் பணிகளை நான்கு மாதத்துக்குள் முடித்துக் கொள்ள முடியும். முடியுமாயின் கிழக்கு, வடமத்திய, சப்ரகமுவ மாகாண சபைகளுடன் மேலும் மாகாண சபைகளையும் இணைத்துத் தேர்தலை நடத்தவும் வாய்ப்புக்கள் உள்ளன"
இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க >> 23

நீண்ட இழுபறியின் பின்னர் இன்று இடைக்கால அறிக்கை முன்வைப்பு

## புதிய அரசமைப்பை வரையும் பணிகள் நவம்பரில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 21
அரசமைப்பு நிர்ணயசபையாக இன்று காலை கூடவுள்ள நாடாளுமன்றத்தில் வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை முன்வைக்கப்படும். அறிக்கையுடன் கட்சிகள் ஒவ்வொன்றும் வழங்கிய பின்னிணைப்பும் அரசமைப்பு நிர்ணயசபையிடம் பாரப்படுத்தப்படும். இந்த அறிக்கை மீதான விவாதம் அடுத்த மாதம் முதல் வாரத்தில் நடைபெற்று, புதிய அரசமைப்பை வரையும் பணி நவம்பரில் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.
பல தரப்புக்களாலும் எதிர்பார்க்கப்படும், வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை நீண்ட இழுபறியின் பின்னர், அரசமைப்பு நிர்ணயசபையாகக் கூடவுள்ள நாடாளுமன்றில் இன்று காலை முன்வைக்கப்படும். தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவே அதனை முன்வைப்பார். வழிநடத்தல் >> 25

சிறையிலடைக்கப்பட்டு 14 நாள்களில்


## லலித், அனுஷ இருவரும் பிணையில் வெளிவந்தனர்

கொழும்பு, செப். 21
3 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து தீர்பளிக்கப்பட்ட, முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் செயலர் லலித் வீரதுங்கவுக்கும், தொலைத்தொடர்புகள் ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் அனுஷ பெல்பிட்டவுக்கும் கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்றுப் பிணை வழங்கியது.
"தலா ஒரு லட்சம் ரூபா காசுப் பிணையிலும் தலா 1 மில்லியன் ரூபா பெறுமதியான மூன்று ஆள்ப் பிணைகளிலும் விடுவிக்கப்படுகின்றனர். ஆள் பிணையாளர்களில் இருவர் அரச அதிகாரிகளாக இருக்க வேண்டும். ஒருவர் உறவினராக இருக்க வேண்டும். அரச அதிகாரிகள் இருவரும் நீதிமன்ற எல்லைக்குள் வசிப்பவர்களாக இருக்க வேண்டும். பிணையில் விடுவிக்கப்படும் இருவருக்கும் வெளிநாட்டுப் பயணத்துக்கு தடைவிதிக்கப்படுகிறது. அதனால் இருவரும் தமது கடவுச் சீட்டை நீதிமன்றில் ஒப்படைவேண்டும்" என்ற நிபந்தனைகளுடன் மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க கட்டளை வழங்கினார்.
பிணை நிபந்தனைகளை நிறைவு செய்ததன் அடிப்படையில் லலித் வீரதுங்கவும், அனுஷ பெல்பிட்டவும் சிறைச்சாலையிலிருந்து 14 நாள்களின் பின்னர் நேற்று மாலை 4 மணியளவில் வீடு நோக்கிச் சென்றனர்.
தொலைத்தொடர்பு ஆணைக் குழுவுக்கு சொந்த >> 23

## 20 குறித்த விளக்கத்துக்கு உயர் நீதிமன்றத்திடம் விவரம் கோரவேண்டும்

சுமந்திரன் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, செப். 21
"20ஆவது திருத்தச் சட்டவரைவின் சரத்துக்கள் அரசமைப்புக்கு முரணானவை என்று உயர் நீதிமன்றம் தமது வியாக்கியானத்தை வெளியிட்டிருந்த போதிலும், அந்தத் தீர்மானத்தில் உரிய காரணங்கள் எதுவும் வழங்கப்பட்டிருக்காமையால் அது தொடர்பில் >> 25



ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக சென்றிருந்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அரச தலைவர் டொனால்ட் ட்ரம்புடன் பேச்சு நடத்தினார். இதன் போது இரு நாடுகளுக்குமிடையிலான அரசியல், பொருளாதார ரீதியிலான உறவுகள் தொடர்பில் பேசப்பட்டன. (வ-5)

# கணக்காய்வாளர் அதிபதிக்கு மட்டுமே பதிலளிக்க முடியும்

## அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல உறுதி

கொழும்பு, செப். 21

"கண்டி அதிவேக பாதையின் மூன்றாம் கட்டம் குறித்து எழுந்துள்ள ஐயங்களுக்கு கணக்காய்வாளர் அதிபதியைத் தவிர வேறு எவருக்கும் விளக்கமளிக்க வேண்டியதில்லை.

கணக்காய்வாளர் அதிபதிக்கு பதிலளிப்பதற்கு நான் எந்நேரமும் தயாராக உள்ளேன்" என்று உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்ற கட்டடத் தொடரில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"கண்டி அதிவேகப்பாதை அமைப்பதன் ஊடாக ஐந்து மாவட்டங்களுக்கு நன்மை கிடைக்கும். கண்டி, குருநாகல், கம்பஹா, கேகாலை மற்றும் மாத்தளை மாவட்ட பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும் ஒத்துழைப்பாக இருக்கும்.

மேலும் தலதா மாளிகையை தரிக்கச் செல்வோருக்கும் வசதியாக இருக்கும். நான் மகாநாயக்க தேர்களைச் சந்திக்கும்போது கண்டி அதிவேக பாதை தொடர்பில் எந்நேரமும் விசாரிப்பர். ஆனால் தற்போது இந்த அதிவேக பாதை அமைப்புப்பணிகளை தடுத்து நிறுத்த ஒருசிலர் சதி செய்சின்றனர். தனக்குச் சாதகமான நிறுவனமொன்றுக்கு விலைமனுகோரலை வழங்கத் திட்டமிடுகின்றனர்.

ஜப்பான் நாட்டின் வேண்டுகோளின் பிரகாரமே புஜிட்டோஇடய்சே நிறுவனத்துக்கு வழங்குமாறு கோரப்பட்டது. இதன்பிரகாரம் நாம் நடவடிக்கை எடுத்தோம். ஏனெனில் ஜப்பான் அரசுதான் கண்டி அதிவேக பாதையின் மூன்றாம் கட்டமான பொத்துஹர கலகெதர வரையான பணிகளுக்குக் கடன் வழங்கியது.

இதன்பின்னர் கலகெதர தொடக்கம் கண்டி வரை இந்தியா இணக்கம் தெரிவிக்கின்றது" என்றும் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார். (வ 31)



# காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான சட்ட வரைவை நிறைவேற்ற எதிர்ப்பு!

## நாடாளுமன்ற வளாகத்தில் கொடும்பாவி எரித்து அரசுக்கு அழுத்தம்

கொழும்பு,செப்.21

பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுதலைக் குற்றமாக அறிவிக்கும் பன்னாட்டுப் பிரகடனச் சட்ட வரைவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் ஒன்றிணைந்து நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதனால் அந்தப் பகுதியில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டது.

"பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுதலைக் குற்றமாக அறிவிக்கும் பன்னாட்டுப் பிரகடனச் சட்ட வரைவு இறந்த காலத்தைப் பாதிக்காது, மாறாக எதிர்காலத்துக்கே தாக்கம் செலுத்தும் என்று அரசு கூறினாலும் அது பொய்யான விடயம் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது. இதனால் இராணுவ வீரர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும். இந்தச் சட்ட வரைவை முழுமையாக கைவிட வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்" என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட இந்த ஆர்ப்பாட்டத்தால், நாடாளுமன்ற வீதி பல மணி நேரம் பூட்டப்பட்டது. மூன்றடுக்குப் பாதுகாப்பு வேலிகளும் இடப்பட்டிருந்தன.



தண்ணீர்தாரை வாகனங்களும் தயார்படுத்த நிலையில் இருந்தன. ஆர்ப்பாட்டத்தின் போது பெரும் குழப்பம் ஏற்படாத காரணத்தால், அவற்றின் செயற்பாட்டுக்கான அவசியம் இல்லாமல் போனது.

நாடாளுமன்றப் பாதுகாப்பு வேலியின் முன்பாகக் கொடும்பாவிகளை எரித்து, அங்கு நின்று கடும் எதிர்ப்புக் கோசங்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் எழுப்பினர். அதனால் பத்தரமுல்லை நகரின் போக்குவரத்துச் செயற்பாடுகளும் பல மணிநேரம் முடங்கிப் போனது.

பிற்பகல் ஒரு மணியளவில் ஆர்ப்பாட்டக்காரர்கள் தாமாகக் கலைந்து சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்தினரைப் பாதுகாப்பதற்கான தேசிய இயக்கம், தேசிய சுதந்திர முன்னணி, தேசிய ஒருங்கிணைப்பு ஒன்றியம், உலக இலங்கையர்கள் பேரவை ஆகிய அமைப்புகள் ஒன்றிணைந்து, ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தலைமையில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதேவேளை, பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுதலைக் குற்றமாக அறிவிக்கும் பன்னாட்டுப் பிரகடனச் சட்ட வரைவு நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு நேற்று எடுத்துக்கொள்ளப்படவிருந்தது. எனினும் எதிர்ப்புகள் வலுத்ததால் அது கைவிடப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# பொலிஸாரைக் கண்டதும் காதலன் தப்பியோட்டம்

வடமராட்சி,செப்.21

பொலிஸாரைக் கண்டதும் காதலியைக் கைவிட்டு தப்பியோடியுள்ளார் காதலன். இந்தச் சம்பவம் பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் நேற்றுக் காலை நடந்தது.

தமது மகளைக் காணவில்லை என்று பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினமிரவு பெற்றோர் முறைப்பாடு செய்தனர். 14 வயதுடைய சிறுமி 19 வயதுடைய இளைஞர் ஒருவரைக் காதலித்தார் என்றும், அவர்கள் இருவரும் கற்கோவளம் பகுதியில் தங்கியுள்ளனர் என்று பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

அதனையடுத்து அந்தப் பகுதிக்குப் பொலிஸார் சென்றனர். வீடொன்றில் தங்கியிருந்த இளைஞன், பொலிஸாரைக் கண்டதும் சிறுமியைக் கைவிட்டுத் தப்பியோடியுள்ளார். பொலிஸார் சிறுமியைப் பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்றனர். அதன் பின்னர் இளைஞர் தனது பெற்றோருடன் பொலிஸ் நிலையத்தில் தஞ்சமடைந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-ரி2, 26)



# போதைப் பொருள் விழிப்புணர்வு ஊர்வலம்

யாழ்ப்பாணம்,செப்.21

போதைப் பொருள்களைத் தடுக்கும் வகையிலான விழிப்புணர்வு ஊர்வலம் உடுப்பிட்டியில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

உடுப்பிட்டி அமெரிக்க மிசன் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர் இணைந்து இந்த ஊர்வலத்தை நடத்தினர்.

பாடசாலை முன்பாக ஆரம்பமான ஊர்வலம் சுமார் 300 மீற்றர் தூரம் சென்று மீண்டும் பாடசாலையை அடைந்தது.

"மது போதையற்ற சமூகத்தை உருவாக்குவோம், போதை என்றும் போதைப் பொருளுக்கு அடிமையாகாது இருப்போம், போராடுவோம் போரா்டுவோம் போதைக்கு எதிராகப் போராடுவோம், நாட்டைக் கட்டியெழுப்பி போதைப் பொருள்களை ஒழித்து, வாழ்வின் எழுச்சியைப் பெறச் செய்வோம், புகை நமக்குப் பகை, போதைப் பொருள் பாவணையை இல்லாதொழிப்போம், போதையிலிருந்து விடுதலை பெறுவோம் ஆரோக்கியமாக வாழ்வோம்" போன்ற வாசகங்கள் அடங்கிய பாதாகைகளை மாணவர்கள் தாங்கியிருந்தனர். (ஐ-26)

# ஏறாவூர் இரட்டைப் படுகொலை: ஐவருக்கு விளக்கமறியல் நீடிப்பு

மட்டக்களப்பு,செப்.21

ஏறாவூரில் இடம்பெற்ற இரட்டைப்படுகொலையுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் ஐவருக்கும் மீண்டும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் ஏறாவூர் சுற்றுலா நீதிமன் றத்தில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களை எதிர்வரும் நான்காம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

ஏறாவூர் நகர் பிரதேசத்தில் முகாந்திரம் வீதி முதலாவது குறுக்கு ஒழுங்கையிலுள்ள வீட்டில் வசித்து வந்த தாயார் நூர்முஹம்மது உஸைரா (வயது 56) மற்றும் அவரது திருமணமாகிய மகளான ஜெனீராபானு மாஹிர் (வயது 32) ஆகியோர் கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக 6 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் தொடர்ச்சியாக விளக்கமறியல் வைக்கப்பட்டுள்ளனர். தமக்குப் பிணை வழங்குமாறு கோரி, சந்தேகநபர்களில் இருவரால் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை கடந்த 12 ஆம் திகதி நடத்தப்பட்டது. அதில் இருவருக்கும் பிணை அனுமதி வழங்கப்பட்டது.

கடந்த 14 ஆம் திகதி ஒருவர் பிணை நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து வெளியே சென்றார். பிணை வழங்கப்பட்ட மற்றைய சந்தேகநபர், பிணைத் தொகையான இரண்டரை இலட்சம் ரூபா பணத்தைச் செலுத்தத் தவறியதனாலும், முகவரி குறிப்பிடப்பட்டதில் வேறுபாடு காணப்பட்டதாலும் விடுவிக்கப்படாது தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதில் ஐந்து சந்தேகநபர்களுக்கு விளக்க மறியல் நீடிக்கப்பட்டுள்ளது. (ஐ)



வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் சுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் கொடியேற்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு இடம்பெற்றது. அதில் அதிகளவான பத்தர்கள் கலந்து கொண்டனர். எதிர்வரும் 4ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் கடல் நீராட்டுத் திருவிழாவும் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



## சட்ட விரோதமரத்துடன் சென்ற வாகனம் தடம் புரண்டு விபத்து

வவுனியா, செப்.21

சட்ட விரோதமாக மரம் ஏற்றிச் சென்ற வாகனம் தடம் புரண்டு விபத்துக்குள்ளானது. வாகனத்தின் சாரதி அங்கிருந்துதப்பிச்சென்றுள்ளார்என்றுதெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தாண்டிக்குளம், கொக்குவெளிப் பகுதியிலுள்ள இரணுவ முகாமுக்கு முன்னாலுள்ள தொடருந்துக் கடவைக்கு அருகில் நேற்று அதிகாலை நடந்தது.

35 க்கும் மேற்பட்ட முதுரை மரக்குற்றிகளைச் சட்ட விரோதமாக ஏற்றிச் சென்ற வாகனம், தொடருந்துக் கடவைக்கு அருகில் தடம் புரண்டு விபத்துக்குள்ளானது.

சம்பவத்தை அறிந்த பொலிஸார், வன இலகா திணைக்கள அதிகாரிகள் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். (ஐ)

# பொது வாக்கெடுப்பு நடத்தியே புதிய அரசமைப்பை அரசு நிறைவேற்றவேண்டும்

## சிவில் அமைப்புக்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு.செப்.21



யார் என்ன கூறினாலும், பொது வாக்கெடுப்பை நடத்தி, புதிய அரசமைப்பை அரசு நிறைவேற்றவேண்டும். அதன் மூலம் அதிகாரத்தைப் பரவலாக்கி நாட்டில் நல்லிணக்கத்தை அரசு ஏற்படுத்த வேண்டும்.

இவ்வாறு நவ சமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

அரசமைப்பு 20ஆவது திருத்தச் சட்ட வரைவைப் பொது வாக்கெடுப்பின் ஊடாக நிறைவேற்றுமாறு வலியுறுத்தி, சிவில் அமைப்புக்களைச் சேர்ந்த சிலர் கொழும்பில் நேற்றுக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கொழும்பு மாநகர சபைக்கு முன்பாக நேற்றுக் காலை இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

"புதிய அரசமைப்பை நிறைவேற்றி சமத்துவத்தை உறுதிப்படுத்துவோம், அதிகாரத்தைப் பரவலாக்கி நல்லிணக்கத்தை ஏற்படுத்துவோம், ஊழல் மோசடியளார்களைக் காப்பாற்ற வேண்டாம், நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறையை நீக்கம் செய்க" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

"புதிய அரசமைப்பில் நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறையை நீக்கம் செய்து, ஜனநாயக அதிகாரங்கள் நாடாளு மன்றத்துக்கு வழங்குதல் மற்றும் அதிகாரத்தைப் பரவலாக்கல், காணி, பொலிஸ் உரிமையுடன் மாகாண சபைகளை உருவாக்கல், தேர்தல் முறையை மாற்றுதல் போன்ற ஜனநாயகவாத யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதற்குப் பலர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு வழங்குகின்ற நிலையில், சுதந்திரக் கட்சியிலுள்ள சிலர் எதிர்க்கின்றனர். நிறைவேற்று அதிகார முறையை நீக்குவதை எதிர்க்கின்றனர். மகிந்த ராஜபக்சவின் குழுவும் அதிகாரப் பரவலை எதிர்க்கின்றனர். இதற்கெதிராக குரல் கொடுப்பதோடு மற்றும் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் அரசமைப்பை முன் வைத்து பொது வாக்கெடுப்புக்கு விட்டு நிறைவேற்றும்படி வலியுறுத்துகின்றோம்" என்று நவ சமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

ஆர்ப்பாட்டத்தில் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான தேசிய இயக்கத்தின் இணைப்பாளர் சுந்தரம் மகேந்திரன், புரவெசி பலய அமைப்பின் இணை ஏற்பாட்டாளர் காமினி வியங்கொட, சர்வ மதத் தலைவர்கள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

சமத்துவத்துக்கான பிரஜைகளின் நடவடிக்கைக் குழு இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்தது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## பட்டப்பகலில் பெண்ணின் சங்கிலி அறுப்பு

வவுனியா.செப்.21

கடையில் பொருள்களை வாங்கிக் கொண்டு, வீடு திரும்பிக் கொண்டிருந்த பெண்ணின் தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு, இருவர் தப்பிச் சென்றனர்.

இந்தச் சம்பவம் வவுனியா கோவில் குளத்தில் நேற்று மதியம் நடந்தது.

வவுனியா கோவில்க்ளம் தபால்பெட்டிச் சந்திக்கு அருகில் உள்ள கடையில் பொருள்களைக் கொள்வனவு செய்துவிட்டு, உமாமகேஸ்வரன் வீதியினூடாக அவர் நட்ந்து சென்று கொண்டிருந்தார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அவரைக் கீழே தள்ளிவிட்டு, அவரின் கழுத்தில் இருந்த ஒரு பவுண் தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பிச் சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

அவர்கள் முகத்தை மூடித் தலைக்கவசத்தை அணிந்திருந்ததாகவும், சிவப்பு நிற ஆடைகளை அணிந்திருந்ததாகவும் பாதிக்கப்பட்ட பெண் பொலிஸாரிடம் தெரிவித்தார்.

அந்தப் பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களின் சீ.சீ.ரி.வி கமராத் தரவுகளை சேகரித்து, குற்றவாளிகளை அடையாளம் காண்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)




## போசாக்கு மாதத்தை முன்னிட்டு முள்ளியவளையில் ஊர்வலம்

முல்லைத்தீவு.செப்.21

போசாக்கு மாதத்தை முன்னிட்டு விழிப்புணர்வு ஊர்வலம் முள்ளியவளையில் நேற்று நடைபெற்றது.

முள்ளியவளை தண்ணீரூற்று புளியடிச்சந்தியில் இருந்து ஊர்வலம் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி வரை இடம்பெற்றது.

"சீனி இன்றிச் சுவைப்போம், சீனி இனிப்பூட்டப்பட்ட பானங்களைத் தவிர்ப்போம், இயற்கை உணவை உட்கொள்ள வேண்டும்" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஊர்வலத்தில் சென்றவர்கள் தாங்கியிருந்தனர்.

ஊர்வலத்தைத் தொடர்ந்து சத்துணவு தாயாரிப்புத் தொடர்பான போட்டிகளில் வெற்றிபெற்ற குடும்பப் பெண்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. ஆரோக்கியமான உணவு தொடர்பிலான கருத்துரைகளும் நிகழ்த்தப்பட்டன.

போசாக்கைக் கருத்திற் கொண்டு வேல்ட்விசன் நிறுவனத்தால் முள்ளியவளையில் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ஐ)



## முதியோர் விழிப்புணர்வு செயற்றிட்டம் வவுனியாவில்

வவுனியா.செப்.21

வவுனியா கிறிஸ்தவ திருச்சபை தமிழ் கலவன் பாடசாலையில், முதியோர் விழிப்புணர்வுச் செயற்றிட்டம் நேற்று நடைபெற்றது.

அதில். 'பெரியாரைப் பேணித்தமராகக்கொளல்' என்ற தலைப்பில் மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் செ.ஸ்ரீநிவாசன் சிறப்புரை நிகழ்த்தினார் . வி.மாசிலாமணி பாடல்பாடி மாணவர்களை மகிழ்வித்தார் .

பாடசாலையின் அதிபர் பஸ்தியாம்பிள்ளை தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

அதில் பிரதி அதிபர் பிரதாபன், பூந்தோட்டம் முதியோர் சங்க உறுப்பினர்கள் ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்துகொண்டனர்.

வவுனியா மாவட்டச் சமூகசேவை அலுவலகம் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்தது. (ஐ)

## வருடாந்த திருவிழா .ஆரம்பம்

கொழும்புத்துறை,செப்.20

யாழ்.போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள தூய ஆரோக்கிய அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா கொடியேற்றத்துடன் நேற்று ஆரம்பமானது.

எதிர்வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நற்கருணைப் பெருவிழாவும், மறுநாள் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு யாழ். ஆயர் மேதகு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் திருவிழாத் திருப்பலியும், அன்னையின் ஆசீரும் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-135)

# 9 மாகாண சபைகளுக்கும் 2 கட்டங்களாகத் தேர்தல்

## ஜே.வி.பியின் யோசனை இது

கொழும்பு, செப். 21

அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தலை இரண்டு கட்டங்களாக நடத்தி முடிக்குமாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் எதிர்க்கட்சியின் தலைமைக் கொறடாவுமான அநுர குமார திஸாநாக்க சபையில் வலியுறுத்தினார்.

மேலும் மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தலை மார்ச் மாதத்துக்குள் நடத்தவேண்டும். அதற்குமாறாக எல்லைநிர்ணயக்காரணங்களைக் காட்டி தேர்தலை தாமதப்படுத்த முனையக் கூடாது என்றும் அவர் கோரினார்.

நாடாளுமன்றில் நேற்று புதன்கிழமை மாகாண சபைத்தேர்தல்திருத்தச்சட்டவரைவு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னைய ஆட்சிக் காலத்தின்போது ஊவா மாகாணத்துக்கு வேறாகவும் மத்திய, வட மேல் மாகாணத்தை வேறாகவும் மேல், தென் ஆகிய மாகாணங்கள்ள வேறாகவும் தேர்தல் நடத்தப்பட்டது. இதன்காரணமாக முழு அரச உடைமைகளும் பயன்படுத்தப்பட்டன. அரச ஊடகம் தேர்தல் பரப்புரைகளுக்கு பயன்படுத்தப்பட்டது. இதன்போது அரசு முழு கவனத்தைச் செலுத்தி பல இலட்ச கணக்கில் செலவிட்டது.

இந்த நிலையில் அனைத்து மாகாண சபைகளுக்கான தேர்தலையும் ஒரே தினத்தில் நடத்துவதற்கான வாய்ப்பு தவறவிடப்பட்டுள்ளது. அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டவரைவு தொடர்பில் உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானம் மூலம் ஒரே தினத்தில் தேர்தலை நடத்துவது குறித்து எந்த எதிர்ப்பும் வெளியிடவில்லை. ஆகையால் எதிர்வரும் காலங்களில் இதுகுறித்து அவதானம் செலுத்தவேண்டும்.

இல்லையேல் அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தலை இரண்டு கட்டங்களாக நடத்தி முடிக்கவேண்டும். இதன்படி இந்த மாதம் காலம் நிறைவடையவுள்ள மூன்று மாகாணங்களுக்கான தேர்தலை மார்ச் மாதத்துக்குள் நடத்தவேண்டும். அதற்கு மாறாக எல்லை நிர்ணய காரணங்களை காட்டி தாமதம் செய்ய முனைய கூடாது என்றார். (வ - 31)

## திருமுருகன்காந்தி உள்ளிட்ட நால்வரும் நேற்று விடுவிப்பு

சென்னை, செப். 21

மே 17 இயக்கத்தைச் சேர்ந்த திருமுருகன்காந்தி உள்ளிட்ட நான்கு பேர் மீதான குண்டர் தடுப்புச் சட்ட நடவடிக்கையை சென்னை மேல் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் நீக்கம் செய்து உத்தரவிட்டது.

அதனையடுத்து நேற்றுப்புதன்கிழமை அவர்கள் நால்வரும் புழல் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டனர்.

திருமுருகன், இளமாறன், அருண் மற்றும் டைசன் ஆகியோர் கடந்த மே 21ஆம் திகதி, சென்னை மெரினா கடற்கரையில் மெழுவர்த்தி ஏற்றி ஈழத் தமிழர்களுக்கு அஞ்சலி செலுத்த சென்ற சமயத்தில் கைது செய்யப்பட்டு குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் அடைக்கப்பட்டனர். (வ)

## குடும்பத்தலைவர் கொலை இருவர் விளக்கமறியலில்

### மற்றொருவர் நேற்றுச் சரண்

யாழ்ப்பாணம் செப் 21

யாழ்ப்பாணம் நாவலர் வீதியைச் சேர்ந்த குடும்பத்தலைவரை கடத்திச் சென்று கொலை செய்தனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இருவரையும் எதிர்வரும் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் மன்றம் உத்தரவிட்டது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் தந்தையும் மகனும் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர். அவர்களே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கைது செய்யப்பட்டவர்களின் உறவினர் ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நேற்றுச் சரணடைந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். அவரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர்கள் கூறினர். (வ-8)

### உலக அமைதி தினம் இன்று

உலகஅமைதிதினம்செப்ரெம்பர்21ஆம்திகதி இன்று கடைப்பிடிக்கப்படுகிறது. எனினும் அச்சுத் தவறு காரணமாக உதயனின் இன்றைய ஆசிரியர் தலையங்கத்தில் ஒக்டோபர் 21 என்று வெளிவந்துவிட்டது.

## மாகாணத் தேர்தல் திருத்தத்தால் சிறுபான்மைக் கட்சிகள் அச்சம்

### அரசிடம் அவசரக் கோரிக்கை முன்வைப்பு

கொழும்பு, செப். 21

"மாகாண சபைகள் தேர்தல் திருத்தச் சட்டவரைவில் அவசர அவசரமாக மேலும்சில திருத்தங்களை மேற்கொண்டு சிறுபான்மை மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுவிடும் என்ற நியாயமான அச்சத்தின் ஏற்பட்டுள்ளது. மாகாண சபைத் தேர்தலில் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தை 50 சதவீதமாக மாற்றுமாறும் எல்லை நிர்ணய அறிக்கையில் சிறுபான்மை மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியைப் போக்கித் தருமாறும் சிறுபான்மைக் கட்சிகள் இணைந்து உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளன"

இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரசின் தவிசாளரும் பிரதியமைச்சருமான அமீர் அலி தெரிவித்தார்.

நாடாளுமன்றக் கட்டடத்தொடரில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாண சபைகள் தேர்தல் திருத்தச் சட்டவரைவில் அவசர அவசரமாக மேலும்சில திருத்தங்களை மேற்கொண்டு சிறுபான்மை மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுவிடும் என்ற நியாயமான அச்சத்தின் காரணமாகவே சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், மலையக முற்போக்கு முன்னணி ஆகியன இணைந்து சிறுபான்மை மக்களின் பிரதிநிதித்துவத்தைப் பாதுகாக்கும் வகையிலான கோரிக்கையொன்றை உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபாவிடம் கையளித்துள்ளன. எமது நியாயமான கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென நாங்கள் அரசிடமும் கேட்டுள்ளோம்.

நாட்டில் பொதுவாக மாற்றம் வரவேண்டும் என்பதில் எமது கட்சிக்கு எந்தமுரண்பாடும் கிடையாது. ஆனால் தேர்தல் திருத்தச் சட்டவரைவுகள் சிறுபான்மை மக்களின் பிரதிநிதித்துவத்தை குறைக்குமளவுக்கு இடம்பெறுமானால் அவற்றுக்கு நாங்கள் இடமளிக்க முடியாது. உள்ளூராட்சி தேர்தல் திருத்தச் சட்டத்தில் எமக்கு ஏற்பட்ட படிப்பினைகளும் ஏற்கனவே இதனால் இழந்த துர்ப்பாக்கிய நிலமைகளும் எமது கட்சிக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இடம்பெற்ற வாதப்பிரதிவாதங்கள் எமக்கு அச்சத்தையும் கவலையையும் ஏற்படுத்தி இருக்கின்றன.

பெண்களின் பிரதிநிதித்துவத்தை 30 சதவீதமாக அதிகரிக்கும் சட்டவரைவுக்கு நாங்கள் எதிர்ப்பில்லாத போதும் அவசர அவசரமாக இந்தச் சட்டவரைவில் திருத்தங்களைக் கொண்டுவந்து குழுநிலையில் அதனை விவாதித்து இதனை உடனடியாக நிறைவேற்ற முனைவதே எமக்கு மேலும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

மாகாண சபைத் தேர்தலில் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தை 50 சதவீதமாக மாற்றுமாறு எல்லை நிர்ணய அறிக்கையில் எமக்கு இழைக்கப்பட்ட அநீதியைப் போக்கித் தருமாறும் நாங்கள் கோரிக்கை விடுத்துள்ளோம். எமது கோரிக்கைகள் சட்டத்துக்கு முரணாக இருக்கின்றது என்று எவரும் கருதக்கூடாது. இந்தக் கோரிக்கைகள் சிறுபான்மை சமூகத்தைச் சார்ந்த விடயமாக இருப்பதால் அந்த மக்களின் குரலை நசுக்கக்கூடாதென யார் யார் விரும்புகின்றார்களோ? அவர்கள் எமக்கு இந்த விடயத்தில் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார். (வ-31)

## அர்ஜுன் மகேந்திரனை இன்று ஆணைக்குழுவுக்கு அழைப்பு

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனின் அலைபேசிகளில் முக்கியமான தகவல்கள் எதுவும் இல்லை என்பது தெரியவந்துள்ள நிலையில், அது தொடர்பில் இன்று நண்பகல் 12 மணிக்குள் விளக்கமளிக்குமாறு பிணை முறி மோசடி தொடர்பில் விசாரணை செய்யும் அரசு தலைவர் ஆணைக் குழு பணித்துள்ளது. ஆணைக்குழுவின் நேற்றைய நடவடிக்கைகள் நிறைவடையும்போது, சட்ட மா அதிபர் திணைக்களத்தின் மூத்த பிரதி மன்றாடியார் அதிபதி யசந்த கோதாகொட முன்வைத்த விடயங்களை ஆராய்ந்தே ஆணைக்குழு இந்த பணிப்புரையை விடுத்தது. (வ-31)

## வடக்கு சுகாதார அமைச்சரின் இணைப்பு அலுவலகம் திறப்பு

மன்னார்,செப்.21

வடமாகாண சுகாதார அமைச்சரின் இணைப்பு அலுவலகம் மன்னாரில் நேற்றுத் திறக்கப்பட்டது.

மன்னார் பள்ளிமுனை முதன்மை வீதியில் அமைக்கப்பட்ட அலுவலகம், சர்வமத தலைவர்களின் ஆசியுடன் திறக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் கலாநிதி ஜீ.குணசீலன், அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் சி.ஏ.சந்திரையா, தமிழீழ விடுதலை இயக்கம் டெலோ மாவட்ட அமைப்பாளர் இராஜேந்திரம் பற்றிக், ரெலோ மூத்த உறுப்பினர் கணேசலிங்கம் சொக்கன், ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் மாவட்டப் பொறுப்பாளர் எஸ்.ஆர். குமரேஸ் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ஐ-56)




## பிரம்ம குமாரிகள் தியான மண்டபம் வவுனியாவில் திறப்பு





வவுனியா,செப்.21

பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தின் தியான மண்டபம் வவுனியா கற்குழியில் நேற்றுக் காலை திறக்கப்பட்டது. வரவேற்பு நடனத்தைத் தொடர்ந்து, ஆசியாவுக்கான பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தின் முதன்மை இயக்குநர் மருத்துவக் கலாநிதி நிர்மலா கஜாரியா, உத்தியோக பூர்வமாக மண்டபத்தைத் திறந்தார்.

அதனைத் தொடர்ந்து மண்டபத்தின் நினைவுப் பெயர்ப்பலகையையும் திரை நீக்கம் செய்தார். இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட விவசாயப் பணிப்பாளர், மாவட்டக் கலாச்சார உத்தியோகத்தர், இலங்கைக்கான பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தின் பொறுப்பாளர் கணேஷ், யாழ்ப்பாணம், வவுனியா நிலையங்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். மன ஆற்றுப்படுத்தும் தியானங்கள் இந்த மண்டபத்தில் தினமும் காலை, மாலை நேரங்களில் இலவசமாக நடத்தப்படும். இன மத சமய கலாச்சார வேறுபாடின்றி தியான நடவடிக்கைகளில் அனைவரும் ஈடுபடலாம் என்று நிலையத்தின் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார். (ஐ)

## தென்மராட்சி கரையோரங்களில் நாளை துப்புரவுப்பணி

தென்மராட்சி, செப். 21
கரையோரப் பாதுகாப்பு தினத்தையொட்டி தென்மராட்சி கரையோரப் பகுதிகளில் நாளை வெள்ளிக்கிழமை துப்பரவுப் பணிகள் இடம்பெறவுள்ளன என பிரதேச செயலர் திருமதி தே.பாபு அறிவித்துள்ளார்.
பிரதேச மக்களின் பங்களிப்புடன் நாவற்குழி, கைதடி, நாவற்குழி கோவிலாக்கண்டி, மறவன்புலோ, தனன்களப்பு, கச்சாய் மற்றும் கெற்பேலி ஆகிய பகுதிகளில் துப்பர வுப் பணிகள் இடம்பெறும்.
பொதுமக்களுடன் சாவகச்சேரி பிரதேச சபையினர், பிரதேச செயலக அலுவலர்கள், சமுர்த்தி வங்கியினர் மற்றும்பொது அமைப்புகளின்பிரதிநிதிகள் கலந்துகொள்வர் எனவும் அவர் தெரிவித்தார். இந்த வேலைத் திட்டம் வேள்ட் விசன் லங்கா நிறுவ னத்தினரின் றிவோஸ் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ய-9)

# யாழ். - பருத்தித்துறை சாலையில் வடிகாலமைப்புப் பணியின்போது பாதுகாப்பு ஒழுங்குகள் இல்லை

## வடக்கு முதல்வருக்கு கடிதம்

யாழ்ப்பாணம், செப். 21
யாழ்ப்பாணம் - பருத்தித்துறை சாலையின் புத்தூர் 9 ஆம் கட்டையில் வடிகாலமைப்புப் பணிக்காக நிலம் அகழப்பட்டு வருகின்றது. எனினம், அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லாததால் நாளாந்தம் விபத்துகள் ஏற்படுகின்றன என பொதுமக்கள் தரப்பில் சுட்டிக்கா ட்டப்ப ட்டுள்ளது.
இதுதொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கோரி பிரதேச மக்களால் வடக்கு மாகாண முதல் வருக்குகடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.
அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
நிர்மாண வேலைகளுக்கான கற்கள் சாலையோரத்தில் குவிக்கப்பட்டுள்ளன. பாரிய வளைவுடைய இந்தசாலையில்வேலைகள்நடைபெறுவதற்கானஎந்தச்சமிஞையும் கிடையாது. தனியே இரண்டு கொங்கிறீட் கற்களால் முண்டு கொடுக்கப்பட்டுமஞ்சள்நிறபொலித்தீன் சுற்றப்பட்ட சிறுதடி ஒன்று மட்டுமே ஆங்காங்கே இருக்கின்றது. இது வாகனச்சாரதிகளுக்கு சற்றும் விளங்காத அறிவிப்பு ஆகும்.
நேற்று அதிகாலை பாண் ஏற்றி வந்த முச்சக்கர வண்டி வீதியில் போடப்பட்டிருந்த கல் ஒன்றில் சிக்கி குடைசாய்ந்தது. சாரதி மயிரிழையில் உயிர் தப்பினார். முச்சக்கர வண்டியின் கண்ணாடிகள் சிதறியுள்ளன. வண்டியும் பாரிய சேதத்திற்குள்ளாகியுள்ளது.
வேலை ஒப்பந்தகாரர்கள் அல்லது திணைக்களங்கள் இது பற்றி அவதானம் செலுத்தவேண்டும்.
இந்த சாலையில் தினமும் அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் பயணிக்கின்றனர்.
எனினும் யாரும் மக்களின் இந்தப் பிரச்சினையக் கண்டுகொள்ளவில்லை. இந்நிலையில் உடனடிக் கவனம் எடுத்து இதுபோன்று வேலைகள் நடைபெறும் சகல பகுதிகளிலும் ஏற்ற சமிஞைகளைக் காட்சிப்படுத்த வேண்டும்.
மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவர் என்ற வகையில் தயவுசெய்து உரிய நடவடிக்கைஎடுக்குமாறுகேட்டுக்கொள்கின்றோம் என அதில் குறிப்பி டப்பட்டுள்ளது. (ய-8)

## முறையற்ற சாரதியம்: ரூபா 7,500 தண்டம்

சாவகச்சேரி, செப். 20
மதுபோதையில்வாகனம் செலுத்திய சாரதிக்கு 7 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்த சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான், அவரது சாரதி அனுமதிப்பத்திரத்தை ஒருவருடத்துக்கு இரத்துச் செய்து தீர்ப்பளித்தார்.
இதேவேளை, காப்புறுதிப் பத்திரமின்றி லொறியைச் செலுத்திய சாரதிக்கு 17 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார்
சாவகச்சேரிபொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை விசாரித்த நீதிவான்நேற்றுஇவ்வாறு தீர்ப்பளித்தார். (ய-9)

## கசிப்பு வைத்திருந்த இருவருக்குத் தண்டம்

சாவகச்சேரி, செப். 20
180மில்லிலீற்றர்கசிப்புடன்கைதான மட்டுவில்வாசிகள் இருவருக்குதலா10 ஆயிரம்ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் 80 மணித்தியாலயம் சமூகப்பணியில் ஈடுபடுத்துமாறும் சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார்.
சாவகச்சேரி பொலிஸார் மட்டுவில் பகுதியில் திடீர் சோதனைகளை மேற்கொண்டனர். அப்போது இருவரிடம்கசிப்புஇருந்தமைகண்டுபிடிக்கப்பட்டது. அவர்களைக் கைதுசெய்து நீதிமன்றில் முற்படுத்தினர்.
நேற்று இந்த வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. இருவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டனர். நீதி வான் இருவருக்கும் மேற்ப தண்டத்தை விதித்து தீர்ப்பளித்தார். (ய-9)

# வலி. வடக்கு கிழக்கின் எல்லைகள் வர்த்தமானிக்கு அமைய வகுக்கப்படும்

## நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் உறுதி

அச்சுவேலி, செப். 21
வலிகாமம்கிழக்கு மற்றும் வடக்கு பிரதேசங்களில் நிலவும் எல்லைமுரண்பாடுகள் தொடர்பில் மாவட்டச் செயலாளருடன் கலந்துரையாடி உரிய தீர்வு காணப்படும் என பிரதேச ஒருங்கிணைப்பு இணைத்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் தெரிவித்தார். வலி. கிழக்குப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.
எல்லை நிர்ணய விவகாரம் தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
வலி. கிழக்கு மேற்கு எல்லையும், வலி. வடக்கு கிழக்கு எல்லையையும் ஒட்டியதாக வளலாய் பலாலிப் பகுதியில் எல்லை நிர்ணயம்தொடர்பாகபிரச்சினைஏற்பட்டிருக்கிறது.
பிரச்சினையைமாவட்டச்செயலரின்நேரடிக் கவனத்துக்கு கொண்டுவந்து நில அளவைப் படங்கள்மற்றும்வர்த்தமானிபொது அறிவித்தலுக்கு அமைய உரிய முறையில் எல்லைகளை வகுப்தற்கு ஏற்பாடு செய்யப்படும்.
இந்தவிடயத்தில் எவரும் குழப்பமடையத் தேவையில்லைஎனநாடாளுமன்றஉறுப்பினர் சித்தார்த்தன் குறிப்பிட்டார்.
வலி. கிழக்குப் பகுதிக்கு உள்ளே அத்துமீறி வலி. வடக்கின் கிழக்கு எல்லை வகுக்கப்பட்டுள்ளது. இதனால் வளலாய்க் கிராமத்தில் உள்ளபொதுமக்களின்காணிகள்பல இல்லாமல் போய்விட்டன. இந்த விடயத்தில் அதிகாரிகள் நிலைப்படியும், நில அளவைப் படங்களின் படியும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. வளலாய்ப் பகுதி பொதுமக்கள் பாதிப்புக்குள்ளாகி உள்ளனர் என வளலாய் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் எஸ். தங்கராசா தெரிவித்தார். இணைத்தலைவர் தலையிட்டு இதுதொடர்பில் உரிய நடவடிக்கைஎடுக்கவேண்டும்என்றும்அவர் கோரிக்கை விடுத்தார். அவரது கோரிக்கையைஏற்றுக்கொண்டஇணைத்தலைவர் சித்தார்த்தன், மாவட்டச் செயலருடன் தான் நேரில் சந்தித்து உரையாடி உரிய நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார். (ய-11)




# அக்கரை சுற்றுலா மையத்துக்கு எதிராக பொதுமக்கள் போராட்டம்

கரணவாய், செப். 21
தொண்டைமனாறு அக்கரை உல்லாசக் கடற்கரையை சிறுவர்பூங்காவாக மாற்றுமாறி கோரி அப்பகுதி மக்கள் நேற்றுமுதல் தொடர் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.
குறித்த கடற்கரையை சுற்றுலாத்துறை மையமாக மாற்றியமைப்பதற்கு வலிகாமம் பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது. அதற்கான ஆரம்பகட்ட வேலைகள் இடம்பெற்று வருகின்றன. சுற்றுலா மையத்துக்கான கட்டடம் அமைப்பதற்கான அத்திபாரம் இடப்பட்டு நேற்று அடிக்கல் நடுவதற்கும்ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. இந்நிலையில் அக்கரைப் பகுதியைச் சேர்ந்த மக்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இப்பகுதியில் சுற்றுலா மையம் அமைக்கப்படுவதால் கலாசார சீரழிவுகள் மற்றும் பண்பாட்டு புரள்வுகள் ஏற்படக்கூடிய சூழ்நிலை காணப்படுகின்றது. இப்பகுதி மக்களின் எதிர்காலநன்மை கருதி சுற்றுலா அமையம் அமைப்பதனைத் நிறுத்துங்கள். சிறுவர் பூங்காவை அமைக்கவேண்டும் என மக்கள் வலியுறுத்தியுள்ளனர். தமிழனுக்கு வருமானத்தை விட தன்மானம் தான் முக்கியம், தன்மானத்தைவிற்றுப்பிழைக்கும் இந்த சுற்றுலா மையம் வேண்டாம்.
மாகாண அரசே பாரம்பரியமாக கடற்றொழில் செய்யும் எங்கள் பிரதேசத்தில் கலாசாரச் சீரழிவை ஏற்படுத்தும் சுற்றுலாத்துறைவேண்டாம் போன்றவாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை தாங்கியவாறு அவர்கள் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர். (ய-108)

# விபத்துக்களைத் தடுப்பதற்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு

சாவகச்சேரி, செப். 21
தேசிய விபத்துத் தடுப்பு வாரத்தை முன்னிட்டு, பிரதேச செயலக அலுவலர்களுக்கான "விபத்துகளைத் தடுப்போம்" எனும் தொனிப்பொருளிலான கருத்தரங்கு தென்மராட்சிப் பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.
பிரதேச செயலர் திருமதி தே.பாபு தலைமையில் கருத்தரங்கு நடைபெற்றது. அதில் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு அலுவலர்களான டபிள்யு.எம்.ஹித்ஸ்ரீ, மகேந்திரன் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர்.
நாட்டில் பல்வேறு பகுதிகளில் ஏற்படுகின்ற விபத்துக்களைக் கருத்தில் கொண்டு, அதனைத் தடுப்பதற்கு முன்னாயத்த செயற்பாடுகளும், விழிப்புணர்வு நடவடிக்கைகளும் சகல மட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



அதனடிப்படையில் விபத்துக்களைத் தடுப்பதற்கான தேசிய விபத்து தடுப்பு வாரம் கடந்த 18 ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதி வரை கடைப்பிடிக்கப்படுகிறது.
அதேவேளை விபத்துக்களைத் தடுப்பது தொடர்பாக மக்கள் வங்கியின் சாவகச்சேரி கிளையின் அனுசரணையுடன், பிரசுரிக்கப்பட்ட துண்டு அறிக்கைகள் இன்றும், நாளையும் பிரதேசத்தில் உள்ள அனைத்து முன்பள்ளிகள் மற்றும் பாடசாலைகளில் செயலக அலுவலர்களால் விநியோகிக்கப்படவுள்ளன.
நாளை பிற்பகல் 1 மணிக்கு வர்த்தகர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், பாடசாலைகளின் மாணவர்கள், பெற்றோர்க ளுக்கான விழப்புணர்வுக் கருத்தரங்கு பிரதேச செயல கத்தில் நடைபெறும். அதில் மருத்துவர் சிவகணேசன் வளவாளராகக் கலந்து கொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## தொழில்நுட்பக் கல்லூரியில் இன்றும் நாளையும் கண்காட்சி

திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத்தொழிற் பயிற்சிக் கண்காட்சி இன்றும், நாளையும் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை யாழ்ப்பாணம்தொழில்நுட்பவியல் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அமைச்சின்கீழ் உள்ளநிறுவனங்களைஇணைத்துஇதனை நடத்துகின்றன. (ய)

# தொழில் முயற்சியாளர்களை ஊக்கவிக்க வடக்கில் தேசிய மூலோபாயத்திட்டம்

## பன்னாட்டு வர்த்தக மைய ஆலோசகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 21
இலங்கை தேசிய ஏற்றுமதி மூலோபாயத் திட்டத்தின் ஊடாக வடக்கில் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்க முடியும் என்று பன்னாட்டு வர்த்தக மையத்தின் ஆலோசகர் சார்ல்ஸ் ரொபேட் தெரிவித்தார்.

இலங்கை தேசிய ஏற்றுமதி மூலோபாயத்தின் பிராந்திய ஆலோசனை கலந்துரையாடல் யாழ்ப்பாண நகர விடுதி ஒன்றில் நேற்று நடைபெற்றது. அதில் வடக்கு மாகாணத் திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் ஏற்றுமதியை அதிகரிக்கவேண்டும். அவர்களுக்கு உயர் வருமானத்தைஏற்படுத்த வேண்டும். இவற்றை இலக்காகக்கொண்டு 5 வருடங்களுக்குத் தேசிய மூலோபாயம் வடிவமைக்கப் பட்டுள்ளது.



இதன் முதன்மை நோக்கம் முன்னணி மற்றும் வளர்ந்து வரும் ஏற்றுமதித் துறைகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் விரிவுபடுத்துவதே. இவ்வாறான துறைகள் சிலவற்றின் மீது கவனம் செலுத்தப்படுவதானது, கிராமிய பொருளாதரத்தை ஊக்குவிக்கும். புதிய தொழில் வாய்ப்புகளையும் தோற்றிவிக்கும்.

இந்தச் செயற்பாடானது 2020ஆம் ஆண்டளவில் 20 பில்லியன் டொலர் ஏற்றுமதி வருமானத்தை பெற்றுக்கொள்ளும் நோக்கில் அரசால் முன்னெடுக்கப் பட்டுள்ளது.

இந்த தேசிய மூலோபாய முன்னுரிமை துறைகள் தொலைநோக்குடைய வளர்ந்துவரும் ஏற்றுமதி விரிவாக்கத்தை உறுதி செய்யும் வகையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன - என்றார். (ய-8)

# தேசிய டெங்கு ஒழிப்பு வாரம்: மந்துவிலில் 10பேருக்கு வழக்கு

தென்மராட்சி, செப்.21
சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினரின் டெங்கு பரிசோதனை நடவடிக்கையில், மந்துவில் பகுதியில் 10 பேருக்கு எதிராக வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

தேசிய டெங்குக் கட்டுப்பாட்டு வாரத்தின் முதல்நாளான நேற்று மந்துவில் பொதுச்சுகாதாரப் பரிசோதகரால் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

நடுவண் சுகாதார அமைச்சின் டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவினரின் ஏற்பாட்டில் நேற்று (20) தொடக்கம் எதிர்வரும் 26ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் டெங்குப் பரிசோதனைகள் ஆரம்பமாகின.

சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினரால் நேற்று மந்துவில் பகுதியில் பரிசோதனைகள் நடத்தப்பட்டன. இதுதொடர்பில் நேற்றுமுன்தினம் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டது. நடத்தப்பட்ட பரிசோதனையில் 961 இடங்களில் தரிசிக்கப்பட்டன. டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய வகையில் இடங்களை வைத்திருந்த 61 பேருக்கு சிவப்பு அறிவித்தல்கள் வழங்கப்பட்டது. இருவார காலத்தினுள் துப்புரவு செய்யுமாறு பணிக்கப்பட்டனர்.

மேலும் குடியிருப்புகளில் வைக்கப்பட்டிருந்த நீர்நிலைகளில் டெங்கு குடம்பிகள் காணப்பட்டன. இதற்கு எதிராகப் பத்து குடியிருப்பாளர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

பரிசோதனையில் சுகாதாரத் திணைக்களத்தினருடன் பிரதேச செயலகத்தினர், சாவகச்சேரி பிரதேச சபையினர், கொடிகாமம் பொலிஸார், படையினர், கிராமப் பிரதிநிதிகளும் சென்றனர்.

குடியிருப்புகள், பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள், அரச, தனியார் நிறுவனங்கள், தொழிற்சாலைகள், கட்டட நிர்மாணத் தளங்கள், வழிபாட்டுத் தலங்கள் போன்றவற்றில் பரிசோதனைகள் நடத்தப்பட்டன.

இன்று மட்டுவில் வடக்கு, மட்டுவில் கிழக்கு, சரசாலை தெற்கு ஆகிய பிரிவுகளில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (ய-9)

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 60 | 80 | 60 | 50 |
| கத்தரி | 120 | 120 | 140 | 120 | 120 |
| மரவள்ளி | 70 | 80 | 80 | 60 | 70 |
| பயிற்றை | 200 | 100 | 100 | 500 | 140 |
| பாகல் | 200 | 240 | 220 | 500 | 180 |
| க.கிழங்கு | 80 | 120 | 100 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 130 | 130 | 130 | 130 | 120 |
| சி.வெங்காயம் | 280 | 240 | 180 | 200 | 240 |
| பூசணி | 30 | 50 | 40 | 50 | 30 |
| தக்காளி | 200 | 200 | 160 | 160 | 180 |
| வாழைக்காய் | 100 | 120 | 100 | 80 | 80 |
| கீரை | 25 | 40 | 40 | 20 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 30 | 30 |
| ப.மிளகாய் | 200 | 200 | 300 | 320 | 160 |
| புடோல் | 70 | 90 | 80 | 80 | 80 |
| கோவா | 80 | 100 | 100 | 100 | 80 |
| வெண்டி | 80 | 60 | 50 | 80 | 40 |
| போஞ்சி | 150 | 200 | 200 | 180 | 160 |
| லீக்ஸ் | 120 | 140 | 120 | 120 | 130 |
| தேங்காய் | 70 | 80 | 70 | 90 | 80 |
| உ.கிழங்கு | 120 | 120 | 110 | 120 | 120 |
| தேசிக்காய் | 150 | 300 | 320 | 300 | 300 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 15 | 15 |
| கறிமிளகாய் | 150 | 160 | 120 | 140 | 140 |
| கரட் | 80 | 160 | 160 | 120 | 140 |
| முருங்கைக்காய் | 150 | 120 | 70 | 60 | 120 |

# சங்கிலியை அபகரித்தவரை அடையாளம் காட்டினார் பெண்

தென்மராட்சி, செப்.21
கொடிகாமம் கச்சாய் சாலையில் ஆறுமாதங்களுக்கு முன்னர் பெண்ணொருவரின் தங்கச் சங்கிலி அபகரிக்கப்பட்டது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய நபரை நேற்று நீதிமன்றில் அடையாளம் காட்டினார் சங்கிலியைப் பறிகொடுத்த பெண்.

ஆறுமாதங்களுக்கு கச்சாய் சாலையில் இரு பெண்கள் நடந்து சென்றுள்ளனர். அவ்வேளையில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் ஒரு பெண்ணின் தங்கச் சங்கிலியை அபகரித்துச் சென்றுள்ளனர். குறித்த பெண் மோட்டார் சைக்கிளின் பின் ஆசனத்தில் அமர்ந்திருந்த நபரின் முதுகுப் பார்த்துள்ளார். சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்தநிலையில் கடந்தவாரம் சங்கிலியைப் பறிகொடுத்த பெண் சாலையில் சென்றவேளையில் மோட்டார் சைக்கிளில் அமர்ந்து சென்ற ஒருவரை அவதானித்தார். அவர் சங்கிலி பறிகொடுத்த வேளையில் சென்ற நபர் என உறுதி செய்தார். மோட்டார் சைக்கிள் இலக்கத்தை எழுதி அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் கொடுத்தார்.

பொலிஸார் சந்தேகநபரைக் கைதுசெய்து நீதிவான் முன்னிலையில் முற்படுத்தியிருந்தனர். வழக்கை விசாரித்த நீதிவான் அடையாளம் காட்ட முடியுமா எனக் கேட்டதற்கு பெண் தன்னால் முடியுமென பெண் கூறியுள்ளார். இதனையடுத்து சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் அடையாள அணிவகுப்பை நடத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

அடையாள அணிவகுப்பு நேற்று நீதிமன்ற வளாகத்தில் உள்ள கட்டடத்தில் நடைபெற்றது. சம்பவ தினத்தன்று சாலையில் நடந்து சென்ற இரு பெண்களும் சாட்சிகளாக அழைக்கப்பட்டிருந்தனர். சங்கிலியைப் பறிகொடுத்தவர் மோட்டார் சைக்கிளின் பின் ஆசனத்தில் அமர்ந்திருந்த நபரை அடையாளம் காட்டினார். மற்றப் பெண் அடையாளம் காட்டவில்லை.

பின்னர் வழக்கு நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இந்த நபரை 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு ஆட்பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்தார். (ய-9)

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 1000 | 1000 |
| நண்டு | 300 | 400 | 600 | 200 |
| கணவாய் | 600 | 600 | 800 | 1000 |
| பாரை | 500 | 500 | 700 | 600 |
| சுறா | 500 | 700 | 1000 | – |
| சீலா | 350 | 400 | 500 | 400 |
| விளை | 400 | 400 | 500 | 600 |
| முரல் | 300 | 350 | 400 | – |
| கும்பிளா | 200 | 300 | 400 | 400 |
| கிளாக்கன் | 800 | – | 600 | 400 |
| ஓரா | 300 | 300 | 450 | 400 |
| திரளி | 200 | 200 | 200 | 200 |
| நகரை | 200 | 150 | 400 | 150 |
| சூடை | 100 | 100 | 200 | 150 |
| ஒட்டி | 200 | 200 | 300 | 300 |
| திருக்கை | 250 | 200 | 400 | 200 |
| மதனம் | 150 | 150 | 250 | – |
| கொய் | 100 | 70 | 80 | 100 |
| பாலை | 100 | 200 | 500 | 300 |
| வாளை | 100 | 200 | 400 | 200 |

# வாளைக் காட்டி தந்தையை அச்சுறுத்திய மகனுக்கு விளக்கமறியல்

சாவகச்சேரி, செப். 21
தந்தையை வாள் கொண்டு அச்சுறுத்தியதாகக் குற்றஞ் சாட்டப்படும் மகனை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

மட்டுவில் பகுதியில் அச்சுறுத்தல் சம்பவம் இடம்பெற்றது. குறித்த தந்தையார் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து மகனைப் பொலிஸார் கைது செய்தனர். அங்குள்ள ஆலயமொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வாள் ஒன்றையும் பொலிஸார் மீட்டனர். இளைஞனான குறித்த சந்தேகநபர் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டார். விசாரணை மேற்கொண்ட நீதிமன்று அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது. (4-9)



இது புதுசு

பெண்களுக்கான நவீன சாறி வகைகள் சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை 900 ரூபாவுக்கு விற்பனை செய்யப் படுகின்றன.

## நெடுந்தீவு கடற்பரப்பில் கைதாகிய 8 இந்திய மீனவர்களுக்கு மறியல்

யாழ்ப்பாணம், செப். 21
இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் 8 இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவுக் கடற்பகுதியில் வைத்து இவர்கள் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டனர். அப்பகுதியில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டிருந்த ஜெகதாப்பட்டனத்தைச் சேர்ந்த 8 மீனவர்கள் இரண்டு படகுகளுடன் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர், பின்னர் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள கடற்தொழில் நீரியல்வள திணைக்கள அதிகாரிகளிடம் இவர்கள் ஒப்படைக்கப்பட்டனர்.

மீனவர்களைப் பொறுபேற்ற அதிகாரிகள் ஊர்காவற்துறை நீதிமன்றில் அவர்களை முன்னிலைப்படுத்தினர். இதன்போது 8 இந்திய மீன வர்களையும் எதிர்வரும் 3 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் எம்.ரியால் உத்தரவிட்டார்.

(ய-8)

## பொது இடத்தில் புகைப் பிடித்த ஏழுபேருக்கு ரூபா 2000 தண்டம்

சாவகச்சேரி, செப். 21
பொது இடத்தில் புகைப் பிடித்த ஏழுபேருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று தலா 2 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி மதுவரி . நிலையத்தினர் பிரதேசத்தில் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டனர். அப்போது பொது இடங்களில் பொது மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் புகை பிடித்தவர்கள் இனம்காணப்பட்டனர். இவர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். வழக்குகளை தனித்தனியாக நீதிவான் விசாரித்தார். அனைவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டனர். இவர்களுக்கு தலா 2 ஆயிரம் ரூபாவீதம் தண்டம் விதித்து நீதிவான் தீர்ப்பளித்தார். (ய-9)

பாரம்பரிய நிகழ்வுகளுடன்

# வடக்கு மாகாணத்தில் உலக சுற்றுலாத்தினம்

உலக சுற்றுலா தினமன்று வடக்கு மாகாணத்திலும் எமது பாரம்பரியம் மற்றும் கலைகள் என்பவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் மாபெரும் நிகழ்வுகள் இடம்பெறவிருக்கின்றன என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

மாட்டு வண்டில் சவாரிகள், தவில், நாதஸ்வரம், பறை, தப்பு, சங்கு போன்றவற்றின் கூட்டிணைந்த இனியம் இசை நிகழ்ச்சிகள், நாட்டுக்கூத்து, காவடி, சிலம்பம், பொம்மலாட்டம் போன்ற இன்னோரன்ன ஆடல் வடிவங்களும் இதன்போது அரங்கேற்றப்படவுள்ளன. மொத்தத்தில் வடபகுதியின் பாரம்பரிய கலாச்சார பண்பாட்டு விழுமியங்களை எடுத்துரைக்கின்ற ஒரு நல்ல நிகழ்வாக இந்த சுற்றுலாத் தினம் 2017 முன்னெடுக்கப்பட விருக்கின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கைதடியில் உள்ள வடக்கு மாகாண முதலமைச்சரின் அமைச்சு மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடமாகாணத்தில் எத்தனையோ சுற்றுலா மையங்கள் அடையாளப்படுத்தப்படாது இலைமறைகாயாக காணப்படுகின்ற காரணத்தினால் வெளிநாடுகளிலிருந்தும் ஏனைய மாவட்டங்களிலிருந்தும் வருகை தருகின்ற சுற்றுலாப் பயணிகள் யாழ்ப்பாணத்தில் சுற்றிப் பார்ப்பதற்கு ஒரு இடமும் இல்லை என்ற கருத்துடன் நயினாதீவுக்கும், தம்பகொளபட்டுண என்ற கடல்ப்படையினர் பெயர்வைத்த இடத்திற்கும் சென்றுவிட்டு திரும்பி விடுகின்ற நிகழ்வு எம்மால் அவதானிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையை மாற்றியமைப்பதற்காக சுற்றுலா மையங்கள் சீரமைக்கப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. வடக்குமாகாண சுற்றுலாத் துறைக்கான தந்திரோபாயத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. சுற்றுலாத்துறை ஆலோசகர் கலைச்செல்வன் அதற்கான திட்ட வரைபை வழங்கியுள்ளார். எம்மால் அது பரிசீலிக்கப்பட்டுவருகின்றது. குறுகியகாலத்துக்கு ஏற்புடையதாய் இருந்தாலும் நிலையான ஐந்து வருட அல்லது பத்து வருட முதன்மைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். நிபுணர்கள் பலருடன் கதைத்துக் கொண்டிருக்கின்றோம். சுற்றுலா சார் துண்டுப்பிரசுரங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அவை அன்று மக்களிடயே விநியோகிக்கப்படும். போர்க்காலத்தில் வடக்கு மாகாண வரைபடம் உத்தியோகபூர்வமாகக் கிடையாதிருந்தது. அதனை உத்தியோகபூர்வமாகத் தயாரிக்க நடவடிக்கைகள் எடுத்து வருகின்றோம். அதே நேரம் சுற்றுலா மையங்களை உள்ளடக்கி நாமாகவே வரைபடம் தயாரித்துள்ளோம். வடக்கு மாகாண சுற்றுலாவழிகாட்டிநூல்கள் சிலவற்றை தயாரித்து உலகசுற்றுத்தினமான அன்றைய தினம் வெளியிடவிருக்கின்றோம். இவற்றுக்கும் மேலாக சுற்றுலாத்துறையை விருத்தி செய்வதன் மூலமாக அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வடபகுதியைநோக்கிவருவதற்கும் வடபகுதியில் காணப்படும் உள்ளூர் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கும் தங்குமிடச் சொந்தக்காரர்கள், உணவு விநியோகத்தர்கள் என பல்வேறுபட்ட தரப்பினருக்கு வருவாயைத்தேடிக்கொடுப்பதற்கும் சுற்றுலா அபிவிருத்தி அனுசரணையாக விளங்கும் என்பதை மக்களுக்கு நினைவுபடுத்த விரும்புகின்றோம். இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம் விருந்தோம்பல் முகாமைத்துவப் பாட நெறிகளை விரைவில் ஆரம்பிக்க இருக்கின்றது. தொழில் தேடும் இளையோருக்கு தொழில்த்திறன் கொண்டதும் அதிக வருமானத்தை ஈட்டித்தர வல்லதுமான விருந்தோம்பல் துறையின் வரவேற்பறை முகாமைத்துவம், உணவு மற்றும் பானங்கள் பரிமாற்றம், தங்குமிடப்பராமரிப்பு, தொழில்முறைசமையற்கலை மற்றும் கடமைகளுக்கான ஆங்கிலம் என்பன கற்பிக்கப்படவுள்ளன. சுற்றுலாப் பயணிகளை வடபகுதிக்கு கவரும் அதே நேரத்தில் எமது மக்களின் கலாச்சார பிறழ்வுகளுக்கு இடம் கொடுக்காத வகையில் சுற்றுலாத்துறை மேம்படுத்தப்படவேண்டும் என்பதே எமது அவா என்றார். (21)





## மழலைகள் விளையாட்டு விழா கோலாகலம்

யாழ்ப்பாணம், செப். 21
யாழ்ப்பாண மாவட்ட மழலைகள் விளையாட்டு விழா 2017 கடந்த 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்திப்பிரிவு இதனை ஏற்பாடு செய்திருந்தது.

இதன்போது இடம்பெற்ற குழந்தைகளின் இசையும் 'அசைவும் நிகழ்ச்சி மிகுந்த வரவேற்பைப் பெற்றிருந்தது. (ய-ரி)

## யாழ்ப்பாணம் - கொழும்பு தொடருந்து சேவைகள் வழமைபோல் இடம்பெறும்

யாழ்ப்பாணம், செப். 21
யாழ்ப்பாணம்கொழும்புக்கான தொடருந்துசேவைகள்வழமை போலவே நடைபெறும் என யாழ்ப்பாணம் தொடருந்து சேவை நிலையத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

வேதன உயர்வு உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து நாடுமுழுவதும் தொழில்சங்கம போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தது.

இந்நிலையில் தொழில் சங்கத்தினரின் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது. அனைத்துபிரதேசங்களிலிலும் தொடருந்துசேவைகள்வழமை போல இயங்கவுள்ளன.

மேலும்தொடருந்துசேவைகள் தொடர்பில் தகவல்களை 021 2222271 என்றதொலைபேசி இலக்கத்தின் ஊடக அறிந்துகொள்ள முடியும் என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

(ய-8)3

# தீவகத்தில் பனைவளம் அற்றுப்போகும் அபாயம்

## பாதுகாக்குமாறு வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், செப். 21
தீவகப்பகுதியில் பனைமரங்கள் நாளாந்தம் தறிக்கப்படுவதால் அப்பகுதியில் பனைவளம் அற்றுப்போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது என தீவகப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதுதொடர்பில் பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

தீவகப்பகுதியில் முன்னொரு காலத்தில் பனைவளம் செழித்துக் காணப்பட்டது. ஆனால் தற்பொழுது அவை தறிக்கப்பட்டு வருவதால் பனைவளம் அருகிவிட்டது. அதிலும் நெடுந்தீவுப் பிரதேசத்தில் நாளாந்தம் பனை மரங்கள் தறிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. நெடுந்தீவு மக்களுக்காக வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அது எமது மக்களுக்கு அத்தியாவசியமான திட்டம். ஆனால் வீடுகள் புதிதாக கட்டப்படும்போது வீட்டுக் கூரைகளுக்காக பனைமரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் ஏராளமான பனைகள் தறிக்கப்படுகின்றன.

வீட்டுத்திட்டங்கள் வழங்கும்போது பனைமரங்கள் பாவிப்பதைத் தவிர்த்து வேறு மரங்களைப் பயன்படுத்த முன்வரவேண்டும். அத்துடன் மரக் கொள்வனவுக்கு வீட்டுத்திட்டத்தின் உதவியுடன் சிறுதொகையும் வழங்கினால் பயனாளிகள் பனைமரங்களைத் தறிப்பதை தவிர்த்து விட்டு, வேறு மரங்களைப் பயன்படுத்துவார்கள் இதனால் பனை வளத்தை ஓரளவு பாதுகாக்க முடியும்.

எமது பிரதேசத்தில் பனை மாதிரித் தோட்டங்கள் இருக்கின்றன. ஆனால், அங்கு பனங்கன்றுகள் அழிந்து காணப்படுகின்றன. பனம் விதைகளை நடும்போது பாதுகாப்பு வேலிகளை அடைக்காமையினால் கால்நடைகள் அவற்றைத் தின்று விடுகின்றன.

இதனால் மாதிரித் தோட்டத்தில் பனம்கன்றுகள் உருவாகாத நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் கன்றுகளை நடும்போது நாகதாளி போன்ற முட்கள் கொண்ட மரங்களையும் நடவேண்டும். இதன்மூலம் கால்நடைகள் பனம் கன்றுகளை சேதப்படுத்துவதில் இருந்து காப்பாற்றிக்கொள்ள முடியும்.

அத்துடன் 50 ஏக்கர் நிலப்பரப்பில் காட்டுமரங்கள் வைக்கப்பட்டுள்ளன. அதற்கு வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றையும் சீரமைக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது. அத்துடன் அதனைப் பராமரிப்பதற்கு இருவரை அமர்த்தினால் மரங்களைப் பாதுகாக்க முடியும் என்றனர்.

இதுதொடர்பில் கருத்து தெரிவித்த பனை தென்னை அபிவிருத்தி திணைக்கள அதிகாரி, நெடுந்தீவு பிரதேசத்திற்கென பனை தென்னை கூட்டுறவு அபிவிருத்தி சங்கத்தை உருவாக்க முயற்சி எடுத்து வருகின்றோம். ஆனால் அது தற்போதுதான் கூடிவருகின்றது. பனங்கட்டி தொழிற்சாலை அமைப்பதற்கு பயிற்சிகளும் வழங்கப்பட்டன. ஆனால் அதற்கான மூலப்பொருட்களை பெற்றுக்கொள்வதில் சிரமங்கள் காணப்படுகின்றன.

ஏனெனில் அங்குள்ளவர்கள் பனாட்டுக்கே முன்னுரிமை கொடுக்கின்றனர். அவர்கள் பனம்கட்டியில் நாட்டம் காட்டுவதில்லை.

பனை வளங்களைப் பாதுகாக்கும் வகையில் மாதிரித் தோட்டங்களை உருவாக்கி வருகின்றோம். இங்குள்ளவர்கள் கேட்டதுபோல பாதுகாப்பு வேலிகள் அமைப்பது தொடர்பில் ஆராய்கின்றோம். காட்டுமரக் காணியின் வேலிகளை சீரமைப்பதற்கும், அங்கு பராமரிப்பாளர்களை ஈடுபடுத்துவது தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (ய08)

# வடக்கு மாகாணத்துக்கு 9 தாதியர்கள் நியமனம்

யாழ்ப்பாணம், செப்.21
வடக்கு மாகாணத்தில் உள்ள சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகங்களுக்கு 5 தமிழர்களும், 4 சிங்களவர்களும் பொது சுகாதார தாதியர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.
இவர்கள் கடந்த 18ஆம் திகதி கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
மாகாணத்தில் உள்ள சுகாதார மருத்துவ அதிகாரிகள் அலுவலகங்களில் பொதுச் சுகாதார தாதியர் பதவிகள் நீண்டகாலமாக வெற்றிடமாக உள்ளன.
குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார் மற்றும் பாலூட்டும் தாய்மார் போன்றவர்களுக்கு சிகிச்சை வழங்குவதில் சிரமம் ஏற்பட்டது.
பொது சுகாதார தாதிர்களை நியமிக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டது.
இதையடுத்து சுகாதார நிறுவனங்களில் தாதிய அலுவலர்களாக கடமையாற்றியோரிடையே விண்ணப்பங்கள் கோரப்பட்டன. களுத்துறையில் ஒன்றரை வருடங்கள் பயிற்சிகள் வழங்கப்பட்ட பின்னர் வடக்கு மாகாணத்துக்கு 9 பேர் நியமிக்கப் பட்டனர்.
வடக்கு மாகாணத்தில் யாழ்.மாவட்டத்துக்கு மூவரும், மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களுக்கு தலா இருவரும், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு தலா ஒருவரும் நியமிக்கப்பட்டனர்.
யாழ்.மாவட்டத்தில் பருத்தித்துறை, கோப்பாய், சாவகச்சேரி ஆகிய சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகங்களுக்கு இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என மேலும் தெரிவிக்கப்பட்டது.
(ய-9)

## வடக்கு தாதியர்களுக்கு
# மேலதிக நேர வேலை கொடுப்பனவு விரைவில்
## மாகாண சுகாதார அமைச்சு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.21
வடக்கு மாகாண தாதியர்களின் மேலதிக நேர வேலைக் கொடுப்பனவுகள் நடப்பு வருடத்தின் ஓகஸ்ட் மாதத்தில் இருந்து வழங்கப்படும் என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.
இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது:
வடக்கில் சேவைபுரியும் தாதியர்களின் மேலதிக நேர வேலைக்கான அதிகரித்த கொடுப்பனவுகளை வழங்குவதற்கு அரசு அனுமதி வழங்கியிருந்தது.
2016 ஆரம்பகாலம் முதல் இந்த சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் என சுற்றறிக்கை வெளியிட்டிருந்தது.
இதன்படி தாதியர்களின் மேலதிகநேர வேலைக்கு வழங்கப்படும் வழமையான கொடுப்பனவை அதிகரித்து வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது.
ஆனாலும் அதற்குரிய நிதியை அனுப்பிவைக்கவில்லை.
இவ்வாறான அனுமதிகளை அரசு வழங்கும் போது நிதி உள்ளதா என்பதை அரசு கருத்தில் கொள்ளவில்லை. தாதியர்களின் கொடுப்பனவை வழங்குவதற்கு 140 மில்லியன் தேவையாக உள்ளது.
இதுதொடர்பில் உரியவர்களுக்கு அமைமைச்சு தெரியப்படுத்தியிருந்தது. தற்போது அமைச்சிடம் உள்ள நிதியின் அளவிற்கேற்ப நடப்பு வருடத்தின் ஓகஸ்ட் மாதத்தில் இருந்து அதிகரித்த மேலதிக கொடுப்பனவு நிதியை அமைச்சு வழங்கவுள்ளது.
அதற்கு முந்திய காலப்பகுதியில் வழங்க வேண்டிய கொடுப்பனவை விரைவில் பெற்றுக்கொடுக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.
தமக்கான சம்பள அதிகரிப்பு இன்னமும் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து வந்த தாதியர்கள், போராட்டத்தில் ஈடுபடுவதற்கும் அவர்கள் நடவடிக்கை எடுத்திருந்தனர் என்பது குறிப்பி டத்தக்கது. (ய-ரி)

## பாளையிலிருந்த நச்சுப் பாம்பு குடும்பப் பெண்ணைத் தீண்டியது

யாழ்ப்பாணம், செப். 21
தென்னம்பாளையை தூக்கி வீச முற்பட்ட குடும்பப் பெண் பாளைக்குள் மறைந்திருந்த பாம்பினால் கடியுண்டார். இந்தச் சம்பவம் மிருசுவில் வடக்கில் நேற்று இடம்பெற்றது.
இதே இடத்தைச் சேர்ந்த 54 வயது குடும்பப் பெண்ணே பாம்பினால் கடியுண்டார். அவர் சிகிச்சைக்காகச் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.
(4 - 9)

# சுயதொழில் புரிவோரை ஊக்குவிக்கவேண்டும்
## வடக்கு தொழில் திணைக்களம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், செப்.21
வடக்கு மாகாணத்தில் உள்ள சுயதொழில் முயற்சியாளர்களை தேசியரீதியில் உயர்த்துவதற்கு அனைத்து தரப்பினரும் முன்வர வேண்டும் என்று மாகாண தொழிற்துறை திணைக்களம் தெரிவித்துள்ளது.
இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாணத்தில் போருக்குப் பின்னர் சுயதொழில் முயற்சியாளர்களை உருவாக்கவேண்டிய தேவை அதிகரித்தது. பல்வேறு ஊக்குவிப்பு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. கடினமான முயற்சி மற்றும் பயிற்சி காரணமாக பலர் தேசிய விருதுபெறும் அளவுக்கு வளர்ச்சியடைத்துள்ளனர்.
சுயதொழில் பல்வேறு பிரிவுகளில் வழங்கப்பட்டாலும், அதன் முதன்மை நோக்கும் சூழலுக்கும், மக்களுக்கும் பாதிப்பும் இல்லாமல் இருக்கவேண்டும் என்பதே.
புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த சாயிராணி இயற்கை மூலிகைகளைப் பயன்படுத்தி அப்பளம், முடி உதிர்வதைத் தடுக்கும் எண்ணெய் மற்றும் மூலிகையிலான உணவுப் பொருள்களை உற்பத்தி செய்துவருகின்றார்.
இவருக்கு 2016ஆம் ஆண்டு 2ஆம்நிலை தேசிய விருது மற்றும் வடக்கு மாகாண சிறந்த தொழில் முயற்சியாளர்களுக்கான விருது கிடைத்துள்ளது.
சங்கரப்பிள்ளை நகுலேஸ்வரன் என்பவர் மரக்கறிகள், பழங்கள், கிழங்குகளை உலர்த்திப் பாதுகாத்து அவற்றை மக்கள் பயன்படுத்தும் வகையில் பொதிசெய்து விற்பனை செய்து வருகின்றார்.
15 கிலோ பொருள்களை உலர்த்தி அதிலிருந்து ஒரு கிலோ கிராம் உலர்ந்த உணவுப் பொருள்களைப் பெறுகின்றார்.
தீவகத்தைச் சேர்ந்த கிரீசன் என்பவர் இயற்கை முறை விவசாயத்தை சிறப்பாக மேற்கொண்டு வருகின்றார். கிருமி நாசினி பயன்படுத்தாமல் இயற்கைப் பசளையைப் பயன்படுத்தி உடலுக்கு தீங்கு விளைவிக்காத மரக்கறி வகைகளை உற்பத்தி செய்து வருகின்றார். கொழும்பில் நடைபெற்ற 5 நாள்கள் இயற்கைமுறை விவசாயக் கண்காட்சியில் அவர் சிறப்பான கௌரவத்தைப் பெற்றுக்கொண்டார்.
திருமதி மஞ்சுளா சிறிரங்கநாதன் என்பவர் தற்போது உள்ள நாகரிகமுறைக்கேற்ற அழகு நகைகள்,
மண்மூலமான அழகுசாதன உற்பத்திகள், சிலைகள், சிற்பங்கள், சேலை, சட்டை அலங்காரங்கள், கண்ணாடி வடிவமைப்புகள் சாடி அலங்காரங்கள், திரை அச்சு அலங்காரங்கள், சேலைக்கான அலங்கார வேலைகள், பூக்கள் வடிவமைப்பு, காகிகத்திலான பூ அலங்காரம், பட்டிநூல்
வேலைப்பாடுகள், கேக் அலங்காரம் போன்றவற்றை சிறப்பாகச் செய்து வருகின்றார்.
இவ்வாறு பல சுயதொழில் முயற்சியாளர்கள் உருவாகியுள்ளனர். வடக்கு மாகாணத்தில் இன்னும் பல சுய தொழில் முயற்சியா ளர்களை உருவாக்குவதற்கு அனைவரும் முயற்சி செய்யவேண்டும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய-ரி)



## வீடுகளில் மூலிகைத் தோட்டம் அமைப்பதற்கு விரைவில் பயிற்சி

யாழ்ப்பாணம், செப்.21
வடக்கு மாகாணத்தில் வீடுகளில் மூலிகைத் தோட்டங்களை அமைப்பது தொடர்பில் அடுத்த வருடம் சிறப்பு பயிற்சிகளை வழங்கவுள்ளதாக மாகாண சுதேச வைத்தியத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாணத்தில் மூலிகையின் தேவை அதிகமாக உள்ளது. சிறுவர்கள், வயோதிபர்கள் எனப் பலருக்கும் வீட்டு வைத்திய தேவைக்காக மூலிகைகள் தேவைப்படுகின்றன. இவற்றினைப் பெற்றுக்கொள்ளுவதில் அவர்கள் சிரமத்தை எதிர் நோக்குகின்றனர்.
எனவே, திணைக்களத்தின் கீழ் உள்ள மூலிகைத் தோட்டங்களில் முதற்கட்ட பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. மூலிகை இனத்தின் அறிமுகம், பராமரிப்பு முறை போன்றவை வழங்கப்படவுள்ளன. மூலிகைத் தோட்டங்களில் சிறிய பரப்பில் மூலிகைகளைப் பயிரிடுதல் தொடர்பாக மாதர் சங்கம், கிராம முன்னேற்ற சங்கம் போன்ற பொது அமைப்புகளை உள்வாங்கி பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.
அதன் பின்னர் வீட்டில் எவ்வாறு மூலிகைத் தோட்டங்களை அமைத்துப் பயன்பெறுவது என்பது தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படும்.
இதன்மூலமாக மூலிகைகள் சார்ந்த விழிப்புணர்வு கொண்ட சமுதாயத்தை உருவாக்குவதே நோக்கமாகும். இதற்காக 2018ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடுகள் கிடைத்த பின்னர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய-ரி)

# தாக்கப்பட்ட குடும்பத் தலைவர் அதிக குருதி வெளியேறியதால் இறந்தார்

*உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், செப். 21
நல்லூர்ப் பகுதியில் குடும்பத் தலைவர், ஒருவர் கடத்தப்பட்டு தாக்கப்பட்டதால் நெஞ்சில் கண்டல் காயம் ஏற்பட்டும் விலா எலும்பு முறிவடைந்து அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட குருதிப் பெருக்கின் காரணமாகவே உயிரிழந்தார் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சட்ட மருத்துவ நிபுணர் உ. மயூரதன் தெரிவித்தார்.
“குறித்த குடும்பத்தலைவரின் உடலில் பலத்த அடிகாயத்தால் ஏற்பட்ட கண்டல் காயங்கள் காணப்படுகின்றன. அவரின் தலைப்பகுதியிலும் இரண்டு காயங்கள் காணப்படுகின்றன. விலா எலும்பு உடைந்து உடலில் குருதிப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. அதிக குருதிப்போக்குக் காரணமாகவே அவர் உயிரிழந்துள்ளார்” என்று அவர் மேலும் தெரிவித்தார்.
யாழ்ப்பாணம் நாவலர் சாலையில் வாள்களுடன் வீடு புகுந்த இளைஞர் குழு குடும்பத் தலைவரையும் அவரது மகனையும் கடுமையாகத் தாக்கினர். மகன் யாழ்ப்பாணம் போதனா மருத்துமனையில் சேர்க்கப்பட்டார். குடும்பத் தலைவரை வாள்வெட்டுக் குழுவினர் கடத்திச் சென்றிருந்தனர். பின்னர் அவர் கடுமையாகத் தாக்கப்பட்ட நிலையில் நல்லூரடியில் குருதி வெள்ளத்தில் காணப்பட்டார்.
பொலிஸா ரின் உதவியுடன் அந்த வழியே சென்றவர்கள் அவரை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்த்தனர். எனினும் சிகிச்சை பயனளிக்காது இரண்டரை மணித்தியாலங்களில் அவர் உயிரிழந்தார்.
அவரது உடற்கூற்றுப் பரிசோதனை நேற்று இடம்பெற்றது. அதில் மேற்படி விடயம் தெரியவந்தது.
விசாரணைகளின் பின்னர் சடலம் அவரது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது.
வாள்களுடன் சென்றவர்கள் அவரைத் தாக்கிக் கடத்திச் சென்று வெட்டினர் என்று பொலிஸாரின் ஆரம்ப விசாரணையில் கூறப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4-8)

# இலங்கையை அச்சுறுத்துகிறார் ஐ.நா. ஆணையர்

## அவரின் அறிவிப்பு இறையாண்மைக்கு ஆபத்தானது என்கிறது மகிந்த அணி

கொழும்பு, செப். 21

இலங்கையின் உள்விவகாரங்களில் நேரடியாகத் தலையிட்டு நாட்டின் இறையாண்மைக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் செயற்பட்டு வருகின்றார் என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன குற்றஞ்சாட்டினார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 36ஆவது கூட்டத்தொடர் கடந்த 11ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமாகியது. ஆரம்ப உரையை நிகழ்த்திய மனித உரிமைகள் ஆணையாளர் சையித் அல் ஹூசைன், பொறுப்புக்கூறல் விடயத்தில் இலங்கை அசமந்தமாகச் செயற்பட்டு வருவதாகவும், இந்த நிலமை நீடித்தால் அது பன்னாட்டு விசாரணைக்கு வழிவகுக்கும் எனவும் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

அவரின் இந்த அறிவிப்பு தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று நிலையியல் கட்டளையின் கீழ் வினாக்களைத் தொடுத்து உரையாற்றுகையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன மேற்படி குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பன்னாட்டு மட்டத்தில் அனைத்துப் பிரச்சினைகளிலிருந்தும் இலங்கை விடுபட்டுவிட்டதாக அரச தலைவரும், தலைமை அமைச்சரும் தொடர்ச்சியாக அறிவித்து வருகின்றனர். ஆனால், அப்படி நடந்ததாகத் தெரியவில்லை. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிவிப்பானது இலங்கையின் உள்விவகாரத்தில் மீண்டும் தலையிடுவதாகவே அமைந்துள்ளது.

இது பாரதூரமான பிரச்சினையாகும். இறையாண்மையுள்ள நாட்டை அச்சுறுத்தவே ஆணையாளர் முற்பட்டுள்ளார். இந்த விவகாரத்தில் அரசின் நிலைப்பாடு என்ன என்பதையும், எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் அயலுறவுத்துறை அமைச்சர் இந்தச் சபைக்கு அறிவிப்பு விடுக்கவேண்டும் - என்றார். (5)

## ஐ.நா. ஆணையரின் கருத்துக்கு மூன்று வாரங்களில் பதிலடியாம்

### அரசு கூறுகின்றது

கொழும்பு, செப். 21

இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வெளியிட்ட கருத்துகளுக்கு அரசின் சார்பில் இன்னும் மூன்று வாரங்களில் பதிலளிக்கப்படும் என்று அயலுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் மகிந்த அணி உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த விவகாரம் தொடர்பில் பதிலளிப்பதற்கு மூன்று வாரங்கள் தேவைப்படுகின்றன. இவ்வாறு காலம் எடுத்துக் கொள்வதால் நாட்டுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை - என்றார்.

'எட்டு வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பிலேயே கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன. தற்போதைய அரசு ஆட்சிக்கு வந்து 2 ஆண்டுகளே கடந்துள்ளன' என்று சபை முதல்வரான அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல இதன்போது சுட்டிக்காட்டினார். (5)

## உள்ளூராட்சித் தேர்தலை இழுத்தடித்தீர்கள் மாகாணசபைத் தேர்தலையாவது நடத்துங்கள்

### அரசுக்குள்ளிருந்து குரல் கொடுக்கிறார் ஹக்கீம்

கொழும்பு, செப். 21

தேர்தல் முறைமை சிறுபான்மையின மக்களுக்கு பாதிப்பாக அமையக் கூடாது என்று வலியுறுத்திய அமைச்சரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம், மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தலை இழுத்தடிக்காமல் விரைந்து நடத்த வேண்டும் என்று கோரினார்.

மாகாண தேர்தல் திருத்தச் சட்டவரைவு மீதான விவாதம் நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்டவரைவில் உள்ள சில சரத்துக்களுடன் எமக்கு உடன்பாடுகள் கிடையாது. இதன் ஊடாக பல சிக்கல்கள் உள்ளன. குழுநிலையின் போது இதற்கான திருத்தங்களை நாம் முன்வைக்கத் திட்டமிட்டுள்ளோம்.

சிறுபான்மை மக்களின் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் நாடாளுமன்றத்துக்கு மாற்றுத் தேர்தல் முறைமையை சமர்ப்பிக்கவுள்ளோம். சபைக்கு சமர்ப்பிக்கவுள்ள வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையின் ஊடாக அதனைக் கொண்டு வரவுள்ளோம்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தாமதம் செய்யப்பட்டுவிட்டது. மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தலையாவது தாமதமின்றி உடன் நடத்தவேண்டும். புதிய முறைமையின் கீழ் தேர்தல் நடத்தப்பட வேண்டும் - என்றார். (5,31)

## வேட்புமனுவில் பெண்களுக்கு 30 சதவீத இடஒதுக்கீடு கொடுத்தாலும் தேர்தலில் அவர்கள் தெரிவாகுவார்களா ?

### நாடாளுமன்றில் சுமந்திரன் எம்.பி. கேள்வி

கொழும்பு, செப். 21

பெண்களுக்கு வேட்புமனுவில் இடஒதுக்கீடு வழங்க மேற்கொள்ளும் முயற்சி முன்னேற்றகரமானது. ஆனால் அவர்களுக்கு ஒதுக்கீடு வழங்கப்படும் அளவுக்கு தேர்தலில் அவர்கள் தெரிவு செய்யப்படுவார்களா என்பது சந்தேகமே? இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற மாகாணசபைகள் தேர்தல் திருத்தச் சட்டவரைவு மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இது முக்கியமான சட்டவரைவு. மாகாண சபைக்கான வேட்பாளர் பட்டியலில் பெண்களுக்கு குறைந்த பட்சம் 30 சதவீத ஒதுக்கீட்டை அறிமுகப்படுத்தியுள்ளோம். நாடாளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம் யாதுமொரு சட்டவரைவு நிறைவேற்றப்படும் தினத்தன்று நண்பகல் 12 மணிக்கு முன்னதாக எந்தவொரு உறுப்பினரும் குழுநிலையில் திருத்தங்களை முன்வைக்க முடியும்.

மாகாண சபைத் தேர்தல்கள் திருத்தச் சட்டவரைவு முன்னேற்றகரமான செயற்பாடாகும். மாகாண சபைக்கான வேட்புமனுவில் பெண்களுக்கு குறைந்தபட்சம் 30 சதவீத ஒதுக்கீடு வழங்கப்படுகின்ற போதிலும், அதே சதவீதத்திலான பெண்கள் சபைகளுக்கு தெரிவு செய்யப்படுவார்களா என்பது சந்தேகமேயாகும்.

வேட்புமனுவில் அல்லது மாகாண சபைளுக்கு தெரிவாகும் உறுப்பினர்களில் பெண்களின் பிரநிதித்துவம் குறைந்தபட்சம் 25 சதவீதமாக அமைவதை உறுதிப்படுத்துவதற்கான திருத்தம் மேற்படி சட்டவரைவில் முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த திருத்தத்தை தாம் பாராட்டுகின்றோம்.

60 சதவீதம் தொகுதிவாரி முறைமையையும் 40 சதவீதம் விகிதாசார முறைமையையும் கொண்ட கலப்பு தேர்தல் முறைமையொன்றுக்கு கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அனைவரும் இணக்கம் வெளியிட்டிருந்தனர்.

அரசமைப்பு நிர்ணய சபை மற்றும் வழிநடத்தல் குழு ஆகியவற்றிலும் கூட கலப்பு தேர்தல் முறைமை தொடர்பில் அனைவரும் இணங்கிச் செயற்பட்டுள்ளனர். அந்தக் கலப்பு தேர்தல் முறைமை குறித்த நியாயமான திருத்தமொன்று இந்தச் சட்டவரைவில் முன்வைக்கப்பட்டுள்ளது. புதிய தேர்தல் முறைமையின் பிரகாரமான எல்லை மீள்நிர்ணய பணிகள் 6 மாத காலத்துக்குள் நிறைவு செய்யப்படவேண்டும் என்ற திருத்தமும் சட்டவரைவில் முன்வைக்கப்பட்டுள்ளது -என்றார். (5,31)

## மருத்துவர்கள் இன்று பணிப்புறக்கணிப்பு

மாலபே தனியார் மருத்துவ கல்லூரியை தடைசெய்தல் மற்றும் இலங்கை மருத்துவ சபையின் சுயாதீனத்தை பாதுகாக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நாடு முழுவதிலும் இன்று வேலை நிறுத்தத்தை முன்னெடுக்கவுள்ளது. பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு அரசே பொறுப்பேற்க வேண்டும் எனவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்திய நவின் தி சொய்ஷா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சைட்டம் தொடர்பில் அரசு நியமித்த குழு ஆராய்ந்து சமர்ப்பித்த அறிக்கையிலும் பல தவறுகள் உள்ளது. இலவசக் கல்வியை தனியார் மயப்படுத்துவதை எதிர்த்து நாம் 2009 ஆம் ஆண்டிலிருந்து போராடிவருகின்றோம். அரசு எமக்குத் தீர்வு தரவில்லை. மாறாக பொதுமக்களைப் பலிக்கடாவாக்கின்றது. தீர்வு தரும்வரை நாம் தொடர்ந்து போராடுவோம்.

வேலைநிறுத்தமானது காலை 8 மணிமுதல் மறுநாள் காலை 8 மணிவரையில் நடைமுறைப்படுத்தப்படும். மஹரகம புற்றுநோயாளர் மருத்துவமனை, அவசர சிகிச்சை நிலையம், விபத்துக்கள் பிரிவு, மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனைகள் என்பனவற்றில் வழமைப்போல் சேவைகள் இடம்பெறும். சகல மருத்துவமனைகளிலும் கறுப்புக்கொடி மற்றும் சைட்டம் எதிர்ப்பு பதாகைகள் காட்சிப்படுத்தப்படும் - என்றார். (5,31)


## மரண அறிவித்தல்

பிறப்பு
17 . 01 . 1943



இறப்பு
20 . 09 . 2017

### ஞானம் லியோன் (தங்கராசா)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மட்டுவில், நவாலியை வசிப்பிடமாகக் கொண்ட ஞானம் லியோன் (தங்கராசா - உதவி தபால் அதிபர், கொழும்பு) நேற்று (20.09.2017) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானம் - பிலிப்பாச்சி தம்பதியரின் அன்பு மகனும் திருமதி புஸ்பராணியின் (ஆயுள்வேத வைத்தியர்) அன்புக் கணவரும் காலஞ்சென்ற பிலிப்ஸ்(ஆயுள்வேத வைத்தியர்) - திரேசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சுகன்யா, விஜிதா, செந்தூரன், றேகன் ஆகியேரின் பாசமிகு தகப்பனாரும் யூட் தோமஸ், கிறிஸ்ரி இம்மனுவல் , சங்கீதா, மேலின் ஆகியோரின் அன்பு மாமனாரும் கெவின்,ஜஸ்மித்தா, தாமிரா, சௌமியா, ஷர்மிலன், சந்தோஸ், சாருஜன், இசையினி, நயனி ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற ஸ்ரனிஸ்லஸ், அமிர்தநாதன், பொன்றோஸ், பிலோமினா, அமலநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பிறேமராணி, ரூபராணி, நிஷாகரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (22.09.2017) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நவாலி புனித / பேதுரு பாவிலு தேவாலயத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டு மட்டுவில் புனித லூர்து அன்னை ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நவாலி கிழக்கு,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்பு: 077 405 5674

# எங்கள் நிதானப் பயணத்துக்கு ஒத்துழைக்கவேண்டும்

## ஐ.நாவில் அரச தலைவர் மைத்திரி வலியுறுத்து

கொழும்பு, செப். 21
இலங்கையின் சுயாதீனத் தன்மை மற்றும் இறைமை ஆகியவற்றை பாதுகாத்துக் கொள்ளும் அதேவேளை எம்மீது முன்வைக் கப்பட்டுள்ள பல்வேறு குற்றச்சாட்டுகள், பிரேரணைகள் ஆகியன தொடர்பில் நாம் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதனை ஒரு சுதந்திர மானசமாதானம்மிக்க நாடென்ற வகையிலும் நிதானமான பயணத்தின் மூலம் தெளிவான இலக்கை எட்ட எமக்கு பன்னாட்டுச் சமூகத்தின் ஒத்துழைப்பை வேண்டி நிற்கின்றேன். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஐ.நா. பொதுச் சபையின் 72ஆவது கூட்டத் தொடரில் அரச தலைவர் மைத்திரிபால நேற்று உரையாற்றினார்.

அவரது நீண்ட உரையில் தெரிவித்ததாவது:



### அதிகாரங்களைக் குறைத்தேன்

2015ஆம் ஆண்டு ஜனவரியில் இலங்கை அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தேன். தெரிவு செய்யப்பட முன்னர் நாட்டு மக்களுக்குப் பல வாக்குறுதிகளைக் கொடுத்திருந்தேன். உலகில் எந்தவொரு நாட்டுத் தலைவருக்கும் இல்லாத அதிகாரங்கள் இலங்கையின் அரச தலைவருக்கு இருப்பதனால் நான் ஆட்சிக்கு வந்தவுடன் அந்த அதிகாரங்களை நீக்கி நாடாளுமன்றத்திற்கு ஒப்படைப்பேன் என்பதே அந்த வாக்குறுதியாகும். ஆட்சிக்கு வந்த தலைவர், அரசமைப்புக்கு அமைவாக அளவற்ற அதிகாரங்களுடன் ஆட்சியில் இருக்கும்போது அந்த அதிகாரங்களை மீள ஒப்படைத்த அரச தலைவர் என்ற ரீதியில் எனது நாட்டுக்கும் பன்னாட்டுச் சமூகத்திற்கும் அதிகாரத்தை கைவிடுவது தொடர்பான முன்மாதிரியை நான் வழங்கியுள்ளேன்.

எனது நாட்டில் சனநாயக்தை உறுதிப்படுத்தி ஏகாதிபத்திய அரசியலை கொண்டு நடத்திய அரசியல் குழுக்களை அகற்றி நாட்டில் மக்களின் சுதந்திரத்தையும் சனநாயக்தையும் உறுதிப்படுத்தி, சனநாயகத்தை பாதுகாத்து அடிப்படை உரிமைகளை மேம்படுத்தி கடந்த இரண்டரை ஆண்டுகளாக வெற்றிகரமாக பயணித்துள்ளேன்.

### வறுமை ஒழிப்பு

2017ஆம் ஆண்டு எமது நாட்டை வறுமையிலிருந்து விடுவிக்கும் ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. அதற்காக எமது நாடும் முழு உலகமும் பெரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன. வறுமையிலிருந்து விடுபடும் நாடாக இலங்கையைப் பிரகடனப்படுத்தி நாட்டின் தேசியப் பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்காக பல அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் 30 ஆண்டுகளாக நிலவிய உள்நாட்டுப் போர், நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்குலைத்தது என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். நாட்டைப் பிரிப்பதற்குப் போராடிய பயங்கரவாதிகளைத் தோற்கடித்து சுதந்திரமான சனநாயக நாடாக இயங்க எம்மால் முடிந்துள்ளது. பொருளாதார பின்னடைவுகளுடன் நாட்டில் ஏற்பட்ட பின்னடைவுகளில் கற்றுக்கொண்ட பாடங்களுடன் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை நோக்கி பயணித்து நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்காக தேசியப் பொருளாதாரம், விவசாயம், கைத்தொழில் மயமாக்கலில் நாம் புதிய அத்தியாயத்தைத் திறந்துள்ளோம். இந்த அபிவிருத்திச் செயற்பாடுகளின் போது சுற்றாடல் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் வழங்குவது எனது அரசின் முக்கியமான குறிக்கோளாக இருக்கின்றது.

### கிராம சக்தி செயற்திட்டம்

வறுமையிலிருந்து விடுபடும் தேசிய செயற்திட்டத்தின் கீழ் கிராமசக்தி எனும் புதிய செயற்திட்டத்தை ஆரம்பித்துள்ளதுடன் 2025ஆம் ஆண்டு வரையான தெளிவான பொருளாதாரக் கொள்கை மற்றும் திட்டத்தை நாங்கள் பிரகடனப்படுத்தியுள்ளோம். தேசியப் பொருளாதாரம் மற்றும் விவசாயத்தை பலப்படுத்தி வறுமையிலிருந்து விடுபடும் அந்தப் பெரிய தேசிய செயற்திட்டத்தில் புதிய செயற்பாடுகளை அறிமுகப்படுத்தி, 2025ஆம் ஆண்டு வரை நாம் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கும் பொருளாதாரத் திட்டம், நாட்டில் பொருளாதாரப் புத்தெழுற்சியையும் சுபீட்சத்தை அடைவதற்குப் பெரும் உந்துசக்தியாக இருக்குமென நான் நம்புகிறேன்.

### போதையிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாப்போம்

இலங்கையிலும் உலகிலும் இன்று பிள்ளைகள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளனர். எமது நாட்டில் பிள்ளைகளைப் பாதுகாப்பதற்காக 'பிள்ளைகளைப் பாதுகாப்போம்' என்ற தேசிய செயற்திட்டத்தை ஆரம்பித்துள்ளோம். போதைப் பொருளிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாத்தல், அவர்களை துர்நடத்தைகளிலிருந்து பாதுகாத்தல் மூலம் முழு மானிட சமூகத்தினதும் பிள்ளைகளை பாதுகாப்பதற்கான செயறதிட்டமானது தேசிய, பன்னாட்டு ரீதியிலும் மிகவும் முக்கியத்துவம் மிக்கதாகும். அந்தத் திட்டத்தின் இலக்கை அடையும் வகையில் செயற்படுத்த வேண்டும் என்பதை நாம் மிகத் தெளிவாக உணர்ந்திருக்கின்றோம்.

### பெண்கள் உரிமைகள்

பெண்கள் உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பில் அன்றுபோன்றே இன்றும் உலகத்தின் கூடுதல் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது. இலங்கை சனத்தொகையில் நூற்றுக்கு 52 வீதத்திற்கும் அதிகமானோர் பெண்களாவார். பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் அரசமைப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்களுடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்களில் 25 வீதமானோர் பெண்களாக இருக்க வேண்டுமென்பதனை எமது புதிய அரசமைப்புத் திருத்தச்சட்டத்தில் கட்டாயப்படுத்தியிருக்கின்றோம் - என்றார். (5)

**கண்ணீர் அஞ்சலி**



எமது ஆலய பரிபாலன சபை உறுப்பினர்
**பொ.ஜெகானந்தம்**
(ஜெயா)
அவர்களின் பாசமிகு தாயார்
**திருமதி**
**பாக்கியலட்சுமி பொன்னம்பலம்**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
**பரிபாலன சபையினர்**
**ஓடையம்பதி கற்பகவிநாயகர் ஆலயம், உரும்பிராய்.**

**கண்ணீர் அஞ்சலி**



உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலய பரிபாலனசபை முன்னாள் தலைவரும், பெருந்திரு விழாவில் சப்பைரதத் திருவிழா உபயகாரர்களில் ஒருவருமாகிய
**சி. நந்தகுமார்**
அவர்களின் பாசமிகு மாமியார்
**திருமதி சிவகாமசௌந்தரி இராமச்சந்திரன்**
அவர்களின் மறைவு குறித்து அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியையும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் காணிக்கை ஆக்குகின்றோம்.
**பரிபாலன சபையினர்**
**ஓடையம்பதி கற்பகவிநாயகர் ஆலயம், உரும்பிராய்.**

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



அமரர்
**சின்னத்தம்பி பரமு**
மண்ணில்
01.02.1928
விண்ணில்
01.10.2016
திதி: 21.09.2017

அன்பு பொழியும் ஆதரவுப் புன்னகையும்
பண்பின் உயர்வும் பலரிடமும் பூண்ட நட்பும்
இன்னமும் எம் கண்முன்னே நீங்கா இடம்பிடிக்க
ஆண்டு ஒன்று ஆனபோதும் இன்றும் உங்கள் நினைவுடனே
உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திகின்றோம்.

மண்டுவில் வீதி,
மீசாலை.
**குடும்பத்தினர்.**

**இருபதாம் ஆண்டு நினைவலைகள்**



**அமரர் நமசிவாயம் நடராசா**
மலர்வு
17.01.1923
உதிர்வு
02.10.1997
திதி: பிரதமை
(21.09.2017)

அன்பிற்கு உதாரணமாகவும் பாசத்தின் உறைவிடமாகவும் திகழ்ந்த ஐயா! நீங்கள் இவ்வுலகை விட்டு அம்பாளின் பாதார விந்தங்களைச் சென்றடைந்து இருபது ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆனாலும் உங்கள் நினைவுகள் எங்களை விட்டு விலக மறுக்கின்றது. உங்கள் ஆத்மா நிலையான அமைதி அடைய இறைவனை வேண்டுகிறோம்.
**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

ஐயனார் கோயிலடி,
கல்வயல்,
சாவகச்சேரி.
அன்பான மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், உற்றார்,
உறவினர்கள்

**4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



**சிதம்பரப்பிள்ளை கலாநிதி**
(ஆங்கில ஆசிரியர்)
திதி: துதியை
தோற்றம்
02.01.1954
மறைவு
06.10.2013

நீங்கள் இம்மண்ணைவிட்டு மறைந்து
நான்கு ஆண்டுகள் ஆனபோதிலும் - எம்
நெஞ்சங்களில் இன்றும் வாழ்ந்துகொண்டுதான்
இருக்கின்றீர்கள் - எப்போதும்
வாழ்ந்து கொண்டுதான் இருப்பீர்கள்

செம்பாந்தோட்ட வீதி,
சாவகச்சேரி வடக்கு.
குடும்பத்தினர்,
சகோதரர்கள்.

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**




**வேலுப்பிள்ளை இராஜரட்ணம்**
(இளைப்பாறிய நீர் வழங்கல் சபை உத்தியோகத்தர்
மன்னார் / யாழ்ப்பாணம் / வவுனியா)
தோற்றம்
1938.12.16
மறைவு
2016.10.02
திதி : 21.09.2017



இன்னுமோர் உதயம் உண்டானால்
வானில் உதிக்கும் உதயவன் போல்
மீண்டும் எம்மத்தியில் மலர்வீர்கள் என
இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

மகள் - கலைமதி, பேரன் - கௌரீசன்
எமில் நகர், மன்னார்.
071 861 3363

# சுவிஸ் தூதரக அதிகாரிகளுடன் சனநாயகப் போராளிகள் சந்திப்பு



கொழும்பு, செப். 21
சுவிஸ் தூதரகப் பிரதிநிதிகளுக்கும், சனநாயக போராளிகள் கட்சியினருக்கும் இடையிலான சந்திப்பு, திருகோணமலையிலுள்ள சனநாயகப் போராளிகள் கட்சி அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.
இந்தச்சந்திப்பின்போது தீர்வுக்கான முனைப்புகள், சமாதான சகவாழ்வியல் தொடர்பில் நிலையான நிரந்தரமான முடிவுகள் ஏற்படுத்தப்படும் வரை புலம்பெயர்ந்த தமிழர்களைத் திருப்பி அனுப்பப்படுவது நிறுத்தப்படவேண்டும் என்று சனநாயக போராளிகள் கட்சியின் சார்பில் வலியுறுத்தப்பட்டது. (5)

# பிராந்தியப் பாதுகாப்பை பலப்படுத்த அமெரிக்கா – கொழும்பு உடன்பாடு

கொழும்பு, செப். 21
இராணுவத் தளபதி மகேஷ் சேனநாயக மற்றும் அமெரிக்க இராணுவ பசுபிக் கட்டளை தளபதி ஜெனரல் ரொபட் ப்ரூக்ஸ் பிரவுன் ஆகியோரின் சந்திப்பில், இலங்கை அமெரிக்க பாதுகாப்பு உடன்படிக்கை மூலமாக வலயப் பாதுகாப்பை பலப்படுத்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.
இராணுவத் தளபதி மகேஷ் சேனநாயக உள்ளிட்ட மேல்மட்ட பாதுகாப்பு அதிகாரிகள், அமெரிக்க இராணுவ பசுபிக் கட்டளை தளபதி ஜெனரல் ரொபட் ப்ரூக்ஸ் பிரவுன்டுடன் நேற்று முன்தினம் சந்திப்பை நடத்தினர். இலங்கை மற்றும் அமெரிக்க பாதுகாப்பு உடன்படிக்கை மூலமாக வலயப் பாதுகாப்பை பலப்படுத்தவும், தேசிய பாதுகாப்புக் கொள்கையில் பன்னாட்டுச் சமூகத்தின் ஒத்துழைப்புகள் குறித்தும் இருநாடுகளும் தீர்மானம் எடுப்பது ஆரோக்கியமானதாக இராணுவத் தளபதி மகேஷ் சேனநாயக மற்றும் அமெரிக்க இராணுவ பசுபிக் கட்டளை தளபதி ஜெனரல் ரொபட் ப்ரூக்ஸ் பிரவுன் ஆகியோரின் சந்திப்பில் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது. இலங்கை மற்றும் அமெரிக்க இராணுவ உறவைப் பலப்படுத்த இருநாட்டு பாதுகாப்பு தரப்பின் நகர்வுகள் அவசியம் என்பதும் இந்தச் சந்திப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (5)

**வேலைக்கு ஆள்கள் தேவை**
புத்தக நிலையம் ஒன்றுக்கு தங்கி வேலை செய்யக் கூடிய 8 தொடக்கம் O/L வரை படித்த 21 வயதுக்கு உட்பட்ட ஆண் வேலையாள் தேவை. சம்பளம் ரூபா 15,000/= சாப்பாடு. தங்குமிடம் வழங்கப்படும்.
**077 694 6645**

**பணியாளர் தேவை**
யாழ்நகரில் இயங்கும் பிரபல
**Food City** இக்கு ஆண் பணியாளர்கள்
(பல துறைகளுக்கும்) உடன் தேவை. அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சுயவிவரக்கோவையுடன்
22.09.2017 தொடக்கம் 30.09.2017 வரை
காலை: 9.00 முதல் 12.00 மணிவரை நேரில் வரவும்.
**அன்னை நாகா பூட் சிட்டி**
175, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
மேலதிக தொடர்பு: 077 477 3481

**வேலைவாய்ப்பு**
1. Food City Manager
2. Ast, Manager
3. Store Manager
4. உற்பத்தி முகாமையாளர் (பெண்)

சுயவிவரக்கோவையுடன்
கீழ்வரும் விலாசத்துக்கு நேரில் வரவும்.
**அன்னை நாகா பூட் சிட்டி**
175, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.

**விசேட கட்டணச்சலுகையில்**
**DMI** COMPUTER EDUCATION
புதிய பிரிவுகள் ஆரம்பம்
Dip.in Information Technology
Diploma in Office Automation
Dip. in Pre-Press Desktop Publishing
Diploma in Pc Applications
Adv. Dip. in Hardware & Networking
Dip. in Video Production & Multimedia
Dip.in Web Designing & Development
Dip. in Computerized Accounting
Master Dip.in Mulitmedia & Animation
#Auto CAD, C++, JAVA#

யாழில் முதன்மை நிலை வகிக்கும்
**Spoken English**
**IELTS**
• Unique Test Tips
• Latest course Materials
**IELTS Life Skills**
திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு (A1,B1)
புதிய நடைமுறைகளுக்கு : www.itdmi.com/ls



☑ அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.
☑ Microsoft Online பரீட்சைகளூடாக Microsoft - அமெரிக்காவில் இருந்து தலைமை செயலதிகாரியின் கையொப்பத்துடனான Microsoft Specialist சான்றிதழ்கள்.
☑ இலகு தவணைக்கட்டண வசதிகள். ☑ இங்கிலாந்து, இந்திய பாடநூல்கள்.

அங்கீகரிக்கப்பட்ட முழுமையானதும் தரமானதுமான கல்விக்கு
**DMI COMPUTER EDUCATION**

| | | | | |
|---|---|---|---|---|
| No.113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, நெல்லியடி Tel.: 021-226 2470 | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் சாவகச்சேரி Tel.: 021-227 0775 | No. 130 K. K. S வீதி. NSB வங்கி அருகில் சுன்னாகம் Tel.: 021-224 1970 | No.19,A9 வீதி, (மத்திய கல்லூரி முன்பாக) கிளிநொச்சி Tel.: 021-228 5655 |


# UNIVERSITY OF JAFFNA

## FACULTY OF AGRICULCURE
## ADMISSION OF PUBLIC OFFICERS
## FOR DEGREE PROGRAMME IN B.Sc AGRICULTURE (2016/2017)

Applications will be entertained by the Dean, Faculty of Agriculture University of Jaffna for the Admission of Public Officers for Degree Program to follow B.Sc (Agriculture) as internal students for the Academic Year 2016/2017

1. The applicant should have passed the A/L Examination in Biological Science and qualified to enter the University.

   OR

   Any other qualification, as may be approved by the Faculty Board and the Senate.

   AND

2. Diploma in Agriculture (Course duration not less then 2 years) obtained from any recognized institution.
3. Minimum of 5 years experience in a capacity of not less than middle level Technical Officer Grade in the field of Agriculture after obtaining Diploma Course.

**Age:** candidate should be less than 45 years of age at the time of closing date of applications.

Application forms may be obtained from the Assistant Registrar, Admissions Branch, University of Jaffna, on a payment of Rs.100/- each at the Shroff Counter or People's Bank, University of Jaffna.

Request for application by post should be accompanied by postal order or money order for Rs.100/- drawn in favour of the Bursar, Envelope (for Rs. 5.00) not less than 9"x 4" size.

**Date of closing is 30th of October2017.**

Applications should be forwarded through the relevant Heads of Department. If not those applications will be rejected.

Selected candidates will be called to sit for a Written Test and an Oral Examination.

No application will be entertained after the closing date of application.

**18.09.2017** **REGISTRAR**



"Ammanai Saran Addainthal Athika Varamperalam"
**SHRI KANAGATHURRKAI AMMAN (HINDU) TEMPLE TRUST**
5, CHAPEL ROAD, LONDON. W13 9AE. TEL: 0208 - 810 0835
Founded on 10-08- 1991 Charity No: 1014409 0208 - 840 0485
www.ammanealing.org Email: info@ammanealing.org

**எமது ஆலயத்தில் கீழ்வரும் பணிநிலைகளுக்கான தகுதியான விண்ணப்பங்கள் வேண்டப்படுகின்றன**



பணிநிலை: **1** ஆலய சிவாச்சாரியார்
Hindu religious workers with non pastoral role

**ஆலய சிவாச்சாரியார்கள்**
(HINDU RELIGIOUS WORKERSWTTH NON PASTORAL ROLE)
**தகைமைகள்:**
- விண்ணப்பதாரி சிவாச்சாரியார் பட்டம் (குருக்கள்) பெற்றிருக்க வேண்டும்.
- தமது பணிக்காலங்களில் சிவாச்சாரியாராகப் பணியாற்றியிருக்க வேண்டும்.
- இறுதி 5 வருடங்கள் ஆலயக் குருக்களாகப் பணிசெய்திருக்க-வேண்டும்.

**கடமைகள் :** ஆகம விதிமுறைப்படி ஆலயத்தில் பூசைகள் செய்தல்
**வேதனம் :** பிரித்தானிய வேதன முறைமைகளுக்கமைவானது.
**விண்ணப்ப முடிவு திகதி : 23.10.2017**

ஆலய இணையத்தளத்தில் (www.ammanealing.org)
பணிநிலை வேண்டுகைக்கான
விண்ணப்பப்படிவம் தரவேற்றப்பட்டுள்ளது.
விருப்புடையோர் அதனைப் பதிவிறக்கி பூர்த்தி செய்து ஆலய முகவரிக்கு அனுப்பிவைக்கும்படி வேண்டுகின்றோம்.

## மகாநாயக்கர்களிடம் கூட்டாட்சியைக் கோரினால் அவர்களால் அதனை வழங்கமுடியுமா?

### இப்படிக் கேள்வி எழுப்புகிறார் துஸார எம்.பி.

கொழும்பு, செப். 21

வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் மகாநாயக்க தேரரைச் சந்தித்துக் கூட்டாட்சித் தீர்வைக் கேட்டதற்கும் அரசுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. அப்படிக் கேட்டாலும் அந்தத் தீர்வைத் தேரர்களால் வழங்க முடியுமா என்று ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் துஸார இந்துனில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுதலைக் குற்றமாக அறிவிக்கும் சட்டவரைவு தொடர்பில் எதுவும் அறியாமல் பேசுகின்றனர் மகிந்த அணியினர். அந்தச் சட்டவரைவுக்கும் படையினருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. கடந்த காலத்தில் போரில் ஈடுபட்ட எந்தவொரு படையினரும் இதனால் பாதிக்கப்படமாட்டார்கள். அவர்களுடன் இது எந்த வகையிலும் தொடர்புபடாது.

படையினர் வெளிநாடுகளுக்குச் செல்லும்போது அந்த நாடுகளால் கைது செய்யப்படுவர் என்று கூறப்படுவதும் பொய்யாகும். எதுவும் நடக்காது. படையினரை இவர்கள் திட்டமிட்டு பயமுறுத்துகின்றனர். சிங்கள மக்களுக்கு மத்தியில் வீண்பீதியைக் கிளப்பிவிடுகின்றனர். இனி இடம்பெறப் போகும் கடத்தல்கள் மற்றும் காணாமல் போதலையே அது தடுக்கும். இந்தச் சட்டவரைவை நாம் பன்னாட்டுச் சமூகத்தின் அழுத்தம் காரணமாகக் கொண்டுவரவில்லை. அவ்வாறு நாம் அழுத்தங்களுக்கு அடி பணியமாட்டோம்.

மகிந்த அணியினர் எல்லா விடயங்களையும் அரசியலாக்குகின்றனர். வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் மகாநாயக்க தேரரைச் சந்தித்ததையும் அரசியலாக்கி அதையும் அரசுடன் தொடர்புபடுத்துகின்றனர். விக்னேஸ்வரன் மகாநாயக்க தேரரைச் சந்தித்துக் கூட்டாட்சித் தீர்வைக் கேட்டதற்கும் அரசுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. அப்படிக் கேட்டாலும் அந்தத் தீர்வைத் தேரர்களால் வழங்க முடியுமா? - என்றார். (5,3)

## மகாநாயக்கர்களிடம் கூட்டாட்சித் தீர்வை தமிழர் கேட்கும் நிலைமை உருவாகியுள்ளது

### கொதிக்கிறார் மகிந்த அணி உறுப்பினர் இந்திக



கொழும்பு, செப். 21

வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் மகாநாயக்க தேரர்களிடம் சென்று கூட்டாட்சித் தீர்வைக் கேட்கும் அளவுக்கு இன்று நிலைமை மோசமாகியுள்ளது. இந்த அமைச்சர்கள் நடுவீதியில் நின்றுகொண்டு தேரர்களை அவமதிப்பதால்தான் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு மகிந்த நாடாளுமன்ற உறுப்பினர் இந்திக அநுருத்த தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டின் நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்துகொண்டே செல்கின்றது. ஒருபுறம் பொருளாதார நெருக்கடி. மறுபுறம், படையினருக்கு எதிரான போர்க்குற்ற விசாரணை. இது போதாதென்று பௌத்த தேரர்களும் அவமதிக்கப்படுகின்றனர். அமைச்சர்கள் வீதியில் நின்று தேரர்களை விமர்சிக்கும் அளவுக்கு நிலைமை சென்றுள்ளது. தேரர்கள்மீது மதிப்பு என்பது அறவே இல்லாமல் போய்விட்டது. வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் மகாநாயக்க தேரர்களிடம் போய் கூட்டாட்சித் தீர்வைக் கேட்கும் அளவுக்கு இன்று நிலைமை மோசமாகியுள்ளது. இந்த அமைச்சர்கள் தேரர்களை அவமதிப்பதால்தான் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

நாட்டுக்கு விரோதமான செயல்கள் அனைத்துக்கும் இந்த அரசு கதவைத் திறந்து வைத்துள்ளது. கூட்டாட்சியைக் கொடுப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளதால்தான் தமிழர்கள் அச்சமின்றி அதைக் கேட்கின்றனர். நாட்டைப் பிரித்துக் கொடுப்பதில் இந்த அரசு உறுதியாக உள்ளது எமக்குத் தெளிவாகத் தெரிகின்றது.

ஒற்றை ஆட்சி என்று கூறிக்கொண்டு அதன்கீழ் தமிழர்கள் கேட்கும் கூட்டாட்சியைக் கொடுப்பதற்கு அரசு திட்டமிடுகிறது. புலம்பெயர் தமிழர்களினதும் திட்டப்படியே இங்கு எல்லாம் நடக்கிறது. அரசை இயக்குவது அந்தச் சக்திகள்தான். மறுபுறம் எமது படையினர் நாளுக்கு நாள் ஆபத்தை எதிர்நோக்கி வருகின்றனர். அவர்கள் போர்க்குற்ற நீதிமன்றில் நிறுத்துவதற்கான அத்தனை ஏற்பாடுகளும் செய்யப்படுகின்றன. முன்னாள் இராணுவத் தளபதி ஜெகத் ஜயசூரியவுக்கு எதிராகப் போர்க்குற்ற வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விட்டது. இனி ஏனைய படையினருக்கு எதிராகவும் தாக்கல் செய்யப்படும் - என்றார். (5,3)

## மகிந்தவை கவிழ்க்க ரூபா 3 ஆயிரம் கோடி

### அமெரிக்கா செலவிட்டது என்கிறார் ரமேஷ் பத்திரன எம்.பி.



கொழும்பு, செப். 21

மகிந்தவின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக அமெரிக்கா 3 ஆயிரம் கோடி ரூபா செலவளித்தது என்றும் மகிந்த மீண்டும் ஆட்சிக்கு வராமல் தடுப்பதற்காகத் தொடர்ந்தும் கோடிக்கணக்கான பணத்தைச் செலவு செய்து வருகிறது என்றும் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மகிந்த அரசு செய்த பெரிய சேவைகளுடன் குறைபாடுகளை ஒப்பிட்டால் அவை மிக மிகக் குறைவு. ஒரு வருடத்தில் 75 ஆயிரம் தொழில்வாய்ப்புக்கொடுத்த வானூர்தி நிலையம் அமைத்த துறைமுகம் அமைத்த 30 வருட பயங்கரவாதத்தை ஒழித்த அரசு தான் மகிந்த அரசு. இப்படிப்பட்ட அரசைத்தான் பன்னாட்டுச் சமூகம் கவிழ்த்திருக்கின்றது.

மகிந்த ஆட்சியில் நெல் உற்பத்தி தன்னிறைவு அடைந்திருந்தது. இப்போது வெளிநாடுகளில் இருந்து இரசாயனம் கலந்த அரிசி இறக்குமதி செய்யப்படுகின்றது. எமது ஆட்சியில் மின்வெட்டு கிடையாது. இப்போது அது தினமும் இடம்பெறுகின்றது.

போரை வென்றுகொடுத்த படையினர் சிறையில் அடைக்கப்படுகின்றனர். அவர்களுக்கு எதிராக போர்க் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. படையினருக்கு எதிராக எந்நேரமும் எதுவும் நடக்கலாம் என்ற நிலைதான் உள்ளது.

மகிந்தவின் அரசை கவிழ்த்ததன் பின் நாடு இவ்வாறான ஆபத்துக்களை எதிர்நோக்கி வருகின்றது. பன்னாட்டுச் சதியின் காரணமாகவே மகிந்தவின் அரசு கவிழ்ந்தது. மகிந்தவின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக அமெரிக்கா மூவாயிரம் கோடி ரூபா செலவளித்தது. மகிந்த மீண்டும் ஆட்சிக்கு வராமல் தடுப்பதற்காகத் தொடர்ந்தும் கோடிக்கணக்கான ரூபா பணத்தை செலவு செய்து வருகிறது. இந்தத் தொகை சிங்கப்பூரில் வைத்துத்தான் கைமாறப்பட்டுள்ளது. 2014 டிசெம்பர் முதலாம் திகதி முதல் 2015 ஜனவரி 5ஆம் திகதி வரை சிங்கப்பூர் சென்று வந்த இப்போதைய அமைச்சர்களின் கடவுச் சீட்டுக்களைப் பரிசோதித்துப் பாருங்கள். உண்மை விளங்கும்.

சிங்கப்பூர் குடிமகனான அர்ஜுன மகேந்திரன் ஆட்சி மாற்றத்துக்காக ஐக்கிய தேசியக் கட்சிக்கு உதவியுள்ளார். அதனால்தான் அவருக்கு மத்திய வங்கி ஆளுநர் பதவி வழங்கப்பட்டது - என்றார். (5,3)

## அர்ஜுன் மகேந்திரனை அவமதிக்கும் கேள்விகளைக் கேட்க முடியாது

### சிங்கப்பூர் குடிமகன் என்பதை சுட்டிக்காட்டி சட்டத்தரணி தெரிவிப்பு

கொழும்பு, செப். 21

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன்மகேந்திரன் சிங்கப்பூர் குடிமகன். அவரது மதிப்புக்குறைவாக நடத்துவதை அனுமதிக்க முடியாது. மதிப்புக் குறைக்கும் விதமாகக் கேள்விகள் கேட்கப்பட்டால், விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்குவதிலிருந்து விலக வேண்டி ஏற்படும். இவ்வாறு எச்சரிக்கை பாணியில் அர்ஜுன் மகேந்திரனின் சட்டத்தரணி, பிணைமுறி விசாரணைக்குழு முன்னிலையில் தெரிவித்தார்.

கடந்த 13ஆம் திகதி அரசதலைவர் விசாரணை ஆணைக்குழு மகேந்திரனுக்கு அனுப்பிய அறிவித்தலுக்கு அமைவாகச் சாட்சியமளிக்க ஆணைக்குழு முன்பாக நேற்றுமுன்தினம் தோன்றினார். சாட்சியமளிக்க முன்னர் அவரது சட்டத்தரணி மேற்படி நிபந்தனையை ஆணைக் குழு முன்னிலையில் அறிவித்தார்.

பேப்பர்சுவல் நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேனவிடம் விசாரணைகள் நிறைவடைந்த நிலையில், அடுத்த சாட்சியாளராகப் பெயரிடப்பட்ட மகேந்திரனின் சாட்சியம் பதிவுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மகேந்திரன் சாட்சிக் கூண்டில் ஏற்றப்பட முன்னர், ஆணைக்குழுவிடம் அவரது சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா நிபந்தனை விதிக்கும் விதமாக அறிவித்தார். மகேந்திரனுக்கு பிரதானமாக 5 விடயங்களைத் தெளிவுபடுத்திச் சாட்சியமளிக்குமாறு ஆணைக் குழுவால் அனுப்பட்டுள்ள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவரது சாட்சியம் கட்டாயமானதாக இருந்தாலும் சாட்சியமளிக்க வற்புறுத்த முடியாது. அவர் ஆணைக்குழுவில் சாட்சியம் வழங்கி தனது நியாயத்தை முன்வைக்க வுள்ளார்.

அர்ஜுன்மகேந்திரன் சிங்கப்பூர் குடிமகன். சாட்சியமளிக்கும்போது அவரைக் கட்டாயப்படுத்துவதோ, குறுக்குக் கேள்விகளின் போது அவமதிக்கும் விதமாகவோ நடந்துகொள்ளக் கூடாது. அவ்வாறு அவரது மதிப்புக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் கேள்விகள் இருக்குமாயின், ஆணைக் குழுவில் சிறப்புத் தெளிவுபடுத்தல்களை முன் வைத்து விட்டு இந்த விசாரணை கட்டமைப்பில் இருந்து நாம்விலகிக்கொள்ள நேரிடும் என்று மகேந்திரனின்சட்டத்தரணி ஆணைக் குழுவில் தெளிவுபடுத்தினார்.

இதன் பின்னர் அர்ஜுன மகேந்திரன் சாட்சிக் கூண்டில் நின்றவாறு சுமார் மூன்றரை மணி நேரம் சாட்சியமளித்தார்.

பிணை முறி ஏலத்தின் போது கையாளப்பட்ட நடைமுறைகள், மத்திய வங்கி ஆளுநராகத் தான் கடமையாற்றிய போது கையாண்ட உபாயங்கள் தொடர்பில் நீண்ட விளக்கங்களை வழங்கிய மகேந்திரன், சர்சைக்குரிய பிணை முறி கொடுக்கல் வாங்கல்கள் நடந்த விதம் தொடர்பிலும் தெளிவுபடுத்தினார். மத்திய வங்கியினுடைய எந்த ஒரு இரகசியத்தையும் தனது மனைவி, மகள், மகன், மருமகன் (அர்ஜுன் அலோசியஸ்) உள்ளிட்ட எவருடனும் பகிர்ந்து கொள்ளவில்லை என்று அர்ஜுனமகேந்திரன் ஆணைக் குழு முன்னிலையில் உறுதியாகச் சாட்சிமளித்தார். (5,31)

திருகோணமலையில்

## யானை மிதித்து ஒருவர் சாவு

திருகோணமலை, செப். 21

திருகோணமலை சேருநுவர பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இலிங்கபுரம் குளத்திற்கு அருகில் யானை தாக்கியதால் ஒருவர் உயிரிழந்துள்ளதாக சேருநுவர பொலிஸார் தெரிவித்தனர்.

தனது சக நண்பருடன் இலிங்கபுரம் குளத்துக்கு அருகில் மாடுகளைத் தேடுவதற்காகச் சென்ற போது யானை தாக்கியதாகவும் அதனையடுத்து சேருநுவர வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸ் ஆரம்ப விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

அந்தப் பகுதியைச்சேர்ந்த தர்மலிங்கம் வினோவதனம் (வயது-34) என்பவரே உயிரிழந்துள்ளார். (5,45)

## தலைக்கவசம் திருடிய சந்தேகநபர்கள் ஒரு லட்சம் ரூபா பிணையில் விடுவிப்பு

### திருகோணமலையில் சம்பவம்

திருகோணமலை, செப். 21

திருகோணமலை டைக் வீதியிலுள்ள விடுதியின் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் இருந்த தலைக் கவசத்தைத் திருடிச்சென்ற இரண்டு நபர்களையும் தலா ஒரு லட்சம் ரூபா சரீரப்பிணையில் செல்லுமாறு திருகோணமலை நீதிவான் எம்.எச்.எம். ஹம்ஸா உத்தரவிட்டுள்ளார்.



பாலையூற்று பகுதியைச் சேர்ந்த ஒருவர் விடுதியின் முன்னால் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு சென்றுள்ளார். திரும்பி வந்து பார்த்தபோது அவரது தலைக்கவசம் காணாமல் போயுள்ளது. தலைக்கவசம் காணாமல் போயுள்ளதாக விடுதி உரிமையாளரிடம் தெரியப்படுத்தியதையடுத்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றினைப் பதிவுசெய்யுமாறு அவர் கூறியுள்ளார்.

தலைக்கவசம் திருடப்பட்டமை தொடர்பில் பொலிஸ் உதவிப் பொறுப்பதிகாரி எம்.எஸ்.நஜீம் தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதுடன் விடுதியில் பொருத்தப்பட்டிருந்த மறைகாணி (சிசிரிவி) காட்சிப் பதிவுகளும் பெறப்பட்டுச் சந்தேக நபர்களைத் தேடி வந்தனர்.

சந்தேக நபர்களான கும்புறுபிட்டி மற்றும் தில்லைநகர் பகுதிகளைச்சேர்ந்த இரண்டு பேரும் மோட்டார் சைக்கிளில் வந்து திருடியமை பொலிஸ் ஆரம்ப விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

தலைக்கவசம் திருடியமை தொடர்பில் கைது செய்யப்பட்ட இரண்டு பேரையும் தலா ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்லுமாறு கூறி ஒக்ரோபர் 31ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (5,45)

## ராஜிவ் காந்தி படுகொலைக்கு தமிழர்களைப் பழிவாங்கவேண்டும்

### துடியாய்த் துடிக்கிறார் முன்னாள் முதலமைச்சர் உமர் அப்துல்லா

கொழும்பு, செப். 21
ராஜிவ்காந்தி படுகொலைக்குத் தண்டனையாக, இலங்கையிலிருந்து தமிழகத்துக்கு வந்த தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்ப வேண்டும். இவ்வாறு இந்தியாவின் ஜம்முகாஷ்மீர் மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் உமர் அப்துல்லா தெரிவித்தார்.

மியன்மாரில் இருந்து வரும், ரொஹிங்ய முஸ்லிம் அகதிகளை இந்தியாவை விட்டு வெளியேற்ற வேண்டும் என்று குரல்கள் ஒலித்து வருகின்றது. இவ்வாறானதொரு நிலையிலேயே உமர் அப்துல்லா மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ரொஹிங்ய அகதிகளை வெளியேற்ற வேண்டுமாயின், திபெத்திய நாடு கடந்த அரசையும் இந்திய மண்ணில் இருந்து அகற்ற வேண்டும்.

ராஜிவ்காந்தி படுகொலைக்குத் தண்டனையாக, இலங்கையில் இருந்து வந்த தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்ப வேண்டும் - என்றார். (5)

## இலங்கையில் புற்றுநோய் அதிகரிப்பு

இலங்கையில் அனைத்து வகையான புற்றுநோய்களும் அதிகரித்துச் செல்வதாகத் தேசியப் புற்றுநோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் பணிப்பாளர் மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆண்டுதோறும் சுமார் 17 ஆயிரம் புற்றுநோயாளர்கள் புதிதாக அடையாளம் காணப்படுகின்றனர். பெண்களின் மார்பகப் புற்றுநோயே இலங்கையில் அதிகமாக இருக்கிறது.

மார்பகப் புற்றுநோயுடன் 2 ஆயிரத்து 500 பேர் வரையில் புதிதாக அடையாளம் காணப்படுகின்றனர். வாய் புற்றுநோயும் இலங்கையில் பரவலாகக் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டார். (5,33)

## பன்னாட்டுச் சமூகத்தை ஏமாற்றுகின்றார் மைத்திரி

### கூட்டமைப்புக் கடும் கண்டனம்

கொழும்பு, செப். 21
காணாமல்ஆக்கப்படுதலைக் குற்றமாக அறிவிக்கும் சட்ட வரைவை நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் இணைத்து, இறுதி நேரத்திம அதை நீக்கியுள்ளனர். அரச தலைவர் பன்னாட்டுச் சமூகத்தை ஏமாற்றுவதற்காகவே இவ்வாறு செய்துள்ளார். இதைக் கண்டிப்பதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுதலைக் குற்றமாக அறிவிக்கும் சட்டவரைவு நாடாளுமன்றத்தில் இன்று எடுத்துக் கொள்ளப்படுவதற்காக ஒழுங்குப் பத்திரத்தில் சேர்க்கப்பட்டிருந்தது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், மகிந்த அணிக்கும் இடையிலான சந்திப்பைத் தொடர்ந்து, சட்டவரைவு ஒழுங்குப் பத்திரத்திலிருந்து நீக்கப்பட்டது.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்ததாவது:

இந்தச் சட்டவரைவை ஒழுங்குப் பத்திரத்தில் இணைத்து எடுத்துக் கொள்ளாமல் இருப்பது இது இரண்டாவது தடவையாகும். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஐ.நாவுக்குச் செல்வதற்கு முன்னர் நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் சட்டவரைவு விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுவது உள்ளடக்கப்பட்டிருந்தது. இதன் பின்னர் அது நீக்கப்பட்டுள்ளது.

பன்னாட்டுச் சமூகத்தை ஏமாற்றுவதற்காகவே இவ்வாறு செய்யப்பட்டுள்ளது. அரசதலைவருடன் தாங்கள் பேசியதற்கு அமையவே இந்தச் சட்டவரைவு ஒழுங்குப் பத்திரத்திலிருந்து நீக்கப்பட்டதாக மகிந்த அணியைச் சேர்ந்த ஜி.எல்.பீரிஸ் பகிரங்கமாகத் தெரிவித்திருக்கின்றார்.

ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரின் ஆரம்பத்தில் பேசிய ஆணையாளர், இலங்கை பன்னாட்டுச் சமூகத்தைத் திருப்திப்படுத்துவதற்காகச் செயற்படக் கூடாது. உண்மையாகவே விடயங்களைச் செயற்படுத்த வேண்டும் என்று கூறியிருந்தார். இலங்கை அரசின் இப்படியான நடத்தையைத்தான் அவர் கூறியிருந்தார்.

இதேவேளை இந்தச் சட்டவரைவு தொடர்பில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, கடந்த காலத்திற்கு சட்டவரைவு செல்லுபடியாகாது. எதிர்காலத்திற்குத் தரான் செல்லுபடியாகும் என்று கூறியுள்ளார். இந்தச் சட்டவரைவு கடந்த காலத்திற்கும் தேவை. அதுதான் எங்களுக்குப் பிரயோசனமானது. எதிர்காலத்திற்கு என்று இந்தச் சட்டவரைவு மட்டுப்படுத்தப்படுவதை நாம் கண்டிக்கின்றோம் -என்றார். (5)

## வடக்கு – கிழக்கு இணைப்புக்கு எதிர்ப்பு இதனால் எனக்கு எதிராகப் பொய் பரப்புரை

### ஹிஸ்புல்லா கவலை



கொழும்பு, செப். 21
கிழக்கின் முதலமைச்சராகச் சிங்களவர் வரவேண்டும் என்று நான் வலியுறுத்தியதாக அப்பட்டமான பொய்ப் பரப்புரை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. வட - கிழக்கு இணைப்புக்கு எதிராகக் கருத்துத் தெரிவித்து வருவதால் இவ்வாறான பொய்யான தகவல்களைப் பரப்பி, மக்களைக் குழப்பி எனக்கெதிராகச் சேறு பூசும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் மீண்டும் இணைக்கப்படுவதற்கான முயற்சிகள் திரைமறைவில் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் அதற்கெதிராக முஸ்லிம் அரசியல் தலைமைத்துவம் என்ற ரீதியில் நான் மாத்திரமே பகிரங்கமாகக் கருத்துக்களை முன்வைத்து வருகின்றேன். இதனால் எனக்கெதிராகத் திட்டமிட்ட வகையில் பொய்யான பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிழக்கு மாகாணத்தில் மூவின மக்களும் ஒற்றுமையாகவும் சம உரிமையுடன் சகல அதிகாரங்களையும் பெற்று வாழ்ந்து வரும் நிலையில் வடக்கும் - கிழக்கும் இணைக்கப்பட்டால் அந்த நிலை இல்லாது போகும்.

கிழக்கில் தமிழர் ஒருவர் முதலமைச்சராக இருந்தார், தற்போது முஸ்லிம் ஒருவர் முதலமைச்சராக உள்ளார். எதிர்காலத்தில் சிங்களவர் ஒருவர் முதலமைச்சராக வர முடியும் என்ற ரீதியில் நான் திங்கட்கிழமை ஏறாவூரில் தெரிவித்த கருத்தைச் சிலர் திரிவுபடுத்திக் கிழக்கில் சிங்களவர் ஒருவர் முதலமைச்சராக வர வேண்டும் என்று நான் வலியுறுத்தியதாகச் சில ஊடகங்கள் மூலம் அப்பட்டமான பொய்ப் பரப்புரை மேற்கொள்ளப்பட்டிருந்தன.

கிழக்கு மாகாணத்தை யார் ஆள வேண்டும் என்பதைக் கிழக்கு மக்கள் தான் தீர்மானிப்பார்கள். அதனை வெளிச்சக்திகள் தீர்மானிக்க முடியாது - என்றார். (5)

## 2020இல் மின் பற்றாக்குறையை இலங்கை எதிர்கொள்ளும் அபாயம்!

கொழும்பு, செப். 21
2020ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கை கடுமையான மின்பற்றாக் குறையை எதிர்கொள்ளும் என்று பொதுவசதிகள் ஆணைக்குழு எச்சரித்துள்ளது.

மின்சார உற்பத்தி, பயன்பாடு, உற்பத்தித் திறன் அதிகரிப்பு மற்றும் மின் சேமிப்பு என்பன தொடர்பில் பொது வசதிகள் ஆணைக்குழு அண்மையில் ஆய்வு நடத்தியிருந்தது.

அதிகரித்து வரும் மின் தேவைக்கேற்ப மின்சார உற்பத்தியில் புதிய வழிமுறைகளைக் கண்டறிவது இதன் பிரதான நோக்காமாகும். இலங்கையில் மின்னுற்பத்தியை அதிகரிப்பதற்கான முறையான செயற்பாடுகள் இன்மையால் 2020ஆம் ஆண்டுக்குப் பின்னர் கடுமையான மின் பற்றாக்குறை ஏற்படும் அபாயம் இருப்பதாக குறித்த ஆய்வில் தெரியவந்துள்ளது.

மின் உற்பத்தியில் காணப்படும் பற்றாக்குறைக்கான தீர்வாக கடந்த பத்தாண்டுகளில் உருவாக்கப்பட்ட அனல் மின் நிலையங்கள் மின்சாரத் தேவையின் வெறும் 6 சதவீதத்தை உற்பத்தி செய்வதும் இதன்போது தெரியவந்துள்ளது. அவ்வாறான மின் நிலையங்களின் பாரிய பராமரிப்புச் செலவு காரணமாக ஒட்டுமொத்த மின் உற்பத்திச் செலவு அதிகரித்திருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

இதனை நிவர்த்தி செய்வதாயின் நீண்ட கால அடிப்படையிலான மின் உற்பத்தித் திட்டங்கள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும் பொது வசதிகள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது. (5)



## பாகிஸ்தானுடன் நெருக்கமான உறவு தொடரும்

### மைத்திரி உறுதி

கொழும்பு, செப். 21
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், பாகிஸ்தான் தலைமை அமைச்சர் சாஹிட் கஹாகான் அபாசிக்கும் இடையில், நியூயோர்க்கில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக, நியூயோர்க் சென்றுள்ள இரண்டு நாடுகளின் தலைவர்களும், ஐ.நா. தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தினர். சந்திப்பின் போது, இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்வதற்கு இணக்கம் காணப்பட்டது.

தீவிரவாதம், இயற்கை இடர்களால் இலங்கை நெருக்கடிகளை எதிர்கொண்டபோது, பாகிஸ்தான் வழங்கிய உதவிகளுக்கு, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இந்தச் சந்திப்பின் போது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.

இருதரப்பு வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பாதுகாப்பு ஒத்துழைப்பை விரிவாக்கிக் கொள்வதற்கான வாய்ப்புகள் இருப்பதை இருநாடுகளின் தலைவர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இந்தச் சந்திப்பின்போது கருத்து வெளியிட்ட பாகிஸ்தான் தலைமை அமைச்சர் அப்பாசி, இலங்கை மிகமுக்கியத்துவம் வாய்ந்த நாடாகப் பாகிஸ்தான் கருத்தில் கொண்டுள்ளதாகவும், இலங்கையுடன் இருதரப்பு உறவுகளுக்கு மிகப் பெரிய முக்கியத்துவம் கொடுத்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

'சார்க் அமைப்பின் மிக முக்கியமான நாடாக இலங்கையை நாங்கள் நம்புகிறோம். பிராந்திய அமைப்பில் இலங்கை முக்கியமான பங்கை ஆற்ற முடியும். இலங்கையுடன் வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகளை மேலும் விரிவாக்கிக் கொள்ள நாம் விரும்புகிறோம்' என்றும் பாகிஸ்தான் தலைமை அமைச்சர் தெரிவித்துள்ளார். (5)

## போலிப் பத்திரங்கள் தயாரித்த நிறுவனம் பொலிஸாரால் முற்றுகை

கொழும்பு, செப். 21
போலிச் சாரதி அனுமதிப்பத்திரங்களைத் தயாரித்து விநியோகித்து வந்த நிறுவனத்தை, திட்டமிடப்பட்ட குற்றங்களைத் தடுக்கும் பொலிஸ் பிரிவினர் நேற்றுமுன்தினம் முற்றுகையிட்டுள்ளனர்.

நீர்கொழும்பு வீதி, மாபொல பகுதியில் இந்த நிறுவனம் செயற்பட்டு வந்துள்ளது.

நிறுவனத்திலிருந்த 3 பேர் கைது செய்யப்பட்டதுடன், அங்கிருந்து பெருந்தொகையான போலிச் சாரதி அனுமதிப் பத்திரங்கள் மற்றும் போலி அரச முத்திரைகள் உள்ளிட்ட பொருள்கள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளது. (5,33)

## சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகலவை மன்றில் முன்னிலையாகுமாறு கட்டளை

கொழும்பு, செப். 21
சட்டம் மற்றும் ஒழுங்குத்துறை அமைச்சர் சாகல ரத்நாயக்க, பாதுகாப்பு அமைச்சின் செயலர் கபில வைத்தியரத்ன, பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் சட்டமா அதிபர் உள்ளிட்ட 6 பேரையும் அடுத்த ஆண்டு மே மாதம் 2 ஆம் திகதி உயர்நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 7ஆம் திகதி அரச தலைவர்** செயலகத்திற்கு அருகில் வைத்து சிறப்புத் தேவையுடைய இராணுவத்தினர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

தமது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகச் சிறப்புத் தேவையுடைய இராணுவ வீரரான நிஷாந்த மிஹிராஜ் மனுத்தாக்கல் செய்திருந்தார். மனு நேற்று விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போதே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (5.33)

# மாராவியில் கடும் போர்

மணிலா, செப். 21
பிலிப்பைன்ஸின் மாராவி தீவு ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகளின் பிடிக்குள் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் விழுந்தது. தீவை மீட்பதற்கான போர் தற்போது கடும் முனைப்பில் நடைபெற்று வருகிறது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
பிலிப்பைன்ஸின் மாராவி தீவு கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடிக்குள் சென்றது. மாராவில் தீவில் வசித்துவந்த பாதிரியார்கள், கிறிஸ்தவ மக்கள் பலரையும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு பிணையக் கைதிகளாக பிடித்து வைத்திருந்தது. நகரை மீட்கும் போர் தொடர்ந்து வந்தது. எனினும் மாராவியை முழுமையாகக் கைப்பற்றிவிட முடியவில்லை. மாராவி மீட்கப்படுகிறது என்று பலமுறை தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் இன்னும் மீட்புப் பணிகள் முழுமை பெறவில்லை.
இந்த நிலையில் தற்போது அங்கு கடும் போர் நடைபெற்று வருகிறது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)





# அமெரிக்காவின் உதவியை எதிர்பார்க்கப் போவதில்லை

பங்களாதேஷ் அறிவிப்பு

வொஷிங்டன், செப். 21
ரோஹிங்ய அகதிகளுக்காக அமெரிக்காவிடமிருந்து எந்த உதவியையும் எதிர்பார்க்கவில்லை என ட்ரம்பைச் சந்தித்த பின்னர் பங்களாதேஷ் தலைமை அமைச்சர் ஹசினா தெரிவித்தார்.
ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக பங்களாதேஷின் தலைமை அமைச்சர் ஹசினா அமெரிக்கா சென்றுள்ளார். அங்கு அவர் ட்ரம்பைச் சந்தித்துப் பேசினார். அதன் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அமெரிக்காவிடம் இருந்து எந்த உதவியையும் எதிர்பார்க்கவில்லை என்று அவர் தெரிவித்தார்.
"அகதிகள் பிரச்சனையில் அமெரிக்காவிடமிருந்து எந்தவித உதவியையும் எதிர்பார்க்கவில்லை. அமெரிக்கா ஏற்கனவே அகதிகளை அனுமதிக்கமாட்டோம்எனத் தெரிவித்துவிட்டது. அதன்பின்னர் அமெரிக்காவிடம் குறிப்பாக அமெரிக்க அதிபரிடம் எந்த உதவியை எதிர்பார்க்க முடியும்? அவர்கள் ஏற்கனவே தங்கள் முடிவை எடுத்து விட்டார்கள். 5 லட்சம் பேருக்கு உணவளிப்பது எங்களுக்கு பிரச்சனை இல்லை", என ஹசினா மேலும் தெரிவித்தார். (ம)


# வடகொரியாவின் தூதரை வெளியேற்றுகிறது ஸ்பெய்ன்



மட்ரிட், செப். 21
ஸ்பெய்னுக்கான வடகொரியத் தூதுவரை நாட்டைவிட்டு வெளியேறுமாறு உத்தரவிட்டுள்ளது ஸ்பெய்ன்.
பன்னாட்டு சட்டதிட்டங்களை மீறிய வடகொரியாவின் அணுவாயுதச் சோதனைகளை கடுமையாக எதிர்க்கும் நாடுகளில் ஸ்பெய்னும் ஒன்று. வடகொரியாவுக்கு எதிராக காலாகாலமாக ஸ்பெய்ன் கருத்துத் தெரிவித்து வருகிறது. இந்த நிலையில் அந்த நாடு தற்போது தனக்கான வடகொரியத் தூதுவரை நாட்டை விட்டு வெளியேறுமாறு உத்தரவிட்டுள்ளது. இந்த மாத இறுதிவரை காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளது. (ம)

# வடகொரியாவை
# முழுமையா…
# அழிப்போ…

ஐ.நா. சபையில் வைத்து ட்ரம்ப்…



வொஷிங்டன், செப். 21
"அணுவாயுதப் பயன்பாட்டைக் கைவிடாவிட்டால் வடகொரியாவை அழிப்பதை விட வேறு வழிகள் எங்களுக்கு இல்லை" இவ்வாறு தெரிவித்தார் ட்ரம்ப். ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் வைத்து இந்தக் கருத்தை அவர் வெளிப்படுத்தியமை பல அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.
ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டம் அமெரிக்காவில் தற்போது நடைபெற்று வருகிறது. உலக நாடுகளின் தலைவர்கள், பிரதிநிதிகள் என ஏராளமானவர்கள் நிகழ்வில் கலந்துகொண்டுள்ளனர்.
அமெரிக்க அதிபர் ட்ரம்ப் நேற்று முன்தினம் அங்கு உரையாற்றினார். அமெரிக்க அதிபராகப் பொறுப்பேற்ற பின்னர் ஐக்கிய நாடுகள் சபையில் ட்ரம்ப் உரையாற்றிய முதல் சந்தர்ப்பமாக இது அமைந்தது.
வடகொரியா நடத்திவரும் தொடர் ஏவுகணைகள் தொடர்பாக உலகத் தலைவர்களிடையே முழங்கித் தள்ளியுள்ளார் ட்ரம்ப்.
"வடகொரியாவின் பொறுப்பற்ற…

அணு… டம் விட… னைக… திற்கே… அமெரி… றால்… லும் அ… ஒரு வழ… வடகொ… அழிக்க… தேவை… நம்புகி… பொறுத்… நகர்வுக… மேலும்…



# ஈரானின் ஏவுகணையை வீழ்த்தியது இஸ்ரேல்

டெல்அவிவ், செப். 21
ஈரான் நாட்டில் தயாரிக்கப்பட்ட பாட்ரியாட் ஏவுகணையை இஸ்ரேல் நேற்று முன்தினம் சுட்டு வீழ்த்தியுள்ளது.
பலஸ்தீனம் இஸ்ரேல் எல்லைப் பகுதியில் இயங்கிவரும் ஹிஸ்புல்லா ஆயுதக்குழுவால் இஸ்ரேலை நோக்கி செலுத்திய ஏவுகணையே தம்மால் சுட்டுவீழ்த்தப்பட்டது என்று இஸ்ரேல் மேலும் அறிவித்தது. (ம)

# சைக்கிளில் உலகைச் சுற்றி…

பிரிட்டனைச் சேர்ந்த மார்க் பியோமாண்ட் என்பவர் சைக்கிள் மூலம் 79 நாட்களில் உலகத்தை வலம் வந்து புதிய உலக சாதனையைப் படைத்துள்ளார். பிரிட்டன் நாட்டைச் சேர்ந்த மார்க் பியோமாண்ட் என்பவர் சைக்கிள் மூலம் பல நாடுகளுக்குச் சென்று சாதனை படைத்து வந்தார். இந்நிலையில் 79 நாட்களில் உலகம் முழுவதும் சுற்றி வந்து புதிய உலக சாதனையைப் படைத்துள்ளார்.
மார்க் கடந்த ஜூலை மாதம் 2ஆம் திகதி பரிஸில் தனது பயணத்தைத் தொடங்கினார். அவர் தினமும் 16 மணிநேரம் சைக்கிளில் பயணம் செய்…



வார். இதற்காக… ளவில் விழிப்ப… தார். 76 நாட்… பயணம் செய்… வானூர்தியில்… மார்க் சரியாக… நேரம் 14 நிமிட… சுற்றி வந்துள்ள…

# “கூட்டுச் சதி”

“அ.தி.மு. கழக அரசை கவிழ்ப்பதற்காக தினகரனும், ஸ்டாலினும் இணைந்து கூட்டுச் சதி மேற்கொண்டுள்ளனர்” இவ்வாறு தெரிவித்தார் தமிழக அமைச்சர் ஜெயக்குமார்.
அ.தி.மு. கழகத்தில் இருந்து தினகரன் நீக்கப்பட்டதை அடுத்து அவருக்கு ஆதரவான 18 சட்டமன்ற உறுப்பினர்கள் கட்சித்தாவல் சட்டத்தின் கீழ் பதவி நீக்கப்பட்டனர். இதனால் தினகரனும், ஸ்டாலினும் முதல்வர் எடப்பாடிக்கும் அவரது தரப்பினர்களுக்கும் எதிராக கடும் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர். இந்த நிலையில் இவர்கள் இருவரும் இணைந்து அ.தி.மு. கழக அரசைக் கவிழ்க்கச் சதி செய்கின்றனர் என்று கொதித்துள்ளார் ஜெயக்குமார். (ம)

# மெக்சிக்கோவில் நிலநடுக்க…

மெக்சிக்கன் சிற்றி, செப். 21
மெக்சிக்கோவில் நேற்றுமுன்தினம் 7.1 ரிச்டர் அளவில் ஏற்பட்ட பெரும் நிலநடுக்கத்தை அடுத்து 225 பேர் உயிரிழந்தனர். மேலும் நூற்றுக் கணக்கானவர்கள் காயமடைந்துள்ளதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.
மெக்சிக்கோ நேரத்தின்படி நேற்றுமுன்தினம் மதியம் இந்த நில அதிர்வு ஏற்பட்டது. தலைநகர் மெக்சிக்கன் சிற்றியில் தாக்கம் மிகையாக உணரப்பட்டது. மிகப்பெரும் கட்டடங்களும் சீட்டுக் கட்டாக சரிந்து தரைமட்டமாயின. நேற்று மதியம் வெளியான தகவலின்படி உயிரிழப்பு எண்ணிக்கை 275 ஆக அதிகரித்துள்ளது. சுமார் 300 பேர் வரை மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். பலரின் நிலைமை கவலைக்கிடம் என்பதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது என்று கருதப்படு… கிறது. நிலநடுக்… முழுவது… லட்சம்… கியுள்ள… யுள்ளன… மெக்சிகோ… ளுக்கு அ… கல் தெரி…

# ...வை
# ...ாக
# ...ாம்

## ...ப் எச்சரிப்பு



அணு ஆயுதங்கள் மற்றும் கண் ...டம் விட்டு கண்டம் பாயும் ஏவுக ...ணைகள் ஒட்டுமொத்த உலகத் ...திற்கே எச்சரிக்கையாக உள்ளது. அமெரிக்காவிற்கு ஆபத்து என் ...றால், வடகொரியாவை முற்றி ...லும் அழிப்பதை தவிர்த்து எந்த ஒரு வழியும் கிடையாது.

வடகொரியாவை முற்றிலும் அழிக்க முடியும். ஆனால் இது தேவையாக இருக்காது என நம்புகிறோம். ஐ.நா. சபையைப் பொறுத்து எமது அடுத்த கட்ட நகர்வுகள் இருக்கும்" என ட்ரம்ப் மேலும் தெரிவித்தார். (ம)

## ...ற்றிச் சாதனை



...தற்காக காலை 3:30 மணிய... விழிப்பதாக மார்க் தெரிவித் ...76 நாட்கள் இவர் சைக்கிள் ...ம் செய்தார். மீதி 3 நாட்கள் ...ர்தியில் பயணம் செய்தார். ...சரியாக 78 நாட்கள் 14 மணி ...14 நிமிடங்களில் உலகத்தைச் ...வந்துள்ளார். (ம)



ஏதேன்ஸில் அண்மையில் வானூர்திகளின் சாகசங்கள் நடைபெற்றன. நூற்றுக் கணக்கானவர்கள் இந்த வேடிக்கைகளை நேரில் சென்று பார்வையிட்டனர் என்று பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. (ம)

# ரொஹிங்யர்களின் கிராமங்கள் இயல்பு நிலையில் உள்ளனவாம்



நைபிட்டோ, செப். 21

"மியன்மாரில் ரொஹிங்கர்கள் வாழும் பகுதிகளில் நிலவிவந்த பதற்றம் குறைந்து தற்போது அங்கு இயல்புநிலை நிலவுகிறது" என்று கருத்துத் தெரிவித்தார் மியன்மார் அரசின் தலைமை ஆலோசகர் ஆங் சாங் சூகி.

மியன்மார், பௌத்தர்களை பெரும்பான்மை இனமாகக் கொண்ட நாடு. இங்கு சிறுபான்மை மக்களாக ரொஹிங்ய முஸ்லிம்கள் வாழுகின்றனர். கடந்த 25ஆம் திகதி ரொஹிங்ய முஸ்லிம்களின் உரிமைக்காகப் போராடிவரும் ஆயுதக் குழு மியன்மார் சிப்பாய்கள் மீது தாக்குதல் நடத்தியதில் 10 சிப்பாய்கள் உயிரிழந்துள்ளனர். இதையடுத்து ரொஹிங்யர்கள் மீதான அடக்குமுறைகள் அதிகரித்துள்ளன. இதுவரை சுமார் 5 லட்சம் ரொஹிங்யர்கள் அகதிகளாக பங்களாதேஷுக்கு சென்றுள்ளனர். இந்த விவகாரம் தொடர்பில் மியன்மாருக்கு எதிராக அழுத்தங்கள் அதிகரித்துள்ள நிலையில் ரொஹிங்யர்களின் பகுதிகளில் அமைதி திரும்புகிறது என்று தெரிவித்தார் சூகி.

"மியன்மாரில் இருந்து பல முஸ்லிம்கள் வெளியேறுவது குறித்த உண்மையான காரணத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இங்கிருந்து வெளியேறியவர்களையும் பங்களாதேஷில் அகதிகளாக தங்கியுள்ளவர்களையும் உரிய சரிபார்ப்புக்கு பின்னர் தங்கள் நாட்டில் அனுமதிக்க மியான்மர் அரசு தயாராக இருக்கிறது.

மியான்மரில் ரோஹிங்ய மக்கள் வாழும் 50 சதவீதம் கிராமங்கள் எவ்வித பாதிப்புக்கும் உள்ளாகவில்லை. பெரும்பாலான முஸ்லிம்கள் எவ்வித பாதிப்பும் இன்றி வாழ்ந்து வருகின்றனர். அங்கு மக்கள் இயல்பாக வாழ்ந்து வருவதை யார் வேண்டுமானாலும் சென்று பார்வையிடலாம்' எனச் சூகி மேலும் தெரிவித்தார். (ம)





### பொருளாதாரத் தடைகளால் ஒருபோதும்

# பணியாது வடகொரியா சீனா கருத்துப் பகிர்வு

பீஜிங், செப். 21

வடகொரியாவை பொருளாதாரத் தடைகளின் மூலம் அச்சுறுத்தி கொரிய தீபகற்பத்தில் அமைதியை ஏற்படுத்த முடியாது என சீனா கருத்து தெரிவித்துள்ளது.

பன்னாட்டு சட்டதிட்டங்களை மீறி மேற்கொண்ட ஏவுகணைச் சோதனைகளை அடுத்து வடகொரியா மீது ஏகப்பட்ட பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது ஐக்கிய நாடுகள் சபை. அமெரிக்கா, ஜப்பான், தென்கொரியா ஆகிய நாடுகள் கூட்டாக இணைந்தும் சில தடைகளை விதித்துள்ளன. இதன்படி வடகொரியாவின் முக்கிய ஏற்றுமதிகளான நிலக்கரி, இரும்பு, கனியவளங்கள் ஆகியன முடக்கப்பட்டுள்ளன.

மேற்கொண்டு சோதனைகளை நடத்தினால் இராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமெரிக்கா மிரட்டலும் விடுத்துள்ளது. இதையடுத்தே சீன அயலுறவுத்துறை இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளது.

'வடகொரியாவின் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகளாலும், வடகொரியா மீது இராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிப்பதாலும் வடகொரியாவைக் கட்டுப்படுத்த முடியாது. சிறந்த முறையில் பேச்சு நடத்துவதன் மூலமே நிரந்தரத் தீர்வு காணலாம் என்று சீனா கருதுகிறது" என்று சீனாவில் அயலுறவுத் துறை அமைச்சின் செய்தித் தொடர்பாளர் லு காங் தெரிவித்தார். (ம)

> “
> மேற்கொண்டு சோதனைகளை நடத்தினால் இராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமெ,ரிக்கா மிரட்டலும் விடுத்துள்ளது.

# ...கம்: 275 பேர் உயிரிழப்பு

...கிறது.

...நிலநடுக்கம் ஏற்பட்டுள்ள பகுதிகளில் மின்சாரம் ...முழுவதுமாகத் தடைப்பட்டுள்ளது. சுமார் 38 ...லட்சம் வீடுகள் மின்சாரம் இன்றி இருளில் மூழ்...கியுள்ளன. 44 கட்டடங்கள் தரைமட்டமாகி...யுள்ளன.

...மெக்சிகோ நிடுநடுக்கத்தில் உயிரிழந்தவர்க...ளுக்கு அமெரிக்க அதிபர் ட்ரம்ப், ஆழ்ந்த இரங்...கல் தெரிவித்துள்ளார். இதுகுறித்து ருவிட்டரில் அவர் செய்தி வெளியிட்டுள்ளார். அதில், 'மெக்சிகோ சிற்றி மக்களை கடவுள் ஆசீர்வதிக்க வேண்டும். உங்களுக்கு நாங்கள் துணையாக இருப்போம்' எனப் பதிவிட்டுள்ளார்.

மெக்சிகோவில் கடந்த 1985ஆம் ஆண்டு அதாவது 32 ஆண்டுகளுக்கு முன் இதே நாளில் மெக்சிகோ சிட்டியில் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டு ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)



உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# அமைதியை ஏற்படுத்த இன்று உறுதி ஏற்போம்

ஒக்டோபர் 21 ஆம் திகதி உலக அமைதி தினம். அதாவது இன்று அமைதி தினம். உலக நாடுகள் தமக்கிடையிலும் ஒவ்வொரு நாட்டின் உள்ளேயும், அமைதியையும் அதற்கான கருத்துருவாக்கத்தையும் வலுப்படுத்த வேண்டும் என்பதற்காக ஐக்கிய நாடுகள் பொதுச்சபை இந்தத் தினத்தை அறிவித்தது.

ஐ.நா. பொதுச்சபையில் 1981 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் ஊடாக இந்தத் தினம் அறிவிக்கப்பட்டது. மோதல்கள் இடம்பெறும் இடங்களில் தற்காலிகப் போர்நிறுத்தத்தைக் கடைப்பிடிப்பதாகவும் முரண்பாடுகள், சச்சரவுகள் என்பவற்றை ஒரு நாளுக்கு நிறுத்தி வைப்பதாகவும் அமைதி தினம் கடைப்பிடிக்கப்பட்டு வந்தாலும், அதன் உண்மையான நோக்கமான அமைதியை நாடுகளுக்குள்ளும் நாடுகளின் இடையிலும் ஏற்படுத்த முடியவில்லை என்பதே யதார்த்தம்.

போர், சச்சரவுகள், மோதல்கள், உள்நாட்டுப் பிணக்குகள், தீவிரவாதத் தாக்குதல்கள் என்று உலகின் எல்லாப் பாகங்களிலும் அமைதியின்மை தலைவிரித்தாடுகிறது. மனிதர்கள் மத்தியில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகள், இணக்கமின்மைகள் அமைதிக்குத் தொடர்ந்தும் குந்தகமாகவே இருக்கின்றன.

போர் நிறைவுக்கு வந்துவிட்டாலும் இலங்கையிலும் அமைதி திரும்புவதாக இல்லை. தமிழ் சிங்கள முரண்பாட்டுக்கான காரணங்களுக்கு இன்னமும் தீர்வு காணப்படாத நிலையில் நிரந்தர அமைதி எட்டாக்கனியாகவே உள்ளது. போர் அற்ற ஒரு நிலைமை மட்டுமே அமைதியைக் குறித்துவிடாது. ஆயுத மோதல் தணிந்ததற்கான அடையாளம் மட்டுமே போர் முடிவுக்கு வந்தமை. அரசியல் மற்றும் சமூக பொருளாதார மோதல்கள் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன.

தற்போது கிடைத்திருக்கின்ற வாய்ப்பைப் பயன்படுத்தி, இந்தத் தற்காலிக அமைதியை நிரந்தர அமைதியாக்குவதற்கான நல்லிணக்க முயற்சிகளைக் கொழும்பு எடுக்கத் தவறியிருக்கின்றமையே நிலமைகளை மேலும் மோசமானதாக்கி வருகின்றது. விரைவில் நிரந்தர அமைதி ஏற்படுமா என்கிற அச்சம் தொடர்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் நேற்றுமுன்தினம் தமிழ்ப்பத்திரிகை ஆசிரியர்களைச் சந்தித்துப் பேசியபோது தெரிவித்திருக்கும் கருத்துக்கள் நிலமையின் மோசமான நிலமையை வெளிப்படுத்துகின்றன.

2016 இறுதிக்குள் ஒரு நிரந்தரத் தீர்வு வந்துவிடும் என்று இந்த அரசைப் பலமாக நம்பியவர் அவர். அது தவறிப்போனபோது 2017 இறுதிக்குள் அந்தத் தீர்வை அடைந்துவிட வேண்டும் என்று பாடுபட்டவர். ஆனால், அதுவும் இப்போது சாத்தியமில்லை என்கிற நிலைக்கு வந்துவிட்ட பின்னர், அரசியல் தீர்வு ஒன்றும் வரும் ஆனால் வரலாமலும் போகலாம் என்று தெரிவித்திருக்கிறார்.

ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து ஆட்சியைப் பிடித்திருக்கின்ற இன்றைய அரசியல் சூழல் வரலாற்று வாய்ப்பு என்று நம்பியிருந்த சம்பந்தரே, இந்தக் கட்சிகளின் போக்கால் மனந்தளர்ந்திருப்பது வெளிப்படையாகின்றது. நம்பிக்கையுடன் செயற்பட வேண்டும் என்று அவர் மீண்டும் மீண்டும் கூறினாலும் கூட நம்பிக்கையிழந்து செல்லும் தமிழ் மக்களுக்குத் தெம்பூட்டக்கூடிய எதனையும் அவரால் கூறமுடியவில்லை என்பதே அரசியல் யதார்த்தம்.

இதற்கு முந்தைய எல்லா அரசுகளையும் போலவேதான் உலக அரங்கின் முன்னாலும் சரி தமிழ் அரசியல் அரங்கின் முன்னாலும் சரி தாம் தெரிவித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் விடுவது, காலத்தை இழுத்தடித்தே தமக்கான காரியங்களைச் சாதித்துக்கொள்வது என்றே இந்த அரசும் நடந்துகொள்கிறது.

புதிய அரசமைப்பு தொடர்பான இடைக்கால அறிக்கை இன்று, உலக அமைதி தினத்தில் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டாலும்கூட அது நிரந்தர அமைதியை ஏற்படுத்துவதற்கான நம்பிக்கையை வழங்கவில்லை. அந்த இடைக்கால அறிக்கையுடன் பின்னிணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ள அரசியல் கட்சிகளின் அறிக்கைகள் இடையே அரசமைப்புச் சபையாக மாற்றப்பட்டுள்ள நாடாளுமன்றத்தில் இணக்கம் ஒன்றை எட்டுவது கடினம் என்பதை கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் ஏற்றுக்கொண்டுள்ளார்.

இப்படி நிரந்தர அமைதி ஒன்றை எட்டுவதற்கான சாத்தியப்பாடுகள் மிகக் குறைவான நிலையிலேயே இந்த ஆண்டு உலக அமைதி தினத்தை கடைப்பிடிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம் இலங்கை வாழ் மக்கள் எல்லோரும். இன்றைய தினத்தில் நிரந்தர அமைதியை விரைவில் ஏற்படுத்துவோம் என்கிற உறுதிமொழியை அரசியல்வாதிகளும் மக்களும் எடுத்துக்கொண்டால் மட்டுமே நாட்டில் அமைதி சாத்தியப்படும். எனவே இன்றைய தினத்தில் நிரந்தர அமைதியை ஏற்படுத்துவதற்காக **அனைவரும் உறுதியேற்போம்!**

### திலீபனவன் வரலாற்றில் ஆறாம் நாள்

# சோர்வுற்ற நிலையில் சோர்விலாப் பயணம்



விதுரன்

பசித் தீயின் தகிப்பு, விடுதலையின்றி அகிம்சையின் கரங்களை இறுகப் பற்றியபடியே நீள் பயணம் கொண்டது. ஆறாவது நாளின் விழிகை அங்கலாய்ப்போடு அந்தரித்தது. இயற்கையின் இருள் புலரும் முன்பே உரிமையின் பருக்கையை உண்ணப் புறப்பட்ட பிள்ளையவன் திலீபன் அதிகாலைப் பொழுதிலேயே தாயக விடுதலையை எண்ணிப் படுக்கையை விட்டு எழுந்திருந்தான். நீராகாரம் கூட இல்லாத தியாகப் பயணம் அவனிடத்தில் அதிக சோர்வைத் தந்திருந்தது. ஆனாலும் வீரமும் இலட்சிய வேள்வியும் வதனத்தில் பொதிந்திருந்தது. ஈழப் பயிராக செந்தளிப்பாய் கொழித்திருந்தது.

**அகிம்சை..! அகிம்சை..! அகிம்சை..! இந்த வார்த்தைகள் தான் எங்கள் தாரக மந்திரமாக இருந்தன. திலீபன் என்ற தாயகத்துப் பிள்ளையவன் தியாப தீபமாய் சுடர்கொண்டு பற்றிய வாசகமும் அதுவே.**

#### ஆறாவது நாள்

புனித பயணத்தின் ஐந்தாம் நாள் இருள் கவிதல் என்பது திலீபனின் தியாக ஒளியால் பிரகாசித்துக்கொண்டிருந்தது. ஆறாவது நாள் ஆரம்பமும் அவனது உருக்கமும் ஏதோ ஒன்றைச் சுட்டி நின்றன. ஆறாவது நாள் காலையிலிருந்து நல்லூர்க் கந்தசாமி கோவிலில் திலீபன் பெயரில் நூற்றுக் கணக்கான அர்ச்சனைகள் செய்யப்பட்டு அவை பொதுமக்கள் மூலம் மேடைக்கு வந்த வண்ணமிருந்தன. பிற்பகல் மூன்று மணியிலிருந்து யாழ் குடாநாட்டின் பல பாகங்களிலும் இருந்து அதிக அளவான மக்கள் பஸ்களில் வந்து நல்லூர் ஆலயச் சூழலில் ஒன்று திரண்டனர். எங்கு பார்த்தாலும் மக்கள் அலை கரைபுரண்டது. தளபதி கிட்டு அண்ணாவின் தாய், திலீபனைவாரிஅணைத்து உச்சி முகர்ந்தாள். அவள் அழுத காட்சி நெஞ்சை உருக்கியது. துரோகிகள் வீசிய வெடிகுண்டு மூலம் தன் மகன் ஒரு காலை இழந்த போனது பற்றி அந்தத் தாய் கூறிய வார்த்தைகள் மகத்தானவை. "ஒரு கால் போனால் என்ன..? இன்னும் ஒரு கால் இருக்கு. இரண்டு கைகளிருக்கு. அவன் கடைசி வரையும் போராடுவான்." என்ற உத்வேகம் இன்னமும் எம் செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

#### அகிம்சையின் விளைவு

ஆம், முப்பது வருடங்களாக எமது மூத்த அரசியல் தலைவர்கள் தந்தை 'செல்வா' தலைமையில் முயன்றும் முடியாத நிலையில்தானே, தமிழினத்தை அழிவிலிருந்து காப்பாற்றிட வேறு வழியின்றி ஆயுதம் ஏந்தினோம் என்று பொருள் உரைத்திருந்தது. உண்மையில் நாம் அகிம்சைக்கு எதிரானவர்கள் அல்லர். ஆனால் எம் எதிரி அகிம்சையைப்பற்றி ஒன்றுமே தெரியாதவன். அவனுக்கு அது புரியாதது. அவன் தெரிந்து கொண்டதெல்லாம் கத்தியும், துப்பாக்கியும்தான். ஒருவன் கத்தியையும், துப்பாக்கியையும் தனது பலமாக எண்ணும் போது அவனெதிரில் நிற்பவனால் என்ன செய்ய முடியும்? நீண்ட கசப்பான அனுபவங்கள் தான் எமது கரங்களில் துப்பாக்கிகளைத் தந்தன. 1948 ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்ததாகக் கூறப்படும் நாளில் இருந்து, சிங்கள இனவாதிகளால் தமிழர்கள் காலத்துக்குக் காலம் அழிக்கப்பட்டு வருகின்ற கொடுமைகள் தீரவில்லை. இன்னமும் முடிந்தபாடில்லை. எப்பொழுதுதான் முடியும்...? தங்கத் தமிழர்தம் வாழ்வில் பொங்கும் மகிழ்வும், பூரிப்பும் எப்பொழுது மலரும்...?


#### மனிதநேயமற்ற காந்திதேசம்

அண்ணல் காந்தி அகிம்சைப் போரிலே வெற்றி கண்டார் என்றால் அதற்கு அவர் கையாண்ட அகிம்சைப் போராட்டங்கள் மட்டும் காரணமல்ல. காந்தியின் போராட்டத் தளம் இந்திய மண்ணிலே அமைவு பெற்றிருந்தது. காந்தியின் போராட்டத் தளத்திலே மனிதநேயம் மிக்க ஆங்கிலேயர்கள் இருந்தார்கள். ஆகவே அகிம்சையைப் புரிந்து கொள்வதற்கு அந்த வெள்ளைக்காரர்களால் முடிந்தது. ஆனால் எமது மண்ணில் அப்படியா...? எத்தனை சந்தர்ப்பங்களில் எமது தலைவர்கள் குண்டாந்தடிகளால் தாக்கப்பட்டிருப்பார்கள்..? எத்தனை இனக்கலவரங்களில் எம் இனத்தவர்களின் தலைகள் வெட்டப்பட்டு தார்ப்பீப்பாக்களுக்குள் போடப்பட்டிருக்கும்..? எத்தனை பெண்கள் தம் உயிரினும் மேலான கற்பை இழந்திருப்பர்..? அப்போதெல்லாம் நாம் ஆயுதங்களையா தூக்கினோம்...? இல்லையே....!

#### விடுதலை வேண்டும்

அகிம்சை..! அகிம்சை..! அகிம்சை..! இந்த வார்த்தைகள் தான் எங்கள் தாரக மந்திரமாக இருந்தன. திலீபன் என்ற தாயகத்துப் பிள்ளையவன் தியாப தீபமாய் சுடர்கொண்டு பற்றிய வாசகமும் அதுவே. இந்தக் தாரக மந்திரத்தைத் தூக்கி எறிந்து விட்டு எமது கைகளிலே ஆயுதங்களைத் தந்தவர்கள் யார்..? நாமாகப் பெற்றுக்கொள்ளவில்லையே? அவர்களாகத்தான் தந்தார்கள். மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகள் தான் தந்தன. தலைவர் பிரபாகரனின் பின்னே ஆயிரமாயிரம் வேங்கைகள் அணிதிரண்டு வீரமாய் வீறுகொண்டு எழுந்ததற்குக் காரணம் யார்..? சிங்களப் பேரினவாதம்தான்....!

# மக்கள் குறித்தும் சிந்தித்தால் என்ன?



இந்துமதி

வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் தொடர்பாக அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்த கருத்துக்கள் சிந்திக்கத் தக்கவை. "மாகாண சபைக்கு, தமிழ் மக்கள் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பி வைத்தமை, மாலை மரியாதை பெறுவதற்கோ, நாடா வெட்டிக் கட்டடத்தைத் திறந்து வைப்பதற்கோ அல்ல. தமக்கு நல்லவற்றைச் செய்யவேண்டும், தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுத் தர வேண்டும் என்பதற்காகவே எம்மைத் தெரிவு செய்து அனுப்பி வைத்துள்ளனர். இவற்றைச் சரிவரக் கடைப்பிடிக்கின்றோமா? என்பதை நாம் ஒரு கணம் சிந்திக்கப் பார்க்க வேண்டும். இவ்வாறு வடக்கு மாகாணசபையின் அவைத் தலைவர் இடித்துரைத்திருக்கிறார்.

### மாகாண சபை உறுப்பினர்கள் பொறுப்பு உணர்ந்து செயற்படவில்லை எனக் குற்றச்சாட்டு

அவரது கருத்துக்கள் மாகாண சபை உறுப்பினர்கள் சகலரது காதுகளிலும் ஏறுமா என்பது சந்தேகமே. ஆனால் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் என்ற வகையில் அவைத் தலைவரின் கருத்துக்களை அவர்கள் செவிமடுத்தே தீரவேண்டும். சபை உறுப்பினர்கள் வருகை தராததால் வடக்கு மாகாணசபையின் அமர்வு இடம்பெறாமல் போனமை வெறுப்பூட்டும் ஒன்றாகும். சபை அமர்வு ஒன்றுக்கு ஆறு இலட்சம் ரூபா செலவு செய்யப்படும் நிலையில், உறுப்பினர்களின் இத்தகைய அலட்சியப் போக்கை மக்கள் மன்னிக்கவே மாட்டார்கள்.

நாட்டின் ஏனைய மாகாணசபை உறுப்பினர்களைவிட வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்குப் பொறுப்புக்கள் அதிகமாகவுள்ளன. போரால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் தமது பொறுப்புக்களை உணர்ந்து இவர்கள் செயற்பட வேண்டிய தருணம் இதுதான். வடக்கு மக்கள் தமது சொத்துச்சுகங்கள் சகலதையும் இழந்து நிர்க்கதியான நிலையில் வாழ்ந்து வருகின்றனர். மேலோட்டமாகப் பார்க்கும்போது, அவர்கள் மகிழ்ச்சியாக இருப்பதாகத் தெரிந்தாலும், அவர்கள் எதிர்கொள்கின்ற வேதனைகள் அவர்களுக்குத் தான் தெரியும். வாராது வந்த மாமணி போன்று வடக்கு மாகாணசபை உருவாகிய போது வடக்கு மக்கள் ஆனந்தத்தின் உச்சிக்கே சென்று விட்டனர். தமது பிரச்சினைகளுக்கும், துயரங்களுக்கும் இனிமேல் விடிவு கிடைத்து விடுமென அவர்கள் நம்பினார்கள். பல்வேறு எதிர்ப்புக்கள், இடையூறுகளுக்கு மத்தியில் மாகாண சபைத் தேர்தலில் வடக்கு வாழ் மக்கள் ஆர்வத்துடன் பங்குபற்றினர். வேட்பாளர்களும் மூலைக்கொரு மேடைபோட்டு அதைச் செய்வோம், இதைச் செய்வோமென வீர முழக்கமிட்டனர். இதைக் கேட்டு மக்கள் புல்லரித்துப் போய் விட்டனர். தேர்தலும் வந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகப்பெரும்பான்மையான ஆசனங்களைப் பெற்று அமோக வெற்றிபெற்றது.

வேட்பாளர்களின் தெரிவின்போது சில கசமுசாக்கள் இருந்த போதிலும், மக்கள் அவற்றைக் கவனத்தில் கொள்ளவில்லை. பின்னர் அமைச்சர்களை நியமிக்கும்போதுதான் சாயம் வெளுக்க ஆரம்பித்தது.

### பதவிகளுக்காக தமக்குள் மோதிக் கொண்ட கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள்

கூட்டமைப்பின் கூடாரத்தினுள்ளே கூக்குரல்கள் எழத்தொடங்கின. தம்பிக்கு இந்த அமைச்சுப் பதவியைக் கொடுங்கள்; மச்சானுக்கு அமைச்சர் பதவி நிச்சயம் வேண்டும்; எமது மாவட்டத்தில் அமைச்சர் ஒருவர் நியமிக்கப்பட்டே ஆகவேண்டும்; எனக்கு அந்த அமைச்சுப்பதவி தான் வேண்டும்; இவ்வாறெல்லாம் குரல்கள் எழத்தொடங்கின. வாக்களித்த மக்கள் அப்போதுதான் விழிப்படையத் தொடங்கினர்கள். தாம் ஏமாற்றப்பட்டதையும் தெரிந்து கொண்டார்கள்.

வடக்கு மாகாணசபை செயற்படத் தொடங்கிய நாளில் இருந்து தற்போது வரையான காலப்பகுதியில் அங்கு என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதை எவரும் சொல்லித்தான் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதில்லை. மக்களுக்குச் சேவை செய்யப் போகின்றோம் எனக் கூறிக்கொண்டு கிளம்பியவர்கள், தமக்கு வழங்கப்படுகின்ற வேதனம் போதாதெனப் போர்க்கொடி தூக்கினர். பின்னர் தீர்வையற்ற, வரி விலக்குப்பெற்ற வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான சலுகை தமக்கும் வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தனர். அதுவும் ஏற்றுக் கொள்ளப்பட்டு வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதிப் பத்திரங்களும் இவர்களுக்கு வழங்கப்பட்டன. இவற்றை வாகன இறக்குமதியாளர்களிடம் கொடுத்து மில்லியன் கணக்கில் பணத்தைச் சம்பாதித்தார்கள்.

### தாம் சார்ந்த கட்சிக்கே துரோகமிழைத்த உறுப்பினர்கள்

குறிப்பிட்ட கட்சியின் சார்பில் நின்று போட்டியிட்டு மாகாணசபை உறுப்பினர்களாகிய சிலர், இன்று அந்தக் கட்சிக்குத் துரோகம் செய்துள்ளனர். முதலமைச்சருக்குப் பின்னால் சென்று அமைச்சர் பதவியையும் பெற்று பதவிச் சுகத்தை அனுபவிக்கின்றனர். பணத்தையும், பதவியையும் பெற்று இவர்கள் சுகமாக வாழ்வதற்காகவா மக்கள் இவர்களுக்கு வாக்களித்தனர்?

கடந்த நான்கு வருடங்களில் ஆறு தடவைகள் அமைச்சரவையில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதிலும் பெரும் இழுபறிநிலையே காணப்பட்டது. முதலமைச்சருக்குச் சார்பானவர்களுக்குச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. அவருடன் முரண்பட்டு நிற்பவர்கள் புறமொதுக்கப்பட்டு நிற்கின்றனர். இந்த மாகாணசபைக்குச் செலவழிக்கின்ற பணத்தைக்கொண்டு ஒரு சிறிய தொழிற்சாலையை அமைத்தால் குறிப்பிட்டதொரு தொகையினர் வேலைவாய்ப்பைப் பெற்று வாழமுடியுமென மக்கள் தமக்குள் பேசிக் கொள்ளும் அளவுக்கு வடக்கு மாகாண சபையின் நிலை மாறிவிட்டது.

வடக்கு மாகாணசபை வாழ்வதும், தாழ்வதும் உறுப்பினர்களின் கரங்களிலேயே தங்கியுள்ளது.

கடந்த நான்கு வருடங்களாக நாம் என்ன செய்தோம் என்பதை அவர்கள் ஒரு கணம் இரை மீட்டுப் பார்க்க வேண்டும். தொடர்ந்தும் இவர்கள் மக்களை மறந்து மெத்தனமாக இருப்பது மனச்சாட்சிக்கு விரோதமான செயலாகும். அவைத்தலைவர் சுட்டிக் காட்டும் அளவுக்கு இவர்கள் கீழ்நிலைக்கு இறங்கிச் சென்றமை எவராலும் மன்னிக்க முடியாத ஒன்றாகும்.

வடக்கு மாகாண சபை வாழ்வதும் தாழ்வதும் உறுப்பினர்களின் கரங்களிலேயே தங்கியுள்ளது. கடந்த நான்கு வருடங்களாக நாம் என்ன செய்தோம் என்பதை அவர்கள் ஒரு கணம் இரை மீட்டுப் பார்க்க வேண்டும். தொடர்ந்தும் இவர்கள் மக்களை மறந்து மெத்தனமாக இருப்பது மனச்சாட்சிக்கு விரோதமான செயலாகும்.

## ஆசிரியருக்கான கடிதம்

### பேச்சுப் பல்லக்கு; தம்பி கால்நடை

'பேச்சுப்பல்லக்கு; தம்பி கால்நடை' என்றொரு முதுமொழி தமிழில் வழக்கில் உள்ளது. நாட்டின் பொது மக்களிடமிருக்கும் மிகப்பெரும் பெறுமதிமிக்க சொத்தான வாக்குகளை ஈட்டிக் கொள்ளும் நோக்கில், தேர்தல் காலங்களில் அரசியல்வாதிகள் பல தரப்பட்ட வாக்குறுதிகளை வழங்கி வாக்காளப் பெருமக்களது வாக்கைத் தமதாக்கித் தேர்தல்களில் வெற்றிபெற்று விடுகிறார்கள். பதவிக்கு வந்ததும் தாம் முன்னர் வழங்கிய வாக்குறுதிகளையெல்லாம் மறந்து தத்தம் சுய இலாப நோக்கில், வருமானம் ஈட்டும் முயற்சியில் இறங்கிவிடுவது எமது நாட்டு அரசியல் தலைவர்கள், அரசியல்வாதிகளது வழமையான செயற்பாடு ஆகிவிடுகின்றது.

நாட்டில் போர் தீவிரமாக இடம்பெற்ற வேளைகளிலும் சரி, போர் முடிவுக்கு வந்தபின்னர், இற்றை வரையான காலகட்டத்திலும் சரி மிக மோசமாக பாதிப்புகளுக்கு உள்ளான தமிழர் பகுதி மாவட்டமாக முல்லைத்தீவு மாவட்டம் அடையாளப்படுத்தப்பட்டு வந்துள்ளது.

அமைச்சர்கள் முதல் அரசியல்வாதிகள் வரை முல்லைத்தீவு மாவட்டத்தை அபிவிருத்தி செய்ய முன்னுரிமை வழங்கப் போவதாக பற்பல வாக்குறுதிகளை வழங்கி தங்களை மனிதாபிமானம்மிக்க 'ஹீரோ'க்களாகக் காட்டி வந்துள்ளார்கள்.

ஆனால் முல்லைத்தீவு மாவட்டத்தின் இந்த ஆண்டுக்கான அபிவிருத்திப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட மொத்தக் கட்டுநிதி ஒதுக்கீட்டில் இதுவரையில் 38 வீதமான நிதி மட்டுமே விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் ஒதுக்கப்பட்ட நிதியில் பெருந்தொகை விடுவிக்கப்படாததால் முன்னெடுக்கப்பட வேண்டிய பல அபிவிருத்தித் திட்டங்கள் தாமதமடைகின்றன எனவும் மாவட்ட நிர்வாகத்துக்குப் பொறுப்பான மாவட்டச் செயலர் தெரிவித்திருப்பது பலருக்கும் அதிர்ச்சி அளிக்குமொரு செய்தியே.

மொத்தத்தில் இந்த நாட்டு அரசியலில் இவையெல்லாம் சாதாரண விடயங்கள்தான் என்பது நாட்டின் அரசியல் வரலாறு குறித்துத் தெரிந்திருப்போர் மட்டுமே அறிந்ததொன்று.

இலங்கை அரசியலில் இவையெல்லாம் சகஜமப்பா என்று கூறுவதைவிட வேறென்னதான் செய்ய இயலும்.

ப.பூபாலன்,
ஊரெழு.

# சிறந்த ஏற்றுமதியாளர்களுக்கான விருது வழங்கல் விழா




சிறந்த ஏற்றுமதியாளர்களை கௌரவிக்கும் விதமாக அரச தலைவர் விருது வழங்கும் நிகழ்வு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் கொழும்பு பண்டார நாயக்க பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

கடந்த 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏற்றுமதித் துறை சார்ந்து சிறந்த திறமையை வெளிக்காட்டியவர்களே இவ்வாறு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக ஏற்றுமதிக்கான சிறந்த பொதி செய்யும் சேவை வழங்குநர் உள்ளடங்கலான பத்து விசேட விருதுகள், ஏற்றுமதியில் சிறந்து விளங்கிய பெண் தொழிலதிபருக்கான அரச தலைவர் விருது உள்ளடங்கலான 11 விருதுகள், பொருள்கள் மற்றும் சேவைகள் சார்ந்த ஏற்றுமதி வகைப்படுத்தலின் கீழ் 48 விருதுகள் உள்ளடங்கலான 59 விருதுகளும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் அமைச்சர்களான மகிந்த அமரவீர, மலிக் சமர விக்ரம, பிரதி அமைச்சர் ஹர்ச டி சில்வா, இராஜாங்க அமைச்சர் எரான் விக்ரம ரத்ன ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (ஓ)

## முதலீட்டுச் சபைக்கு புதிய தலைவர் நியமனம்

BOI
SRI LANKA

இலங்கை முதலீட்டு சபையின் புதிய தலைவராக துமிந்த ரத்னாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனத்தை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வழங்கியுள்ளார் என்று அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் பன்னாட்டு வர்த்தக அமைச்சுத் தெரிவித்துள்ளது.

இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவராக கடமையாற்றி வந்த அரசதலைவர் சட்டத்தரணி உபுல் ஜயசூரிய தனது பதவியில் இருந்து விலகியதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்தை மீள்நிரப்பும் விதமாக துமிந்த ரத்னாயக்க இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

## பன்னாட்டு சுற்றுலாதின நிகழ்வுகள் யாழில்

### வடமாகாண சுற்றுலாத்துறை அமைச்சு நடவடிக்கை



பன்னாட்டு சுற்றுலாதின நிகழ்வினை எதிர்வரும் 25 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை வடமாகாண சுற்றுலாத்துறை அமைச்சு மேற்கொண்டுள்ள தகவலை வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வெளிப்படுத்தியுள்ளார்.

இது குறித்து கருத்துரைத்துள்ள அவர்,

"வடமாகாண சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்யத் தீர்மானித்துள்ளோம். அழிவடைந்துள்ள சுற்றுலா மையங்களை அடையாளப் படுத்தவும் அவற்றை மீள் புனரமைக்கவும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். அந்த வகையிலே இவ்வருட சுற்றுலாதின நிகழ்வினை ஏற்பாடு செய்துள்ளோம்.

இந்தத்தினத்தில் சுற்றுலாத் துறை தொடர்பான விழிப்புணர்வு ஊர்வலம் இடம்பெறும். அன்றைய தினம் வடமாகாணத்தில் உள்ள சுற்றுலாத் தளங்களை அடையாளப்படுத்திய வரைபடம் மற்றும் சுற்றுலா வழிகாட்டிக் கையேடு என்பன வெளியீடு செய்யப்படும்" - என்றார். (ஓ)

“ அழிவடைந்துள்ள சுற்றுலா மையங்களை அடையாளப்படுத்தவும், அவற்றை மீள் புனரமைப்புச் செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் அளவீடுகள் அதிகரிப்பு

### ஏப்ரல் மாத உற்பத்தியில் 1.8 வீதமாகப் பதிவு

2016 ஆம் ஆண்டின் மாதாந்த உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் நடப்பாண்டின் ஏப்ரல் மாத உற்பத்தியில் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் அளவீடுகள் 1.8 வீதத்தால் அதிகரித்துள்ளது. இந்தத் தகவலை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம் அமர சதரசிங்க வெளிப்படுத்தியுள்ளார்.

உற்பத்திக் கைத்தொழில்களில், 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் கடந்த ஏப்ரல் மாத உற்பத்திகளில் தளபாடங்கள் 27.8 வீதமாகவும், ஏனைய உலோகமல்லாத தாதுப் பொருள்கள் உற்பத்திகள் 10.4 வீதமாகவும் மற்றும் ஆடை அணிகலன்கள் 10.2 வீதமாகவும் பதிவாகியுள்ளன. இவை உற்பத்தியின் சார்பு கருதி குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைக் காட்டுகின்றன. உணவு உற்பத்தியானது ஏப்ரல் மாதத்தில் 0.1 வீதத்தால் அதிகரித்துள்ளது. அதேவேளை மரம் மற்றும் மரம் சார்ந்த உற்பத்திகள் 22.3 வீதமாகவும், இரசாயனமும் இரசாயனப் பொருள் உற்பத்தியும் 9.8 வீதமாகவும் மற்றும் புகையிலை உற்பத்திகள் 8.6 வீதமாகவும் வீழ்ச்சியைப் பதிவுசெய்துள்ளன.

கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணானது மிகப் பிரதானமான பொருளாதாரக் குறிகாட்டியாக உள்ளது. இவை குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் கைத்தொழில் உற்பத்தியின் அளவில் ஏற்படும் குறுகிய கால மாற்றங்களை வெளிப்படுத்துகின்றன. (ஓ)

CSE
COLOMBO STOCK EXCHANGE


பங்குச்சந்தைத் தகவல்கள்

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 0212221455

20/9/2017
www.cse.lk

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | ↑ 24.84 | 6,452.91 | 6,428.07 |
| S&P SL20 | ↑ 23.73 | 3,716.25 | 3,692.52 |
| வியாபாரப்புரள்வு | | 1,592,270,080 | 1,628,084,860 |
| உள்நாடு:- கொள்வனவு | | 274,451,328 | 642,996,350 |
| விற்பனை | | 831,071,490 | 772,903,300 |
| வெளிநாடு:- கொள்வனவு | | 1,317,818,750 | 985,088,580 |
| விற்பனை | | 761,198,590 | 855,181,570 |

| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| ஜோன் கீல்ஸ் கோல்டிங்ஸ் | JKH.N | 165.5 | 4,746,119 | 785,491,174 |
| கொமர்சியல் வங்கி | COMB.N | 141 | 3,263,672 | 459,660,175 |
| டயலொக் | DIAL.N | 12.1 | 9,649,023 | 116,525,278 |
| எல் பி பைனான்ஸ் | LFIN.N | 130 | 184,400 | 23,975,612 |
| லங்கா மில்க்பூட்ஸ் | LMF.N | 144 | 123,296 | 17,754,624 |
| லங்கா சிமெண்ட் | LCEM.N | 6.20 | 2,201,030 | 13,110,338 |
| கொமர்சியல் வங்கி | COMB.X | 107 | 92,703 | 9,838,906 |
| சிலோன் கிரேன் எலெவேட்டர்ஸ் | GRAN.N | 69.9 | 109,275 | 7,574,533 |
| எல் பி பைனான்ஸ் | CFVF.N | 37.1 | 199,204 | 7,425,992 |
| மிலேனியம் கவுசிக்ஸ் | MHDL.N | 11 | 667,089 | 7,343,493 |




அறிவித்தல்கள்

பங்குலாபம்
கார்கில்ஸ் (CARG) - Rs. 1.90
சி டி கோல்டிங்ஸ் (CTHR) - Rs. 1.80
ஹண்டர்ஸ் அண்ட் கம்பெனி (HUNT) - Rs. 3.75

| சந்தைக் குறிகாட்டிகள். | | |
|---|---|---|
| கம்பனிகள் | ↑ | 295 |
| பரிமாற்றத்தில் | ↑ | 253 |
| விலை உழைப்பு | ↓ | 10.7 |
| புத்தகப்பெறுமதி | ↓ | 1.4 |
| பங்குலாப விளைவு | ↓ | 2.9 |

# செல்வங்களில் தலையாயது குழந்தைச் செல்வம்

இந்துமதி

குழந்தைகளை மலர்களுடன் ஒப்பிட்டுக் கூறுவார்கள். மலர்களின் அழகு மென்மை ஆகியன அவர்களிடம் நிறைந்து காணப்படுவதே இதற்கான காரணமாகும்.

குழந்தைகளை விரும்பாதவர்கள் எவருமே இவ்வுலகில் இருக்க மாட்டார்கள். குழந்தையொன்றின் சிரிப்பில் தமது துயரங்களையெல்லாம் பெற்றோர் மறந்து விடுவர். குழந்தைகளைத் தெய்வத்தின் உருவில் பார்ப்பவர்களும் உண்டு. இதனால் தான் குழந்தையும் தெய்வமும் ஒன்றெனக் கூறுவார்கள்.

பதினாறு செல்வங்களில் குழந்தைச் செல்வமே தலையாயது. ஏனைய செல்வங்கள் நிறைந்து காணப்பட்டாலும் குழந்தைச் செல்வம் இல்லாத வாழ்க்கை அர்த்தமற்றதாகி விடும். சிலர் போதும் போதுமென்று கூறும் அளவுக்குக் குழந்தைச் செல்வத்தைக் கொண்டிருப்பார்கள். இதேவேளை சிலர் குழந்தைச் செல்வம் கிடைக்கவில்லையே என ஏங்கிக் கொண்டிருப்பார்கள். இதை இறைவன் வகுத்த விதி என்றுதான் கூற வேண்டும்.

குழந்தையொன்று பிறக்கும் போதே பெற்றோரின் பொறுப்புக்கள் அதிகரித்து விடுகின்றன. தமது குழந்தை தொடர்பான சிந்தனையே அவர்களின் மனங்களை ஆக்கிரமித்து நிற்கும். அதன் எதிர்காலம் தொடர்பான திட்டங்களை வகுப்பதில் தமது நேரத்தைச் செலவிடவும் ஆரம்பிக்கின்றனர். பாலர் வகுப்பில் இருந்து பல்கலைக்கழகம் வரை தமது குழந்தையின் கல்வி எவ்வாறு அமைய வேண்டுமென்பதே அவர்களது பிரதான கனவாகவும் மாறி விடுகின்றது.

ஒன்றுமறியாத குழந்தைப் பராயம் ஒரு முக்கியமான காலகட்டமாகும். பெற்றோர் குழந்தைகள் விடயத்தில் அதிக கவனம் காட்ட வேண்டியதும் இந்தப் பருவத்தில்தான். பின்னர் குழந்தைவளர வளர அதன் வளர்ச்சிக்கு ஏற்றாற் போன்று பெற்றோரின் சுமை அதிகரித்து விடுகின்றது.

> “ஒன்றுமறியாத குழந்தைப் பராயம் ஒரு முக்கியமான காலகட்டமாகும். பெற்றோர் குழந்தைகள் விடயத்தில் அதிக கவனம் காட்ட வேண்டியதும் இந்தப் பருவத்தில்தான். பின்னர் குழந்தைவளர வளர அதன் வளர்ச்சிக்கு ஏற்றாற் போன்று பெற்றோரின் சுமை அதிகரித்து விடுகின்றது.



இலங்கையைப் பொறுத்த வரையில் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை தற்போது குழந்தைகளின் வாழ்வில் பெரும் சுமையாக மாறிவிட்டது. பெற்றோர்கள் தமது கௌரவத்தை நிலைநாட்டுவதற்கான ஒரு பரீட்சையாகவும் இதை நினைக்கின்றனர். இதனால் குழந்தைகள் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கின்றனர். அவர்களது ஓய்வு நேரங்கள் கூடப் பறிக்கப்படுகின்றன. விளையாட்டு நித்திரை ஆகியவற்றைக் கூட குழந்தைகள் தியாகம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விடுகின்றது. எந்த நேரமும் படிப்பு என்பதே அவர்களின் மந்திரமாக மாற்றப்படுகின்றது. பெற்றோர் தமது குழந்தைகளின் படிப்பில் கவனம் செலுத்துவதில் தவறொன்றுமில்லை. ஆனால் தமது கௌரவத்துக்காகக் குழந்தைகளை வருத்துவதுதான் ஏற்றுக் கொள்ள முடியாதது. பரீட்சைகள் முடிந்து அதன் முடிவுகள் வெளிவரும்போது இடம்பெறுகின்ற சில சம்பவங்கள் குழந்தைகளின் மனங்களை நோகடித்து விடுகின்றன. பரீட்சையில் தவறிய குழந்தைகள் அவர்களது பெற்றோர்களாலே உள ரீதியாகவும் உடல் ரீதியாகவும் தண்டனைக்கு உள்ளாகின்றனர். வீட்டில் மட்டுமல்ல பாடசாலைகளிலும் இவர்களது மனம் நோகும் வகையில் அவமானப்படுத்தப்படுகின்றனர். பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் மேடையில் ஏற்றிக் கௌரவிக்கப்படும் போது இந்த இளம் பிஞ்சுகள் அதை வேதனையுடன் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். சில வேளைகளில் இவர்களை இழிவாகப் பேசுவதையும் அவதானிக்க முடிகின்றது. இவை யாவுமே தவிர்க்கப்படல் வேண்டும். ஒரு பிள்ளையின் எதிர்காலத்தைப் புலமைப்பரிசில் பரீட்சைதான் தீர்மானிக்கின்றது எனக் கூற முடியாது. ஏனென்றால் இதில் வெற்றி கொண்ட பலர் பல்கலைக்கழகக் கல்வியை எட்ட முடியாத நிலையில் இருக்கும் போது தவறியவர்கள் உயர் கல்வியைக் கற்கின்ற தகைமையைப் பெற்று விடுகின்றார்கள். ஆகவே இது தொடர்பாக குழந்தைகளை வருத்துவதில் எந்தவித அர்த்தமும் கிடையாது. பெற்றோர்களில் சிலர் எந்த நேரமும் தமது குழந்தைகளைப் படி படியென நச்சரித்துக் கொண்டே இருப்பார்கள். இத்தனைக்கும் அந்தக் குழந்தைகள் படிப்பில் கெட்டிக்காரர்களாகக் காணப்படுவார்கள். பரீட்சைகளில் அதிக புள்ளிகளைப் பெற்று வகுப்பில் முதலிடத்தையும் வகிப்பார்கள். இத்தகையவர்களுக்கு நெருக்கடி கொடுப்பது சில வேளைகளில் எதிர்மறையான விளைவுகளையும் ஏற்படுத்திவிடும். ஆகவே பெற்றோர்கள் இவர்களது விடயத்தில் சற்றுத் தளர்ந்த போக்குடன் நடந்து கொள்வதே நல்லது. பிள்ளைகளின் படிப்பில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமானது தான். ஆனால் அதற்காக குழந்தைகளுக்குக் கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்கக்கூடாது.



இந்தியாவின் மறைந்த முதலாவது பிரதமரான ஜவர்க்ர்லால் நேரு குழந்தைகள் மீது அதிக அன்பு கொண்டிருந்தார். அவர் பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் போது கூட அங்கு குழந்தைகளைக் கண்டு விட்டால் அவர்களுடன் தமது நேரத்தைச் செலவிடுவார். குழந்தைகளும் அவரை நேரு மாமா என அழைத்துத் தமது பாசத்தை அவர் மீது பொழிவார்கள். நேருவின் பிறந்த தினம் குழந்தைகள் தினமாக இந்தியாவில் கொண்டாடப்பட்டு வருகின்றது.

குழந்தைகள் இனிப்பு வகைகளை விரும்பிச் சாப்பிடுவார்கள் என்பதால் இனிப்பு வகைகளைத் தயாரிக்கின்ற நிறுவனங்கள் பெருமளவில் இவற்றைத் தயாரித்து விற்பனைக்கு விடுகின்றன.

இதனால் அதிக இலாபத்தையும் ஈட்டி வருகின்றன. குழந்தைகளின் உடல் நலத்தைப் பாதிக்காத வகையில் தரமான பொருள்களை உற்பத்தி செய்து கொள்ள வேண்டியது இந்த நிறுவனங்களின் முக்கிய கடமையாகும்.

குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களாகும் போது நாட்டின் எதிர்காலமே அவர்களின் கரங்களில் ஒப்படைக்கப்படுகின்றது. குழந்தைப் பருவத்தில் இருந்தே அவர்களின் ஆற்றல்களை இனம்கண்டு ஊக்குவிக்க வேண்டும். அவர்களை மட்டம் தட்டுகின்ற செயற்பாடுகள் ஒரு போதுமே இடம்பெறக்கூடாது. சுருக்கமாகச் சொல்லப் போனால் மலர்களைக் கையாளும் போது நாம் காட்டுகின்ற மென்மையைக் குழந்தைகளிடத்திலும் காட்ட வேண்டும்.

---





தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற சுப்பிரமணியம் கிருஷ்ணகுமாருக்கு தென்மராட்சி பிரதேச சமூகத்தால் கடந்த 9ஆம் திகதி பாராட்டு விழா முன்னெடுக்கப்பட்டது. சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அரசியல் பிரதிநிதகள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ம)

## பத்தி எழுத்து

### ஞானசாரரிடத்தில் ஏற்பட்ட மாற்றம் வரவேற்கத்தக்கது

"நாட்டில் நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமாயின், நந்திக் கடலில் பிரபாகரனுக்கு சிலை அமைத்தாலும் அதில் ஒன்றும் பிரச்சினை இல்லை" இவ்வாறு தெரிவித்துள்ளார் பொதுபலசேனாவின் செயலாளரும், இலங்கை அரசியலில் முக்கியப் புள்ளிகளில் ஒருவருமாக இருக்கும் ஞானசாரதேரர்.

மகிந்த, சிங்கள மக்களுக்கு எப்படியோ அது போன்றுதான் பிரபாகரன் தமிழ் மக்களுக்கு 'ஹீரோ'. போரில் விடுதலைப் புலிகளை வெற்றி கொண்ட போதிலும் மக்களிடத்தில் மகிந்த அரசால் மாற்றத்தை ஏற்படுத்த முடியவில்லை. அதற்குரிய திட்டங்களும் கடந்த அரசிடம் இருக்கவில்லை இவ்வாறான கருத்துக்களையும் கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் வைத்து ஞானசாரதேரர் வெளிப்படுத்தியிருந்தார். அவர் வெளிப்படுத்திய இத்தகைய கருத்துக்கள் நிச்சயம் வரவேற்கக்கூடியன. ஏனெனில் கடந்த காலங்களில் அவர் உதிர்த்தவை சிறுபான்மை மக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் இருக்கவில்லை. இலங்கைத் தீவில் ஒட்டுமொத்த சிறுபான்மைச் சமூகத்தின் இருப்பையும் அவர் கேள்விக்கு உட்படுத்தியிருந்தார். கடந்த சில வருடங்களுக்கு முன்னர், "இலங்கைத் தீவு சிங்களவர்களுக்கு மட்டுமான ஒரு நாடு. இங்கு வேறு மொழி பேசுகின்ற தமிழர், முஸ்லிம்கள், மலையக மக்கள் ஆகியோர் இருக்கின்ற போதிலும் அவர்கள் இந்த நாட்டில் உரிமை கோரமுடியாது. ஒரு தென்னந்தோப்பில் கடுகு, மிளகாய், வாழை போன்றவை பயிரிடப்பட்டாலும் அந்தத் தோட்டம் தென்னந்தோட்டம் என்றே அழைக்கப்படும். மாறாக கடுகுத் தோட்டம் என்றோ அல்லது வாழைத் தோட்டம் என்றோ அல்லது மிளகாய்த் தோட்டம் என்றோ அழைக்கப்படாது. அதுபோல் தான் இந்த நாடும். இங்கு தமிழர்கள், முஸ்லிம்கள் இருந்தாலும் நாடு சிங்கள மக்களுக்கானதே" என்று அவர் தெரிவித்திருந்தார். இதைவிடவும் வேறுபல காரசாரமான கருத்துக்களையும் அவர் வெளிப்படுத்தியிருந்தார். நாட்டின் நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் விதத்தில் இந்தக் கருத்துக்கள் அமைந்திருந்தன. தற்போது ஞானசாரதேரரர் நல்லிணக்கத்தைப் பற்றிச் சிந்தித்திருப்பதும், கருத்து வெளியிட்டிருப்பதும் வரவேற்கத்தக்கது.

இலங்கை மக்களின் நாயகன் பிரபாகரன். மக்களின் மனதை வெல்வதற்கு பிரபாகரனுக்கு ஒரு சிலை வைத்தால்கூட அதில் தவறொன்றும் இல்லை என்று அவர் ஏற்றிருப்பதும் கருத்து வெளியிட்டிருப்பதும் நிச்சயம் பாராட்டப்பட வேண்டியது.

தமிழ் பேசும் மக்களுக்கு கூட்டரசு ஏதேனும் நலத்திட்டங்களைச் செய்துவிட்டால் ஞானசாரதேரரிடத்திலும் அவரின் விசுவாசிகளிடத்திலும் இருந்து நிச்சயம் எதிர்ப்பு வரும் என்று பொதுவான அபிப்பிராயம் இருக்கும் நிலையில் ஞானசாரரிடத்தில் ஏற்பட்டிருக்கும் இந்த மாற்றம் கூட்டு அரசுக்கான அழுத்தத்தை ஓரளவாவது குறைக்கும். எனினும் ஞானசாரர் அடுத்த சில நாள்களிலேயே வேறொரு கோணத்தில் வேறொரு கருத்தை வெளிப்படுத்தவும் வல்லவர் என்பதையும் சிந்திக்க வேண்டியுள்ளது.

# புரட்டாதி மாத ராசிபலன்

(17.09.2017 – 17.10.2017) உங்களுக்கு எப்படி?



## சிம்மம்

### மகிழ்ச்சி பெருகும்

அரைக்காசுக்கு போன மானம் ஒரு கோடி கொடுத்தாலும் திரும்ப வராது என்பதை அறிந்த நீங்கள் தன்மானச் சிங்கங்கள். இந்த மாதம் முழுக்க சுக்கிரன் சாதகமாக இருப்பதால் பிரச்சினைகளை எப்படி தீர்க்கலாம் என்று யோசிப்பீர்கள். மாறுபட்ட அணுகுமுறையால் பழைய சிக்கல்களைத் தீர்ப்பீர்கள். வாகனத்தை மாற்றுவது, சீர் செய்வது போன்ற முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். புதிதாக ஆடை, ஆபரணம் வாங்குவீர்கள். வீட்டில் கூடுதலாக ஒரு தளம் கட்டுவீர்கள். வெளியூர் பயணங்களால் அனுகூலம் உண்டு.

கேது 6ஆம் வீட்டில் வலுவாக அமர்ந்திருப்பதால் முக்கியமான முடிவுகளெல்லாம் தன்னிச்சையாக எடுப்பீர்கள். நகர எல்லையை ஒட்டியுள்ள பகுதியில் வீட்டுமனை வாங்குவீர்கள். தள்ளிப்போன வழக்கில் நல்ல தீர்ப்பு வரும்.

வேற்றுமதம், மொழியினரால் அதிரடி மாற்றம் உண்டாகும். பங்குச் சந்தை மூலமாக பணம் வரும். உங்களின் பூர்வ புண்யாதிபதியான குருபகவான் ராசிக்கு 3ஆம் வீட்டில் நிற்பதால் முன்கோபத்தைக் குறையுங்கள். தன்னம்பிக்கையில்லாமல் போகும். பெயரும், புகழும் கெட்டுவிடுமோ என்ற ஒரு பயம் ஏற்படும்.

எப்போது பார்த்தாலும் மனதில் சின்னச் சின்ன சலனம் இருந்து கொண்டேயிருக்கும். புதன் சாதகமான நட்சத்திரங்களில் சென்று கொண்டிருப்பதால் செலவுக்கு பணம் வரும். கொடுக்கல், வாங்கலில் இருந்து வந்த சிக்கல்கள் தீரும்.

உறவினர்கள் எதிர்பார்ப்புகளுடன் பேசுவார்கள். நட்பு வட்டம் விரியும். உங்கள் ராசிநாதன் சூரியன் ராசியை விட்டு விலகி 2இல் அமர்ந்ததால் கண் எரிச்சல், பார்வைக் கோளாறு, பல் வலி, பேச்சால் பிரச்னைகள் வரக்கூடும்.

அர்த்தாஷ்டமச் சனி தொடர்வதால் என்ன வாழ்க்கை இது? செக்கு மாட்டு வாழ்க்கை மாதிரி என்றெல்லாம் சின்னதாக ஒரு வெறுப்பு, சலிப்பு வந்து போகும். தாயாரிடம் எதையும் மறைக்க வேண்டாம்.

வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகமாகும். வாக்குறுதியை நிறைவேற்றப் போராட வேண்டி வரும்.

கன்னிப் பெண்களே! சாதிக்க வேண்டுமென்ற எண்ணம் வரும். புதிதாக கணினி அலைபேசி போன் வாங்குவீர்கள்.

மாணவமாணவிகளே! உங்களின் தனித் திறமையை வளர்த்துக் கொள்வீர்கள். பழைய நண்பர்களைச் சந்திப்பீர்கள். நீண்ட நாள்களாகப் பார்க்க வேண்டுமென்று நினைத்திருந்த இடத்திற்குச் சென்று வருவீர்கள்.

வியாபாரத்தில், வியாபார ரகசியங்கள் யார் மூலம் கசிகிறது என்பதை அறிந்து புது முடிவு எடுப்பீர்கள். அனுபவமிக்க வேலையாட்கள் அமைவார்கள். வாடிக்கையாளர்கள் விரும்பி வருவார்கள்.

உத்தியோகத்தில் வேலைச்சுமை இருந்தாலும் அதிகாரியின் ஆறுதல் வார்த்தையால் நிம்மதி கிட்டும். சக ஊழியர்களால் மறைமுக எதிர்ப்புகளும், தொந்தரவுகளும் தொடர்ந்து கொண்டேதான் இருக்கும்.

கலைத்துறையினரே! உங்களின் படைப்புகளுக்கு பட்டிதொட்டியெங்கும் பாராட்டுக் கிடைக்கும். விவசாயிகளே! மரப்பயிர்களால் வருமானம் பெருகும். இயற்கை உரத்தை மறந்து விடாதீர்கள். மனப்போராட்டம் நீங்கி மகிழ்ச்சி பெருகும் மாதமிது

# வரலாற்றில் இன்றைய தினம் 21.09.2017



1999 - தாய்வனில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 2 ஆயிரத்து 400 பேர் உயிரிழந்த்னர்

1776 - பிரிட்டன் படைகள் நிலைகொண்ட சிறிது நேரத்தில் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் ஒரு பகுதி தீயில் எரிந்தது.

1934 - மிகப்பெரும் சூறாவளியால் ஜப்பானின் மேற்குப் பகுதியான ஹொன்சு தாக்கப்பட்டதில் 3 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

1942 - உக்ரைனில் 2 ஆயிரத்து 588 யூதர்கள் நாசிகளால் கொல்லப்பட்டனர்.

1964 - பிரிட்டனிடம் இருந்து மோட்டா சுதந்திரம் பெற்ற பின்னர் பொது நலவாயத்தில் அங்கம் வகித்தது.

1965 - காம்பியா, மாலைதீவு, சிங்கப்பூர் ஆகியன ஐக்கிய நாடுகள் சபையில் இணைந்தன.

1971 - பக்ரைன், பூட்டான், கட்டார் ஆகியன ஐக்கிய நாடுகள் சபையில் இணைந்தன.

1984 - ஐக்கிய நாடுகள் சபையில் புரூனே இணைந்தது.

1991 - சோவியத் யூனியனிடம் இருந்து ஆர்மீனியா சுதந்திரம் பெற்றது.

2013 - கென்யாவின் நைரோபியில் ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகள் மேற்கொண்ட தாக்குதலில் 67 பேர் உயிரிழந்தனர்.

2016 - கொங்கோ அதிபருக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் 44 பேர் கொலை.

## நாளை

**22.09.2017**

வெள்ளிக்கிழமை

**புரட்டாதி 6**

திதி: துதியை மு.ப. 11.13 வரை
நட்சத்திரம்: சித்திரை பி.இ. 01.59 வரை
சுபநேரம்: 06.02–07.32 வரை
ராகுகாலம்: 10.32–12.02 வரை



# ‘ஸ்கெட்ச்’ படத்தின் முன்னோட்டப் பதிவு நாளை திரைக்கு

விஜய் சந்தர் இயக்கத்தில் விக்ரம் தமன்னா நடிப்பில் உருவாகி இருக்கும் ‘ஸ்கெட்ச்’ படத்தித்தின் முன்னோட்டப் பதிவு நாளை திரைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.


வடசென்னை பின்னணியில் உருவாகியுள்ளது ‘ஸ்கெட்ச்’. சூரி, ஆர்.கே.சுரேஸ், அருள்தாஸ், மலையாள நடிகர் ஹரீஸ், ஸ்ரீபன், மதுமிதா, விஷ்வாந்த், பாபுராஜா, வினோத், வேல்ராமமூர்த்தி, சாரிகா ஆகியோர் முன்னணிக் கதாபாத்திரத்தில் நடிக்கிறார்கள்.

மிகுந்த எதிர்பார்ப்புகளுக்கு இடையே உருவாகி வரும் இந்தப் படத்தின் முன்னோட்டப் பதிவு நாளை திரைக்குவரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.





பீரோவில் இருக்கும் மனைவியின் நூற்றுக்கணக்கான புடைவைகளில் ஒன்றை எடுத்து பொதி செய்து மனைவிக்கு பரிசளித்தால் கண்டுபிடித்துவிடுவாளா?



புரட்டாசி மாத திமிர்

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மனதில் இருந்த குழப்பம் நீங்கும். தொழில், வியாபாரம் வளர்ச்சிக்காக கூடுதல் பணி மேற்கொள்வீர்கள். பெண்கள் வீட்டுக்குத் தேவையான பொருட்கள் வாங்குவர்.

**இடபம்:** மாறுபட்ட கருத்து கொண்டவரை சந்திக்க நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். வாகன போக்குவரத்தில் மிதவேகம் கடைப்பிடிக்கவும்.

**மிதுனம்:** பெற்றோரின் அறிவுரையை ஏற்பது நல்லது. பணியில் பொறுப்பு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் இருக்கிற அனுகூலத்தைப் பாதுகாப்பது நல்லது.

**கடகம்:** பெருந்தன்மை மிக்கவராக விளங்குவீர்கள். நற்செயலில் ஈடுபட்டு சமூகத்தில் வரவேற்புப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

**சிங்கம்:** செயலில் திறமை வெளிப்படும். அலைச்சல் தந்த வேலை ஆதாயம் தருவதாக மாறும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும்.

**கன்னி:** மாறுபட்ட சூழ்நிலையைச் சந்திக்க நேரிடலாம். நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும்.

**துலாம்:** புதிய செயல் நிறைவேற தாமதம் ஆகலாம். சிறிய பணி கூட சுமையாக இருக்கலாம். தொழில், வியாபாரம் சிறக்க விடாமுயற்சி அவசியம். இலாபம் சுமாராக இருக்கும்.

**விருச்சிகம்:** செயல்களில் அதிக நேர்த்தி நிறைந்திருக்கும். அரசு தொடர்பான உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும்.

**தனுசு:** சிலர் சுயநலத்துடன் உங்களிடம் பழகலாம். விழிப்புடன் விலகுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் உழைப்பிற்கேற்ப ஆதாயம் கிடைக்கும்.

**மகரம்:** இஷ்ட தெய்வ அருளால் நன்மை உருவாகும். அன்றாட வாழ்வில் புத்துணர்வுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி வியப்பூட்டும் விதத்தில் இருக்கும்.

**கும்பம்:** முக்கிய செயலை பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உள்ள சிரமத்தை உடனடியாக சரி செய்வது நல்லது. இலாபம் சுமாராக இருக்கும்.

**மீனம்:** புதிய முயற்சி முழு அளவில் வெற்றி அளிக்கும் . ஆதாயம் கூடும். குடும்பத் தேவைகளை தாராள செலவில் நிறைவேற்றுவீர்கள். நண்பரைச் சந்திக்கும் வாய்ப்பு உருவாகும்.

WhatsApp

பொறுமையும் பணிவும் அதிகமானால் கோழை என்பர்....
அன்பும் இரக்கமும் அதிகமானால் ஏமாளி என்பர்....
புன்னகையும் வெகுளித்தனமும் அதிகமானால்
பைத்தியம் என்பர்....
கோபமும் கேள்வியும் அதிகமானால் திமிர் என்பர்....
மொத்தத்தில் மனிதனிடம் இருக்க வேண்டிய எதுவுமே
இல்லாதவனையே இங்கு " மனிதன் என்பர் "

தியேட்டரில் படம் ஆரம்பித்து ஓடிக்கொண்டிருக்கிறது. நம்மாளு பக்கத்தில் வயதான மூதாட்டி இருந்தார். அவர்தான் கொண்டு வந்திருந்த குளிர்பானத்தை 20 நிமிடத்திற்கு ஒரு தடவை என, சிறிது சிறிதாக குடிப்பதை நம்மாளு பார்த்துவிட்டார். எரிச்சலடைந்த நம்மாளு பாட்டியிடமிருந்து குளிர்பானத்தை பிடுங்கி, மடக்...மடக்.. என ஒரே மூச்சில் குடித்து விட்டு,
“பாட்டி கூல்ரிங்க்சுன்னா இப்படி குடிக்கணும்... தெரியுதுங்களா....”
என்றார்.
பாட்டி : அடப்பாவி மவனே....
அவசரப்பட்டியேடா....
நம்மாளு : ஏன்? என்ன..?
பாட்டி : அதிலதான் இவ்வளவு நேரமா நான் வெத்திலையைத் துப்பிக் கொண்டு இருந்தேன்.



ஆசிரியர்: குறைவான பரப்பளவில் அதிகமாக பூச்சுப் பூசும் இடம் எது?



மாணவன்: பெண்ணின் முகம்

‘பார்ல’ செலவு பண்ணா ஆண்பால்....
‘பார்லர்ல’ செலவு பண்ணா பெண்பால்....
அவ்வளவுதான்!!

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | | 6 | | 8 | 2 | | |
| | | | | | 5 | | 7 | 4 |
| | | 5 | | | | | 6 | |
| | | 3 | | 4 | | | | |
| | | | | 3 | | 6 | | 1 |
| | | 2 | | | 6 | 3 | | |
| | | | 4 | | 9 | | 2 | |
| 1 | | | | | | | | 8 |
| | 9 | | | 7 | | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 3 | 6 | 5 | 8 | 4 | 1 | 2 | 9 |
| 8 | 2 | 5 | 9 | 3 | 1 | 6 | 4 | 7 |
| 9 | 4 | 1 | 2 | 6 | 7 | 3 | 8 | 5 |
| 4 | 1 | 9 | 7 | 5 | 3 | 8 | 6 | 2 |
| 6 | 7 | 3 | 1 | 2 | 8 | 5 | 9 | 4 |
| 2 | 5 | 8 | 4 | 9 | 6 | 7 | 1 | 3 |
| 5 | 8 | 7 | 6 | 4 | 2 | 9 | 3 | 1 |
| 1 | 6 | 2 | 3 | 7 | 9 | 4 | 5 | 8 |
| 3 | 9 | 4 | 8 | 1 | 5 | 2 | 7 | 6 |

# சுடோக்கு

**எண் விளையாட்டு**

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டி ருக்கிறது. [உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கி றார்கள்]. இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் [மீண்டும் மீண்டும்] வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

# பணத்தாசை



ஒரு ஊரில் இருந்த ஆற்றில் ஓடகாரர் ஒருவர் ஓடத்தை ஓட்டிக் கொண்டிருந்தார். அந்த ஓடத்தில் ஒரு கருமியும் (கஞ்சன், உலோபி) ஒரு எண்ணெய் வியாபாரியும் அமர்ந்திருந்தனர். ஓடம் நதியின் நடுவே சென்ற நேரத்தில் முதலை ஒன்று ஓடத்தை வழி மறித்தது. தன் வாயை 'ஆ'வெனப் பிளந்து காட்டியது. முதலையைக் கண்டதும் மூவரும் திடுக்கிட்டனர். வாயைப் பிளந்த முதலை மூவரையும் நோக்கி "நான் மிகவும் பசியோடு இருக்கிறேன். எனவே உங்கள் மூவரில் ஒருவர் எனக்கு இரையாக வேண்டும் மூவரில் யார் இரையாகப் போகிறீர்கள் என்பதை நீங்களே தீர்மானம் செய்து கொள்ளுங்கள்" என்றது.

உடனே ஓடக்காரர் அழ ஆரம்பித்தார். "ஐயோ நான் என்ன செய்வேன்? என்னை நம்பி என் குடும்பத்தவர்கள் இருக்கிறார்கள். என்னை முதலை விழுங்கி விட்டால் அவர்களின் கதி அதோ கதியாகி விடும்" என்றார்.




இதனைக் கேட்ட எண்ணெய் வியாபாரியோ "என் பெண்ணுக்கு திருமண ஏற்பாடு செய்துள்ளேன். நான் முதலைக்குப் பலியாகி விட்டால் அவளது திருமணம் நின்று விடும். அவள் வாழ்க்கையே! கேள்விக்குறியாகி விடும்" என்றார்.

உடனே கருமி "ஐயோ அம்மா" என்று தன் வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டான். என் பணமெல்லாம் யார் அனுபவிப்பார்கள்! இப்போது கூட என் மடி நிறையப் பணம் இருக்கிறது. முதலை என்னை விழுங்கினால் இந்தப் பணமும் முதலையின் வாயில் சென்று விடுமே! நான் இறப்பதற்குச் சம்மதியேன். இங்கிருந்து தப்பிச் சென்று விடுவேன். உங்கள் இருவரில் ஒருவர் முதலைக்கு இரையாகுங்கள்" என்றார்.

அந்நேரம் முதலையானது ஓடத்தின் மீது பாய்ந்து கருமியை விழுங்கிய பின்னர் மற்ற இருவரையும் பார்த்துக் கூறியது. "வியாபாரியே! நீ உன் மகளுக்காக வாழ்கிறாய். ஓடக் காரனே உன்னை நம்பியே உனது ஏழைக் குடும்பம் இருக்கிறது. நீங்கள் இருவரும் மற்றவர்களுக்காக வாழ்வதால் உங்களை விட்டு வைத்தேன். இந்தக் கருமி பணத்துக்காக வாழ்ந்ததால் அவனை விழுங்கினேன்" என்றது முதலை. முதலையின் பதில் கேட்டு ஓடக்காரனும் எண்ணெய் வியாபாரியும் அப்படியே உறைந்து போயினர்.

## விமானம் தரை இறங்க வழிகாட்டுவோம்





## வீட்டைக்காக்கும் வீரா

வீட்டைக் காக்கும் வீரா
வேட்டை ஆட வாவா
உஞ்சு உஞ்சு வாவா
உனக்கே சோறு தின்தின்

ஆட்டை மாட்டைத் துரத்திடு
வீட்டுத்தோட்டம் காத்திடு
பழக்கமில்லா ஆட்களைப்
பாய்ந்து விரட்டு போ போ

இரவிற் கள்ளர் வந்தால்
இரைந்து குரைத்துக் காட்டு
விரைவில் வளவு முற்றம்
சுற்றிச் சுற்றி ஓடிவா


## மாறுதல் தெரிகிறது


"அம்மா நான் ஜிம்மில் சேரப் போகிறேன். மாதம் ஐந்நூறு ரூபாய் பணம் கொடுக்க வேண்டும்" என்றான். பதினாறு வயது மகனான அவனுக்கு சிறிது ஒல்லியான உடல்வாகு. திடீரென அவன் இது விடயமாக அடம் பிடித்தது அம்மாவுக்கு சங்கடத்தை ஏற்படுத்தியது. அப்பாவுக்குப் பணப்பிரச்சினை சைவ உணவு சாப்பிடும் வீட்டில் முட்டை சமைத்துத் தருமாறு அம்மாவுடன் தகராறு. தராபட்சத்தில் பச்சை முட்டையை உடைத்துக் குடித்தான். பெரியவர்கள் சொன்னதைக் கேட்கும் நிலையில் அவனில்லை. "சேர்க்கை சரியில்லை" என்று பெற்றோர் திட்டினார்கள். அவன் நண்பன் சிவாவிடம் அவர்கள் விசாரித்த கேட்டபோது தனக்கு பரந்த மார்பும் கட்டுமஸ்த்தான உடலும் வேண்டும். அதனால் தான் முட்டை சாப்பிடுவது. ஜிம்போக நினைப்பது என்று மிகவும் பிடிவாதமாக அவன் இருப்பது தெரிய வந்தது. அவனுடைய உடற்பயிற்சி ஆசிரியரிடம் பெற்றோர் ராகவானின் நிலையை எடுத்துக் கூறினர்.



சத்துள்ள உணவுகளை உண்டும் உடற்பயிற்சிகளைச் செய்தும் ஆரோக்கியமான வாழ்வை வாழ்வதன் மூலம் நல்ல உடல் அமைப்பைப் பெறலாம். சினிமா, தொலைக்காட்சியில் வருவது போல் கட்டுமஸ்தான உடல் எல்லோருக்கும் தேவையில்லை என்று ஆசிரியர் அவனுக்கு விளக்கி சரியான அறிவுரை வழங்கி வைத்தார். இப்போது ராகவனின் செயற்பாட்டில் நல்ல மாறுதல் தெரிகிறது.

## துர்நாற்ற ஆவியும் சோடா கலர்பான கண்டுபிடிப்பும்





ஜோசப் பிரீஸ்ட்லி 1733 இல் இங்கிலாந்தில் உள்ள லீட்ஸ் நகரத்தில் ஓர் ஏழை நெசவாளியின் மகனாகப் பிறந்து தனது 7 வயதில் தந்தையை இழந்து அத்தையின் அரவணைப்பில் படித்து பட்டம் பெற்று பல மொழிகளிலும் சிறந்த புலமை பெற்று பாதியாரானார்.

ஒரு சிறு தேவாலயத்தில் பாதிரியாராக கடமையாற்றியதோடு ஒரு பள்ளியில் ஜீவனத்துக்காக ஆசிரியர் பணியையும் ஏற்று செய்து வந்தார். அந்த தேவாலயத்தின் பக்கத்தில் மதுபானம் தயாரிக்கும் ஒரு ஆலை இருந்து. அங்கிருந்து வீசும் துர்நாற்றம் பீரிஸ்ட்லியின் மூக்கைத் துளைந்தது. அந்த நாற்றம் சாராயம் காய்ச்சும் தொட்டியிலிருந்து கிளம்பும் ஆவியிலிருந்து தான் வருகிறது என்று அனுமானித்த அவர் ஆலைக்குள் சென்று அந்த ஆவியை ஒரு பெரிய கண்ணாடிப் புட்டியில் பிடித்துக் கொள்ள அனுமதி கோரி அதனைப் பிடித்து ஆராய்தார். கண்ணாடிப் புட்டியின் மூலை லேசாகத் திறந்து அந்த ஆவி வெளியேறும் போது அதற்கு மேல் எரியும் விறகை நீட்டினார். உடனே அது அணைந்தது. ஆகவே தீயை அணைக்கும் சக்தி அந்த ஆவிக்கு இருப்பதைத் தெரிந்து கொண்டு அந்த ஆவியைத் தனியாகத் தயாரிக்க முயன்றார். அதன் விளையே கரியமில வாயு. அதனோடு வேறு சில வாயுக்களையும் சேர்த்து ஆராய்ந்த பிரீஸ்ட்லி பிராண வாயுவையும் கண்டு பிடித்தார். சாராய வடிப்பின் போது அதில் ஏற்படும் ஒரு நுரையை சோதித்து அதை புட்டியிலிட்டு அதில் சிறிய நீரைக் கலந்து குடித்த போது அதில் மணமும் ஒரு வகையான உற்சாக உணர்வும் தோன்றியது. இந்தப் பானத்தை மேலும் ஆராய்ந்து சோடாவைக் கண்டறிந்தார். இந்த சோடாவுடன் பல வகை எசன்சுகளைக் கலந்தே சோடா, கலர்பானங்களும் உற்பத்தி செய்யப்பட்டது.

## மாகாண...

தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை மாகாணசபைத்தேர்தல்திருத்தச்சட்டவரைவின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒரே நாளில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்தவே திட்டமிட்டோம். அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டவரைவைக் கொண்டு வந்தோம். உயர் நீதிமன்றம் 20ஆவதை நிறைவேற்ற வேண்டுமாயின் பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று விளக்கமளித்துள்ளது. இதனால் அதனை நாம் கைவிட்டுள்ளோம்.

எமக்குத் தேர்தலை தாமதப்படுத்த வேண்டிய அவசியமில்லை. முன்னைய ஆட்சியில் எல்லை நிர்ணயப் பணிகளில் முன்னெடுக்கப்பட்ட தவறுகளே தாமத்துக்குக் காரணம்.

மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தலை மார்ச்மாதத்துக்குள்நடத்தத்திட்டமிட்டுள்ளோம். மூன்று மாகாண சபைகளுக்கான எல்லை நிர்ணயப் பணிகள் நான்கு மாதத்துக்குள் முடித்துக் கொள்ள முடியும். அதற்குள் முடிப்பதற்கு முயற்சிப்போம். சந்தேகம் கொள்ளத் தேவையில்லை.

மூன்று மாகாண சபைகளுக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்குமான தேர்தலை மார்ச் மாதத்துக்குள் நடத்தி முடிக்கவுள்ளோம். தேர்தலுக்கான திகதியைத் தேர்தல் ஆணைக்குழுவே தீர்மானிக்கவேண்டும்.

முடியுமாயின் மூன்று மாகாண சபைகளுடன் மேலும் மாகாண சபைகளையும் இணைத்துத் தேர்தலை நடத்தவும் வாய்ப்புகள் உள்ளன. அது தொடர்பில் ஆராய முடியும். எல்லை நிர்ணயத்தை பொறுத்த வரையில் கொழும்பில் மாத்திரமே எல்லையைப் பிரிக்க வேண்டியுள்ளது. ஏனைய இடங்களில் இணைப்பதற்கு மாத்திரமே உள்ளன - என்றார். (வ-5.31)

## தீர்வை...

பின் சமவாயங்கள் உடன்படிக்கைகள் ஒழுங்குவிதிகள் சட்ட திட்டங்களுக்கு அமைவாகச் செயற்பட்டு வரும் நாம், ஐ.நா. சபை மேற்கொள்ளும் அனைத்துத் தீர்மானங்களுக்கும் கடப்பாடுகளை நிறைவேற்றியுள்ளோம்.

இலங்கையின் சுயாதீனத் தன்மை மற்றும் இறைமை ஆகியவற்றை பாதுகாத்துக் கொள்ளும் அதேவேளை எம்மீது முன்வைக்கப்பட்டுள்ள பல்வேறு குற்றச்சாட்டுகள், பிரேரணைகள் ஆகியன தொடர்பில் நாம் எவ்வாறு செயற்படவேண்டும் என்பதை ஒரு சுதந்திரமான சுயாதீனம் மிக்க நாடென்ற வகையிலும் நிதானமான பயணத்தின் மூலம் தெளிவான இலக்கை எட்ட எமக்கு உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பை வேண்டி நிற்கின்றேன்.

சில கடும்போக்காளர் துரிதமான பயணத்தை எதிர்பார்க்கிறார்கள். சில கடும்போக்காளர் விரைவான தீர்வுகளை எதிர்பார்க்கின்றார்கள். 30 ஆண்டுகால போர் நிலவிய நாடென்ற வகையிலும், பிளவுகள் ஏற்பட்டிருந்த நாடென்ற வகையிலும், நாட்டினுள் இன ஒற்றுமையை ஏற்படுத்தி சகோதரத்துவத்தை கட்டியெழுப்பி நாட்டையும் மக்களையும் மேம்படுத்துவதற்காக உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றேன். நிதானமாகச் செல்லும் காத்திரமான பயணத்துக்காக உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பை நல்க வேண்டுமென இங்கே மிகத் தெளிவாகக் குறிப்பிடுகிறேன்.

துரிதமான பயணம் ஆபத்துமிக்கதாகும் என்பதை நாம் அறிவோம். சில கடும்போக்காளர் எதிர்பார்க்கும் துரிதமான உடனடித் தீர்வுகளை வழங்குவதிலுள்ள சிரமங்களை, எமது ஒட்டுமொத்த சமூகத்திலுமுள்ள சிக்கலான தன்மையின் அடிப்படையில் நீங்கள் அனைவரும் புரிந்துகொள்வீர்களென நான் நம்புகிறேன். எனது நாட்டினுள் மீண்டுமொரு போர் ஏற்படாததை உறுதிப்படுத்தும் வகையில் அனைத்து இனங்களிடையேயும் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு எனது அரசு முன்னெடுக்கும் பணிகளுக்கு ஐ. நா. சபையினதும் உலக நாடுகளினதும் ஒத்துழைப்புக்களை எதிர்பார்க்கிறேன். நாட்டில் மீண்டுமொரு போர் ஏற்படாத வண்ணம் செயற்பட்டு உலகில் சுபீட்சம் மிக்க பொருளாதாரத்துடன் கூடிய முன்மாதிரியான நாட்டை உருவாக்க உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பை எதிர்பார்கின்றேன் - என்றார். (வ-5)

(மற்றொரு செய்தி பக்கம் 10)

## மகிந்த...

ரணில் விக்கிரமசிங்க, சட்டமா அதிபருடனான பேச்சுக்களைத் தொடர்ந்தே சபை நடவடிக்கைகள் மீண்டும் சுமுகமாக ஆரம்பமாகின.

20ஆவது திருத்தச் சட்டவரைவை அரசு கைவிட்டது. தேர்தலை ஒத்திவைக்கும் நோக்குடன் மாற்று ஏற்பாடாக மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்டவரைவை நாடாளுமன்றுக்கு அரசு கொண்டு வந்தது. இதனை நாடாளுமன்றில் நேற்று எடுத்துக் கொள்வது தொடர்பில் ஆராயப்பட்ட கட்சித் தலைவர்கள் கூட்டத்திலேயே மகிந்த அணி கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தது. நாடாளுமன்றில் சட்டவரைவு சமர்பிக்கப்பட்டதுமே மகிந்த அணியினர் சன்னதம் கொள்ளத் தொடங்கினர்.

### மாகாண சபைகளின் ஒப்புதல் இல்லை

மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா, சட்டவரைவை சபையில் முன்வைத்து பேச ஆரம்பிக்க எழுவதற்கு முன்னரே மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன குறுக்கிட்டார்.

"அரசமைப்பின் 84ஆவது சரத்தின் பிரகாரம் மாகாண சபையுடன் தொடர்பான சட்டவரைவை மாகாண சபைகளுக்கு அனுப்பி வைத்து மாகாணங்களின் ஒப்புதல் பெறவேண்டும். 20ஆவது சட்டவரைவுக்கு மாகாண சபைகளின் ஒப்புதல் பெறப்பட்டது. இந்தச் சட்டவரைவு மாகாண சபைகளின் ஒப்புதலைப் பெறவில்லை. ஏன் மாகாண சபைகளுக்கு அனுப்பவில்லை?" என்று தினேஸ் குணவர்த்தன கேள்வி எழுப்பினார். மாகாண சபைகளின் அனுமதி பெற வேண்டியதில்லை என்று சபை முதல்வர் லக்ஷ்மன் கிரியல்ல மற்றும் சபாநாயகர் கரு ஜயசூரிய ஆகியோர் கூறினார்.

### குழப்பங்கள் ஆரம்பம்

மகிந்த அணியினர் பேரொலி எழுப்பத் தொடங்கினர். நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச, "சட்டவரைவின் சரத்துக்களைவிட திருத்தங்கள் அதிகம். மறைமுகமாகத் திருத்தங்கள் கொண்டு வரப்படும்போது, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சட்டவரைவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியாது போகும். மாகாண சபையின் ஒப்புதல் இந்தச் சட்டவரைவுக்குப் பெற்றுக் கொள்ளப்படத் தேவையில்லை என்பதற்கு சட்டமா அதிபரின் கூற்று உங்களிடம் உள்ளதா?" என்று கேள்வி எழுப்பினார். சபநாயகர் கரு. அதற்கு ஆம் என்று பதிலளித்தார்.

### மேற்பார்வைக் குழு விவகாரம்

"நாடாளுமன்ற மேற்பார்வைக் குழுவின் தலைவர் நான். நாம் நாடாளுமன்றுக்கு அனுப்பிய சட்டவரைவு தற்போது சமர்பிக்கப்படவில்லை. பல்வேறு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. திருத்தங்கள் மேற்பார்வைக் குழுவுக்கு வரவில்லை. இது அநீதி" என்று நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே சத்தமிட்டார்.

"காமினி லொக்குகே தவறான கருத்தை முன்வைத்துள்ளார். நானும் மேற்பார்வைக் குழுவின் உறுப்பினர். சட்டவரைவை நிறைவேற்றி அனுப்பச் சொன்னவரே அவர்தான்" என்று போட்டுக் கொடுத்தார், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புகாமி.

"சட்டவரைவின் திருத்தங்களை மேற்பார்வைக் குழுவுக்கு அனுப்ப வேண்டியதில்லை. குழுக் கூட்டத்தின் போதே திருத்தங்கள் முன்வைக்க வேண்டும். இதற்கும் முன்னர் மேற்பார்வைக் குழுவுக்குத் திருத்தங்கள் முன்வைக்கப்படவில்லை. சம்பிரதாயங்களை மீறி எம்மால் செயற்பட முடியாது" என்று சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல காட்டமாகக் கூறினார்.

சபையில் இதன் பின்னரும் மீண்டும் பெரும் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது. மகிந்த அணியினரின் நடவடிக்கை எல்லை மீறியது. சூடாகிய சபாநாயகர் கரு, விவாதத்தை நடத்த விடுங்கள் என்று கடும் தொனியில் தெரிவித்தார். இதன் பின்னர் அமைச்சர் பைசர் மீண்டும் பேச ஆரம்பித்தார். மகிந்த அணியின் குழப்பங்களை கவனத்திலெடுக்காமல் அவர் தனது உரையைத் தொடர்ந்தார்.

### ஆளும் கட்சியுடன் அமருங்கள்

அமைச்சர் பைசரின் உரையைத் தொடர்ந்து, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் பேச ஆரம்பித்தார். மகிந்த அணியினர் அனைவரும் சபைக்கு நடுவே வந்து செங்கோலுக்கு அருகாமையில் நின்றனர். சபாநாயகருக்கு முன்னே நின்று விவாதத்தை உடன் நிறுத்துங்கள், இது முறையற்ற செயற்பாடு என்று அவர்கள் கூச்சமிட்டனர். இதன்போது, சுமந்திரனைப் பார்த்து, "நீங்கள் ஆளும் கட்சியுடன் சென்று அமருங்கள்" என்றும் அவர்கள் கூச்சலிட்டனர். மகிந்த அணிக்குச் சவால்விடும் வகையில் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் சபை நடுவே வந்தனர். சபையில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

### ரணில் வருகை

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் உரை முடிந்ததும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, சட்டமா அதிபருடன் நண்பகல் 12 மணிக்குப் பேசுவதாகத் தெரிவித்தார். இந்தக் கூட்டத்தில் கட்சித் தலைவர்களும் கலந்து கொள்ள முடியும் என்று தெரிவித்தார். இதனையடுத்தே மகிந்த அணியினர் அடங்கினர்.

### சபை ஒத்திவைப்பு

சட்டமா அதிபரும் பேச்சு நடத்தும் நோக்கில் 12 மணிவரை சபை நடவடிக்கைகளை ஒத்திவைப்பதாக சபாநாயகர் அறிவித்தார். 11.20 மணிக்கு சபை நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டன. இதன் பின்னர் மதியம் 1.30 மணிக்கே சபை நடவடிக்கைகள் ஆரம்பமாகின. "திருத்தங்களை மேற்பார்வைக் குழுவுக்கு அனுப்ப வேண்டியதில்லை. மாகாண தேர்தல் திருத்தச் சட்டவரைவை மாகாண சபைகளுக்கு அனுப்பிவைக்க வேண்டியதில்லை" என்ற சட்டமா அதிபர் எழுத்துமூலம் அறிவித்தலை சபாநாயகர் வாசித்துக் காட்டிய பின்னர் விவாதம் சுமுகமாக முன்னெடுத்துச் செல்லப்பட்டது. (வ-5,31)

## லலித்...

மான 600 மில்லியன் ரூபா நிதியைப் பயன்படுத்தி சில் துணிகளை விநியோகம் செய்ததாக அனுஷ பெல்பிட்டவையும், லலித் வீரதுங்கவையும் பிரதிவாதிகளாக குறிப்பிட்டு கொழும்பு மேல் நீதிமன்றில் சட்ட மா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. கடந்த 7ஆம் திகதி இருவரையும் குற்றவாளிகள் என்று தீர்மானித்த கொழும்பு மேல் நீதிமன்றம், அவர்களுக்கு தலா மூன்று வருடங்கள் கடூழிய சிறைத் தண்டனையை விதித்தது. அத்துடன் தலா 20 லட்சம் ரூபா தண்டம் செலுத்தவும் தொலைதொடர்புகள் ஆணைக் குழுவுக்கு தலா 50 மில்லியன் ரூபா வீதம் இழப்பீடு செலுத்தவும் நீதிபதியால் உத்தரவிடப்பட்டது.

50 மில்லியன் ரூபா இழப்பீட்டைச் செலுத்தாவிடில் மேலதிகமாக மேலும் இரு வருடங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று தீர்ப்பை வழங்கிய போது மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க சுட்டிக்காட்டினார்.

லலித் மற்றும் அனுஷ ஆகியோரின் சட்டத்தரணி மேன்முறையீட்டு நீதிமன்றில் மேன்முறையீட்டைத் தாக்கல் செய்ததுடன், மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க முன்னிலையில் பிணை மனுவையும் தாக்கல் செய்தார். பிணை மனு விசாரணைக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

மன்றில் லலித் வீரதுங்கவும் அனுஷ பெல்பிட்டவும் சிறைக் கைதிகள் அணியும் ஆடையில் முன்னிலையாகினர்.

"இரு மேன் முறையீட்டாளர்களுக்கும் பிணை கோருகின்றோம். 3 வருட சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. இழப்பீடான 50 மில்லியனை செலுத்தாதுவிடில் மேலதிகமாக இரு வருடம் சிறைவாசம் அனுபவிக்க நேரிடும். தண்டனையே மூன்று வருடமாக இருக்கும் போது, மேன் முறையீட்டு மனு விசாரணைகள் முடியவே அதனை அண்மித்த காலப்பகுதி எடுக்கும். இதுதான் யதார்த்தம். அந்த விடயத்தை சிறப்புக் காரணியாகக் கருதி மேன்முறையீட்டாளர்களுக்கு பிணை வழங்க வேண்டும்.

இருவரும் வழக்கு விசாரணைக்கு மன்றில் முன்னிலையாகியுள்ளனர். அத்துடன் அவர்களின் நோய் நிலமையையும் மன்றில் கவனத்தில் எடுக்கவேண்டும்" என்று பிணைமனு விண்ணப்பித்த சட்டத்தரணி தனது விண்ணப்பத்தை முன்வைத்தார்.

அரச சட்டவாதி, மேன் முறையீடு செய்த ஒருவருக்கு பிணை வழங்க சிறப்புக் காரணிகள் அவசியமாகும். மேன் முறையீட்டாளர்கள் முன்வைத்துள்ள காரணிகளில் சிறப்புக் காரணிகள் இருப்பின் பிணையில் செல்வதில் எமக்கு ஆட்சேபனை இல்லை என்றார். இதனையடுத்து நீதிபதி பிணை வழங்கினார்.

(வ-5.31)

**தேவை**

கொப்பறா, தேங்காய் கொள்வனவு செய்யப்படும். - 077 772 2215

**கடை வாடகைக்கு**

யாழ்ப்பாணம், நாவலர் வீதி, இலுப்பையடி சந்திக்கு அருகில் கடை வாடகைக்கு உண்டு. - 077 849 8023

## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 1981.02.23

உதிர்வு 2008.09.21

**ஜோன்பப்ரிஸ் எமில்ஸ்ரான்லி**



ஆண்டு ஒன்பது கடந்துவிட்ட போதிலும்
உன் நினைவுகள் என்றும் எம்மைவிட்டு
நீங்காது எம்மூச்சு உள்ளவரை
உன் நினைவுடன் வாழ்வோம்

537, ஆனந்தபுரம்,
கிளிநொச்சி.

அம்மா, அப்பா,
சகோதரர்கள் மற்றும் உறவினர்கள்.

## மரண அறிவித்தல்

**திருமதி விஜயலட்சுமி (கிளி) தேவராஜா**



பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் ஆலய வீதியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் பணிப்புலம் ஸ்ரீமுத்துமாரிஅம்மன்வீதியைப்பிறப்பிடமாகக் கொண்ட பொன்னுச்சாமி தேவராஜா அவர்களின் அன்புமனைவியுமாகியதிருமதி விஜயலட்சுமி (கிளி) தேவராஜா (18.09.2017) திருகோணமலையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னாலை பசுபதி - கந்தசாமி சிவராஜேஸ்வரி தம்பதியரின் மூத்தபுதல்வியும் பணிப்புலம் பொன்னுச்சாமி - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் இராதாகிருஷ்ணன், கிருஷ்ணமூர்த்தி, தயானந்தன், விஜயமாலா, விஜயகௌரி ஆகியோரின் மூத்தசகோதரியும் தேவரஜனி காலஞ்சென்ற விஜயதர்சன், றஜிதரன், விஜிதரன் ஆகியோரின் அன்புத்தாயும் அமிர்தலிங்கம், தர்மினி, ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.09.2017) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை அருகிலுள்ள சகோதரி திருமதி வரதராஜா விஜயமாலா அவர்களின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக பொன்னாலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## இலங்கை.
## ஏலவிற்பனை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் ஒருங்கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தின் பின்வரும் கால்நடைகள் 04.10.2017 அன்று புதன்கிழமை ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஆடுகள்:-

| இல | இனம் | வயது | பால் | நிறை |
|---|---|---|---|---|
| 01 | ஜமுனாபாரி கலப்பு | 03 வருடங்கள் | ஆண் | 57.0 kg |
| 02 | ஜமுனாபாரி கலப்பு | 03 வருடங்கள் | ஆண் | 55.0 kg |
| 03 | உள்ளூர் | 23 மாதங்கள் | ஆண் | 40.0 kg |
| 04 | உள்ளூர் | 19 மாதங்கள் | ஆண் | 36.5 kg |
| 05 | உள்ளூர் | 18 மாதங்கள் | ஆண் | 26.0 kg |
| 06 | உள்ளூர் | 16 மாதங்கள் | ஆண் | 30.5 kg |
| 07 | உள்ளூர் | 15 மாதங்கள் | ஆண் | 30.0 kg |
| 08 | உள்ளூர் | 13 மாதங்கள் | ஆண் | 30.0 kg |
| 09 | ஜமுனாபாரி கலப்பு | 13 மாதங்கள் | ஆண் | 32.5 kg |

மாடுகள்:-

| இல | இனம் | வயது | பால் |
|---|---|---|---|
| 01 | ஜெர்சி கலப்பு | 02 வருடங்கள் | ஆண் |
| 02 | ஜெர்சி கலப்பு | 22 மாதங்கள் | ஆண் |
| 03 | ஜெர்சி கலப்பு | 21 மாதங்கள் | ஆண் |
| 04 | ஜெர்சி கலப்பு | 09 வருடங்கள் | பசு |
| 05 | ஜெர்சி கலப்பு | 08 வருடங்கள் | பசு |
| 06 | ஜெர்சி கலப்பு | 08 வருடங்கள் | பசு |

இவ் ஏலவிற்பனையில் கால்நடைகளை வாங்குவதற்கு விரும்புவோர் 02.10.2017 (திங்கட்கிழமை) 10.30 மணிக்கு ஒருங்கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தில் கால்நடைகளை பார்வையிடலாம்.

ஏலவிற்பனையானது 04.10.2017 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு ஒருங்கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தில் நடை பெறும்.

ஏலத்தில் வெற்றிபெறும் ஏலதாரர் தாம் கொள்வனவு செய்த கால்நடைகளுக்கான முழுத்தொகையையும் உடனடியாகச் செலுத்தி அன்றைய தினமே கால்நடைகளை கொண்டு செல்ல வேண்டும்.


**பதிவாளர்.**

## மரண அறிவித்தல்

# கணபதிப்பிள்ளை கிருஷ்ணராஜன்

(B.A, M.A, சமாதான நீதிவான்)

(அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி திணைக்களம் வடக்கு மாகாணம்)



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 28.04.1966 | 19.09.2017 |

"கந்தன் இல்லம்", அல்வாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் கயட்டை ஆவரங்கால் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளைகிருஷ்ணராஜன் கடந்த (19.09.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - மரகதம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற அண்ணாச்சாமி (முன்னாள் இ.போ.ச.). இராசகிளி தம்பதியரின் பாசமிகு மருமகனும் யசோதா (ஆசிரியை - யா/அச்சு வேலிசரஸ்வதி வித்தியாலயம்) வின் அன்புக்கணவரும் வியாஷன் (மாணவன் - யாழ். இந்துக்கல்லூரி) பார்ஷித் (மாணவன் - யாழ். இந்துக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற அருமைராஜன் (பொறியியலாளர்), அன்னலக்ஷ்மி, எதிர்வீரசிங்கம் (முன்னாள் உற்பத்தி முகாமையாளர் - ப.தெ.வ.அ.கூ.சங்கம் - பருத்தித்துறை), செல்வபதி, வரதராணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான J.S.சத்தியநாதன் (முன்னாள் கணக்குப்பதிவாளர் - பனை அபிவிருத்திச் சபை, யாழ்ப்பாணம்), தமிழ்மோகன், தெய்வேந்திரம் மற்றும் ரஜனி, யசோதரன் (சுவிஸ்), யசோக்குமார் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.09.2017) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக "கௌடுது" இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**077 596 2340** குடும்பத்தினர்.












# புருவ முடிகள் உதிர்வது ஏன்?

புருவமுடி உதிர்வை ஆங்கிலமொழியில் *'Superciliary madarosis'* எனக் குறிப்பிடுகிறார்கள். இது ஏற்படக் காரணம் தொற்று நோய், தொழு நோய் போன்ற தோல் வியாதிகள், பிறவியிலேயே வரும் மரபுவழிக் குறைபாடு, தைரொக்ஸின் சுரப்பி குறைபாடு, கீமோதெரபி (*Chemotherapy*) எனப்படும் புற்று நோய் சிகிச்சை, நாம்பயன்படுத்தும் அழகு சாதனப் பொருள்களால் ஏற்படும் டெர்மடிட்டிஸ் (*Dermatitis*), தன்னுடல் தாக்குநோய் (*Auto Immune Disease*) போன்றவை புருவ முடி உதிர்வில் அதிக பங்களிப்பைச் செலுத்துகின்றன.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 16.03.1931 | 22.08.2017 |

கடந்த 22.08.2017 காலமான எமது குடும்பத்தலைவி

## பரமேஸ்வரி சிவராசா

அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்தியமும் இன்று (21.09.2017) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மதிய போசனநிகழ்வும் நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பங்கு பற்றுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

**No. 51, B.A தம்பிலேன், வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்.**
**குடும்பத்தினர். 021 221 7218**

## மரண அறிவித்தல்

# திருமதி பொன்னம்மா கார்த்திகேசர்



கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா கார்த்திகேசர் (20.09.2017) புதன்கிழமை பி.ப.2.30 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வில்லவராயர் - வேதநாயகம் தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - செல்லாச்சி தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற கார்த்திகேசரின் அன்புமனைவியும் தர்மகுலசிங்கம் (கனடா), குமாரகுலசிங்கம் (கனடா), கோபாலகுலசிங்கம் (கனடா), உதயகுமாரி (கனடா), இலங்காராணி (தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை), வில்லவராயசிங்கம் ( சுவிற்சலாந்து) ஆகியோரின் அன்புத்தாயும் கமலராணி, பரிமளவதனி, சறோஜினி தேவி, மோகனதாஸ், ஜெயக்குமார், பேபி சுசீலா ஆகியோரின் அன்பு மாமியாரும் றெவின், அனோஸ், கஜன், யதூர்ஷன், சாருகா, தாட்சாயினி, வினித்தா, பானுகா, திவ்வியா, நர்மதன், சாருமதி, கோபிகன், நிலாவிழி ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, குமாரசாமி மற்றும் இராமலிங்கம் ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்ற சுப்பையாவின் அன்புமைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.09.2017) வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தச்சன்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

**வன்னியசிங்கம் வீதி, கைதடி வடக்கு.** **077 624 1589**

# மின்சார சபை ஊழியர் புறக்கணிப்பு முடிவுக்கு

கொழும்பு, செப். 21

இலங்கை மின்சார சபை தொழிற்சங்கங்கள் கடந்த 8 நாள்களாக முன்னெடுத்து வந்த பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நேற்றிரவு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இதன்படி, இன்று காலை இலங்கை மின்சார சபை ஊழியர்கள் சகலரும் வழமை போன்று சேவைக்கு சமூகம் தருமாறு கூட்டுத் தொழிற்சங்க அமைப்பு கேட்டுள்ளது. அமைச்சர் ஜோன் செனவிரத்னவுடனான கலந்துரையாடலின் பின்னர், இலங்கை மின்சார சபை தொழிற்சங்க அமைப்பின் பிரதிநிதிகள் உடன்பாடு ஒன்றில் கைச்சாத்திட்டனர். இதனையடுத்தே கூட்டுத் தொழிற்சங்க அமைப்பு பணிப் புறக்கணிப்பை முடிவுக்குக் கொண்டுவந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-5)

# பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றில் கொழும்பை முன்னிறுத்தவேண்டும்

## ஜெனிவாவில் க.குமார் வலியுறுத்து

ஜெனிவா, செப். 21

இறுதிப் போரில் இடம்பெற்ற குற்றங்களை விசாரிக்க இலங்கையைப் பன்னாட்டுக் குற்ற வியல் நீதி மன்றுக்குப் பரிந்துரை செய்ய வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தினார்.

ஜெனிவா ஐ. நா. மனித உரிமைகள் சபையின் 36 ஆவது கூட்டத்தொடரின் பொது விவாதத்தில் அவர் உரையாற்றினார். அதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேலும் தெரிவித்ததாவது:

"இலங்கை மீதான ஐ.நா மனித உரிமைகள் சபையின் தீர்மானம் 30/1 ஒக்ரோபர் 2015 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டபோது, அதற்கும் ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் வெளியிடப்பட்ட இலங்கை தொடர்பான விசாரணை அறிக்கையின் பரிந்துரைகளுக்குமிடையே கவலைக்குரிய வேறுபாடுகள் காணப்படுவதாக நாம் எச்சரித்தோம்.

இதில், முக்கிய வேறுபாடானது, ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலக விசாரணை அறிக்கையானது கலப்பு நீதிமன்றத்தை அமைக்கச் சிறப்பாகக் கோரியது. ஆனால், தீர்மானம் 30/1 தனித்து சில வெளிநாட்டு பங்களிப்பை தெளிவற்ற முறையில் கோரியது. இது, நடைமுறை நோக்கில் ஒரு உள்நாட்டு பொறுப்புக்கூறும் பொறிமுறையையே.

கலப்பு பொறிமுறையொன்றின் எத்தகைய அம்சங்களும் நிறுவப்படுவதை முற்றுமுழுதாக நிராகரிக்கும் நிலைப்பாட்டோடு, மேற்குறித்த வேறுபாட்டை கொழும்பு அரசு அன்றிலிருந்து எடுத்துக்கூறி வருகிறது. இத்தகைய பின்னணியில், அந்தத் தீர்மானத்தின் எத்தகைய முக்கியமான பகுதிகளை நிறைவேற்ற கொழும்பு அரசு நிராகரித்ததோ, அதனை நடைமுறைப்படுத்துவதற்கு மேலும் இரண்டு வருட கால நீடிப்பு இந்தச் சபையின் 34ஆவது கூட்டத்தொடரின் போது வழங்கப்பட்டது.

இத்தகைய பின்னணியில், போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான நீதியைப் பெற்றுக் கொள்ள கொழும்பு அரசை பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத்துக்கு பரிந்துரை செய்தல் அல்லது தமிழ் மக்களுக்கான நீதியின் முக்கியமான அடிப்படைக் கூறுகளில் கவனம் செலுத்துவற்கான தற்காலிக பன்னாட்டுத் தீர்ப்பாயத்தை உருவாக்குதல் தொடர்பாக, ஐ.நா மனித உரிமைகள் சபையும் மனித உரிமைகளுக்கான ஐ.நாவின் தற்போதைய ஆணையாளரும் அவருக்கு முன் பதவி வகித்த ஆணையாளரைப்போன்று, பொறுப்புக்கூறல் தொடர்பான வெளிநாட்டுப் பொறிமுறையொன்று உருவாக்குவது தொடர்பான அழைப்பை வெளிப்படுத்த வேண்டும் -என்றார். (வ)

# உலகையும் சம்பந்தனையும் ஏமாற்றி அரசு கபடநாடகம்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. நாடாளுமன்றில் சாடல்

கொழும்பு, செப். 21

"பன்னாடுகளையும் எதிர்கட்சி தலைவர் சம்பந்தனையும் ஏமாற்றி அரசு கபடநாடகம் ஆடிக்கொண்டிருக்கின்றது. எனவே மக்கள் தக்க பாடம் கற்பிக்க விரைவில் களமிறங்குவார்கள்" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வவுனியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று மாகாண சபை தேர்தல்கள் (திருத்த) சட்டவரைவு மீதான விவாத்தில் கலந்துந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாண சபை சட்டவரைவில் திருத்தங்கள் செய்யப்படுகின்றன என்ற பேரில் தேர்தலை காலம் தாழத்துவதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த விடயங்கள் தொடர்பில்எமக்குநீண்டஅனுபவம்உள்ளது. அதிகாரப் பகிர்வு உள்ளிட்ட விடயங்கள் இன்றும்கூட பேச்சளவில் மாத்திரமே உள்ளன. தமிழ் மக்களும் அவர்களின் பிரச்சினைகளும் கடந்த அரசால் பார்க்கப்பட்டது போன்று மாற்றான் தாய் என்ற மனப்பான்மையிலேயே இப்போதும் பார்க்கப்படுகின்றது. சிங்கள பௌத்த ஆதிக்கமும் மேலீட்டுள்ளது.

இதன் பின்னணியில் சுதந்திரக் கட்சி, ஹெல உறுமைய, கூட்டு எதிரணி உள்ளிட்ட தரப்புக்கள் பெரும் நிபந்தனையின் பின்னணியில் இதனுல் இணைந்துக்கொண்டுள்ளார்கள். அதனால் புதிய அரசமைப்புக்கான முனைப்பும் பன்னாடுகளுக்கு காட்டுவதற்கான போலி முயற்சியாக மாத்திரமே மாறியது. இவ்வாறான நிலமைகள் இருக்கின்றபோதுதான் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஐ.நா.வில் சென்று இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவேன் என்று கூறிகின்றார். இது சாத்தியப்படுமா? என்பது கேள்விக்குறியாகும்.

இருப்பினும் அரசு, பன்னாட்டுச் சமூகத்தையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்கட்சி தலைவருமான சம்பந்தனையும் ஏமாற்றிக்கொண்டிருந்தாலும் மக்களை ஏமாற்றுவது கடினம். மக்கள் சிறிது காலம் பொறுமைகாத்துவிட்டு பின்னர் அரசுக்கு தக்க பாடம் கற்பிக்க களத்தில் இறங்கிவிடுவார்கள்.

எனவே மக்கள் கபடநாடகம் ஆடும் அரசுக்கும்அதற்குத்துணைபோகின்றவர்களுக்கும் தக்கபாடம் கற்பிப்பார்கள் என்பதை அறிந்துக்கொண்டு எஞ்சியுள்ள காலத்திலாவது உரிய செயற்பாடுகளை முன்னெடுக்காவிடின் போராட்டங்கள்தான் வெடிக்கும்என்றார். (வ-5)

# மத்தள வானூர்தித் தளம்; பெரும் கவலையில் பீஜிங்

பீஜிங் கொழும்பு உறவு கட்டுநாயக்க வானூர் நிலையத்தின் மூலமே வழுபெற்றது என்பதை மறுக்க முடியாது. ஆனால் அதே போன்றதொரு தொடர்பை மத்தள, அம்பாந்தோட்டை வானூர்தி நிலையங்களின் மூலமான ஏற்படுத்த முடியாமைக்கு தாம் வருந்துவதாக சீனா தெரிவித்துள்ளது.

"கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தை மட்டும் இலங்கை நம்பியிருப்பதால்தான் சீன வானூர்தி சேவையை மத்தள, அம்பாந்தோட்டை வானூர்தி நிலையங்களுக்கு கொண்டு சேர்க்க முடியாதுள்ளளது" என்று சீன எயார் லைன்ஸ் நிறுவனத்தின் தலைமை நிறைவேற்றதிகாரி குகுவான் யூ தெரிவித்தார்.

சீன எயார் லைன்ஸ் நிறுவனத்தின் முக்கிய அதிகாரிகளுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலொன்றின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இலங்கை எமது அபிமானமிக்க நாடு. 2005ஆம் ஆண்டிலிருந்து மட்டும் சுமார் ஒரு இலட்சத்து ஒன்பதாயிரத்துக்கும் அதிகமானோர் இருதரப்பிலிருந்தும் வானூர்தி மூலம் பயணமாகியுள்ளனர். சீன - இலங்கை அரசு அங்குள்ள மூன்று வானூர்தி நிலையங்களையும் முதன்மையான பன்னாட்டு நிலையங்களாக மாற்றுமாயின் சீன வானூர்திச் சேவை, கட்டுநாயக்க வானூர்தித் தளம் போன்றே அவற்றையும் பயன்படுத்துவதற்குத் தயங்காது" என்றும் சீன எயார் லைன்ஸ் நிறுவனத்தின் தலைமை நிறைவேற்றதிகாரி தெரிவித்தார். (வ-5)

### 20 குறித்த...

உயர் நீதிமன்றிடம் நாடாளுமன்றம் சார்பில் விவரம் கோரப்பட வேண்டும்"

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் சபையில் வலியுறுத்தினார். நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற மாகாண சபைத் தேர்தல்கள் திருத்தச் சட்டவரைவின் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பின் 123ஆம் உறுப்புரையின் கீழேயே உயர் நீதிமன்றம் அதனது நியாயாதிக்கத்தை செயல்படுத்துகின்றது. உயர் நீதிமன்றத்தின் தீர்மானமானது காரணங்களுடன் அமைந்ததாக இருக்க வேண்டும். அனுப்பிவைக்கப்பட்ட தீர்மானத்தில் காரணங்களை அறிந்து கொள்வதில் சிரமம் என்றால் நாம் உயர் நீதிமன்றத்திடம் விவரம் கோர வேண்டும். தீர்மானத்தில் காரணங்கள் வழங்கப்பட்டிருந்தாலே தவிர, தேவையான திருத்தங்களை மேற்கொள்வது நாடாளுமன்றத்துக்கு சாத்தியமாக இருக்காது. யாதுமொரு சட்டவரைவு மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு வாக்குகளால் நிறைவேற்றப்பட்டு பொது வாக்கெடுப்பொன்றில் அங்கீகரிக்கப்பட வேண்டும் எனில், அரசமைப்புக்கு முரணாகக் காணப்படும் அந்தச் சட்டவரைவின் சரத்துக்களில் அரசமைப்புக்கு இணங்கும் வகையில் மேற்கொள்ளப்படக்கூடிய திருத்தங்களின் இயல்பையும் உயர் நீதிமன்றம் குறிப்பிட வேண்டும் என்று அரசமைப்பின் 123(2)(இ) உறுப்புரையில் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்றத்தின் இந்தத் தீர்மானத்தில் காரணங்கள் குறிப்பிடப்படவில்லை என்பதுடன் மட்டுமல்லாது, நீதியரசர்கள் குழாமின் இரு அங்கத்தவர்களது இணக்கத்துடனும், ஒரு உறுப்பினரது இணக்கமின்றியும் அந்த நீதியரசர்களது பெயர்களைக் கூடக் குறிப்பிடாது இந்தத் தீர்மானம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாது, நீதியரசர் ஒருவர் இணங்காமைக்கான காரணம்கூட தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. இங்கு காரணங்கள் குறிப்பிடப்படாதது துரதிஷ்டவசமானது. திருத்தங்களும் பரிசீலக்கப்படவில்லை.

நீதிமன்ற நடவடிக்கைகளில் நாடாளுமன்றம் தலையிட முடியாது என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். அனுப்பிவைக்கப்பட்ட விடயங்கள் மதிக்கப்பட வேண்டும். இந்த விடயத்தில் முன்செல்லவதில்லை என்று அரசும் தீர்மானித்திருக்கிறது. அது நாடாளுமன்றத்தை சிரமமான நிலைமைக்குள் தள்ளியுள்ளது. ஆட்சேபத்துக்குரிய சரத்துக்கள் எவை, அவை எவ்வாறு திருத்தப்பட வேண்டும் என்பதை நாடாளுமன்றம் தெரிந்துகொள்ள வேண்டும் - என்றார். (வ-5)

### மாகாண சபைகள்...

சட்டவரைவு உயர்நீதிமன்ற வியாக்கியானத்தையடுத்து கைவிடப்பட்டது. உடனடியாக மாற்று ஏற்பாட்டைச் செய்த அரசு, ஏற்கனவே நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டு கிடப்பிலிருந்த மாகாண சபைகள் தேர்தல் திருத்தச் சட்டவரைவை தூசி தட்டி, நேற்றுக் காலை இரண்டாவது வாசிப்புக்கு எடுத்துக் கொண்டது. மகிந்த அணியின் கூச்சல் குழப்பங்களுக்கு மத்தியிலேயே விவாதம் நடைபெற்றது.

சட்டவரைவு இரண்டாம் வாசிப்பு முடிவடைந்து வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. ஆதரவாக 157 வாக்குகளும், எதிராக 37 வாக்குகளும் கிடைத்தது. மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் சட்டவரைவு நிறைவேற்றப்பட்டது.

இதனால், இந்த மாத இறுதியில் ஆயுள் காலம் முடிவடையும் மாகாண சபைகளுக்கு டிசெம்பர் 9ஆம் திகதி தேர்தல் நடத்த முடியாது. நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்ட சட்டவரைவில் சபாநாயகர் கையெழுத்திட்டதும், அது எல்லை நிர்ணய ஆணைக்குழுவுக்கு அனுப்பப்படும். எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் பணிகள் முடிவடைந்த பின்னர், எல்லை நிர்ணய அறிக்கை, மாகாண சபைகள் அமைச்சரிடம் ஒப்படைக்கப்படும். அவர் அதனை வர்த்தமானியில் பிரசுரித்த பின்னரே, தேர்தல் நடத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-5)

### 50 -50...

களுக்கு இடஒதுக்கீடு வழங்க வேண்டும் எனவும் மாகாண சபைகள் தேர்தல் திருத்தச் சட்டவரைவில் நேற்றுத் திருத்தங்கள் செய்யப்பட்டே நிறைவேற்றப்பட்டது.

60 சதவீதம் தொகுதிவாரி முறையிலும், 40 சதவீதம் விகிதாசாரப் பிரதிநித்துவ முறையிலுமாக அமைந்த கலப்பு முறையில் நாடாளுமன்ற மற்றும் உள்ளூராட்சி தேர்தல்கள் நடத்த ஏற்கனவே இணக்கம் காணப்பட்டிருந்தது.

இதே அடிப்படையிலேயே மாகாண சபைத் தேர்தலையும் நடத்த ஏற்பாடு செய்யும் வகையில், மாகாண சபைகள் தேர்தல் திருத்தச் சட்டவரைவில் சரத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது. இதற்கு அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், ரிசாட் பதியுதீன், மனோ கணேசன் ஆகியோர் கடும் எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர். தலைமை அமைச்சர் ரணிலைச் சந்தித்துக் கடும் அழுத்தங்களைப் பிரயோகித்திருந்தனர்.

இதனையடுத்து, 50 இற்கு 50 அடிப்படையில் கலப்பு முறையில் தேர்தலை நடத்தும் வகையில் சட்டவரைவில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (வ-5,31)

### புதிய...

குழுவின் இடைக்கால அறிக்கை 25 பக்கங்களைக் கொண்டது. அதனுடன் ஒவ்வொரு கட்சிகளும் வழங்கியுள்ள பின்னிணைப்பும் முன்வைக்கப்படும்.

வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை மற்றும் உபகுழுக்களின் அறிக்கை மீதான விவாதம் அடுத்த மாதம் முதல் வாரத்தில் நடத்தப்படும். விவாதத்தின் பின்னர், நவம்பர் மாதம் பட்ஜெட் கூட்டத் தொடரின்போது, வழிநடத்தல் குழு பெரும்பாலும் தினமும் சந்தித்துப் புதிய அரசமைப்பை வரையும் பணியை ஆரம்பிக்கும். புதிய அரசமைப்பு வரையப்பட்ட பின்னர், நாடாளுமன்றில் மீண்டும் அது சமர்ப்பிக்கப்படும். நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் அது நிறைவேற்றப்பட்டு பொது வாக்கெடுப்புக்கு விடப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-5)

# சென். அன்ரனிஸின் கால்பந்து முடிவுகள்

யாழ்ப்பாணம், செப். 21
மண்டைதீவு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டங்கள் சிலவற்றின் முடிவுகள் வருமாறு.
ஏழாலை பைஸ்ரார் விளையாட்டுக் கழக அணிக்கும் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. ஆட்டநாயகனாக நவஜீவன்ஸ் அணி வீரர் கௌதமன் தெரிவானார்.
யாழ்ப்பாண ஐக்கிய விளையாட்டுக் கழக அணிக்கும் உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. ஆட்ட நாயகனாக உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழக அணி வீரன் நிரூபன் தெரிவானார்.
சென். லூட்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும், புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழக அணிக்கும், இடையிலான ஆட்டத்தில் சென். லூட்ஸ் விளையாட்டுக் கழக அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. ஆட்டநாயகனாக சென். லூட்ஸ் அணி வீரர் அமல்ராஜ் தெரிவானார்.
(ம-23)

# இன்றைய மோதல்கள்

**உழவர் ஒன்றிய வி.கழக கால்பந்தாட்டத் தொடர்**
உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் இன்று ஆரம்பமாகிறது. இந்தத் தொடரில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பூநகரி இளந்தளிர் விளையாட்டுக் கழக அணி, திருநகர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து செந்தாரகை விளையாட்டுக் கழக அணி, பூநகரி கலைமகள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி, குறிஞ்சி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழக அணி, பரந்தன் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். ஆன்ஸ் விளையாட்டுக் கழக அணி, புங்குடுதீவு சென். சேவியர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பூநகரி கலை ஒளி விளையாட்டுக் கழக அணி, ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புங்குடுதீவு பாரதி விளையாட்டுக் கழக அணி, வவுனியா ஈஸ்வரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உதய தாரகை விளையாட்டுக் கழக அணி, பள்ளிக்குடா ஜொலி போய்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புங்குடுதீவு சன் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி, நண்பர்கள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அன்பு ஐக்கியம் விளையாட்டுக் கழக அணி ஆகியன மோதவுள்ளன.

**சரஸ்வதி ச.ச.நி. கால்பந்தாட்டம்**
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக. அணியை எதிர்த்து சென். லூட்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
(ம-23)



## தேசியமட்ட வீரர்களுக்கு உதவித் திட்டங்கள்

கரணவாய், செப். 21
தொண்டைமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்திலிருந்து தேசிய மட்டப் போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான காலணிகளும் போசாக்கு உணவுப் பொதிகளும் சிவன் அறக்கட்டளை நிறுவனத்தினால் வழங்கப்பட்டது.
குறித்த பாடசாலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சிவன் பவுண்டேசன் நிறுவக இணைப்பாளர் க.சதீஸ், வித்தியாலய பிரதி அதிபர் எஸ்.ரவீந்திரனிடம் பொருள்களை வழங்கினார். (ம-108)

# மெதடிஸ்த பெண்கள் வென்றது கிண்ணம்

யாழ்ப்பாணம், செப். 21
கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி தனது நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு வடமராட்சி பாடசாலைகளுக்கு இடையில் நடத்திய வலைப்பந்தாட்டத் தொடரில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.
விக்னேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி அணி மோதியது.
முதல் பாதியாட்டத்தில் ஆதிக்கம் செலுத்திய பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி முதல் பாதியின் முடிவில் 11:7 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை வகித்தது. அந்த அணி இரண்டாவது பாதியிலும் தனது ஆதிக்கத்தைத் தக்கவைத்து முடிவில் 22:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது.
ஆட்ட நாயகியாக பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியின் வீராங்கனை கீர்த்திகா, சிறந்த மையப் பிரதேச வீராங்கனையாக வட இந்து மகளிர் கல்லூரி அணியின் வீராங்கனை கிரோசிகா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.
(ம-422)

## இங்கிலாந்து, தீவுகள் 2ஆவது ஆட்டம் இன்று

இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.
இங்கிலாந்தின் நொட்டிங்ஹாம் மைதானத்தில் இலங்கை நேரப்படி மாலை 4.30 மணிக்கு இந்த ஆட்டம் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (ம)

## இந்து இளைஞர் அணி சம்பியனானது

யாழ்ப்பாணம், செப். 21
அமரர் சிவலிங்கம் ஞாபகார்த்த கரப்பந்தாட்ட வெற்றிக்கிண்ணத்தைச் சுவீகரித்தது ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம்.
நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமும் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும் பலப்பரீட்சை நடத்தின.
5 செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் செற்றை 25:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் மத்தி கைப்பற்ற அடுத்த இரு செற்களையும் 25:22, 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படை யில் இந்து கைப்பற்றியது. நான்காவது செற்றை 25:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:2 என்று ஆட்டத்தை சம நிலையாக்கியது மத்தி. ஐந்தாவது செற்றில் வெற்றியாளரைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த செற் 15:11 என்ற புள்ளி களின் அடிப்படையில் இந்து இளைஞரின் வசமானதை அடுத்து 3:2 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது இந்து இளைஞர் அணி.
(ம-108)



# தேசியமட்ட கால்பந்தாட்டம் வடக்கு அணிக்கு வெற்றி



யாழ்ப்பாணம், செப். 21
43ஆவது தேசிய விளையாட்டுவிழாவின் ஒரு அங்கமான பெண்களுக்கான தேசியமட்ட கால்பந்தாட்டத் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டமொன்றில் வடக்கு மாகாண அணி வெற்றிபெற்றுள்ளது.
மாத்தறை பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் வடக்கு மாகாண அணியை எதிர்த்து மத்திய மாகாண அணி மோதியது. 3:1 என்ற கோல் கணக்கில் வடக்கு மாகாண அணி வெற்றிபெற்றது. (ம-23)

# 2019 உலகக்கிண்ணத் தொடர்; இலங்கை அணி நேரடித் தகுதி




இங்கிலாந்தில் எதிர்வரும் 2019ஆம் ஆண்டு நடை பெறவுள்ள உலகக்கிண்ணத் தொடரில் விளையாடுவதற்கு நேரடித் தகுதி பெற்றுள்ளது இலங்கை அணி.
இந்த மாதம் 30ஆம் திகதி வெளியாகப்போகும் பன்னாட்டு கிரிக்கெட் சபையின் தரப்படுத்தல் பட்டியலில் முதல் எட்டு இடங்களில் இருக்கும் அணிகளே, 2019ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடரில் நேரடித் தகுதிபெற்று விளையாட முடியும். இலங்கை அணி சந்தித்துவந்த தொடர் தோல்விகள் காரணமாக அந்த அணி தற்போது எட்டாவது இடத்தில் உள்ளது. இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான ஒரு நாள் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் 5:0 என்ற அடிப்படையில் இங்கிலாந்தை வெற்றிபெற்றால் அந்த அணி 8ஆவது இடத்துக்கு முன்னேறி இலங்கை அணி ஒன்பதாவது இடத்துக்குப் பின்தள்ளப்படும் வாய்ப்பு இருந்தது. இதனால் இலங்கை அணி உலகக்கிண்ணத் தொடருக்கு நேரடியாகத் தகுதி பெறாமல் தகுதிச் சுற்று விளையாடியே முக்கிய சுற்றுக்குள் நுழைய வேண்டிய வரலாம் என்றும் கருதப்பட்டது.
இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரின் முதலாவது ஆட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் இங்கிலாந்து வெற்றிபெற்றது. அடுத்த நான்கு ஆட்டங்களில் மேற்கிந்தியத் தீவுகள் வெற்றிபெற்றாலும் தரப்படுத்தலில் ஏற்றம் காணமுடியாது என்பது உறுதியாகிவிட்டதால் இலங்கை அணி உலகக்கிண்ணத் தொடருக்கு நேரடியாகத் தகுதி பெற்றுள்ளது. மேற்கிந்தியத் தீவுகள் அணி தகுதிச் சுற்றில் விளையாடியே முக்கிய சுற்றுக்குள் வரமுடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.
பன்னாட்டு கிரிக்கெட் சபையின் தற்போதைய தரப்படுத்தலின்படி முதல் எட்டு இடங்களில் முறையே தென்னாபிரிக்கா, இந்தியா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, நியூசிலாந்து, பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை ஆகிய அணிகள் உள்ளன. (ம)



## தீவுகளை வென்றது இங்கிலாந்து

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதலாவது ஒரு நாள் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி வெற்றிபெற்று, ஐந்து ஆட்டங்களைக் கொண்ட தொடரில் 1:0 என்று முன்னிலை வகிக்கிறது.
மன்செஸ்டரில் நேற்றுமுன்தினம் இந்த ஆட்டம் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. மழை காரணமாக ஆட்டம் 42 பந்துப்பரிமாற்றங்கள் கொண்டதாகக் குறைக்கப்பட்டது.
முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 9 இலக்குகளை இழந்து 204 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கோல்டர் ஆட்டமிழக்காமல் 41ஓட்டங்களையும், கெய்ல் 37 ஓட்டங்களையும், கோப் 35 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் ஸ்ரோக்ஸ் 3 இலக்குகளையும், ரசிட், வோக்ஸ் இருவரும் தலா இரண்டு இலக்குகளையும், வில்லி, மொயின் அலி இருவரும் தலா ஒரு இலக்கையும் கைப் பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்து 30.5 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து வெற்றிபெற்றது. ஆரம்ப வீரரான பரிஸ்ரௌவ் ஆட்டமிழக்காமல் 100 ஓட்டங்களைப் பெற்றார். ரூட் 54 ஓட்டங்களைப் பெற்றார். (ம)

## இந்தியா – ஆஸ்திரேலியா இரண்டாவது ஆட்டம் இன்று



இன்றைய ஆட்டத்திலும் இந்தியா வெற்றிபெற்றால் அடுத்த மூன்று ஆட்டங்களிலும் தொடர்ச்சியாக வென்றால் மட்டுமே ஆஸ்திரேலிய அணியால் கிண்ணத்தைக் கைப்பற்றக்கூடிய நிலைமை ஏற்படும்.

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.
ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. சென்னையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் இந்திய அணி வெற்றி பெற்றது. இந்த நிலையில் கொல்கத்தாவில் இன்று இரண்டாவது ஆட்டம் நடைபெறுகிறது. இன்றைய ஆட்டத்திலும் இந்தியா வெற்றிபெற்றால் அடுத்த மூன்று ஆட்டங்களிலும் தொடர்ச்சியாக வென்றால் மட்டுமே ஆஸ்திரேலிய அணியால் கிண்ணத்தைக் கைப்பற்றக்கூடிய நிலைமை ஏற்படும். இந்த நெருக்கடி நிலையைத் தவிர்ப்பதற்காக இன்று ஆஸ்திரேலியா அணி கடுமையாகப் போராடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

## பாண்டியாவை வீழ்த்துவேன்

### *சாம்பா நம்பிக்கை*

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையே இன்று நடைபெறும் இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் பாண்டியாவை விரைவில் வீழ்த்தும் நம்பிக்கையை வெளிப்படுத்தினார் ஆஸ்திரேலிய அணியின் சுழல்பந்து வீச்சாளர் சாம்பா.
கடந்த ஆட்டத்தில் சாம்பாவின் பந்துவீச்சில் பாண்டியா தொடர்ந்து மூன்று சிக்சர்களை அடித்து அமர்க்களப்படுத்தினார். மட்டுமல்லாமல் இந்திய அணியின் வெற்றிக்கு முக்கிய காரணியாகவும் அவர் இருந்தார். இந்த நிலையில் இன்று பாண்டியாவை விரைவில் வீழ்த்தும் நம்பிக்கையை வெளிப்படுத்தினார் சாம்பா. (ம)

## 'பத்ம பூஷண்' விருதுக்கு டோனியின் பெயர் பரிந்துரை

இந்த ஆண்டுக்கான பத்ம பூஷண் விருதுக்கு இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் டோனியின் பெயரைப் பரிந்துரைத்துள்ளது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை.
இந்தியாவில் ஆண்டுதோறும் பல்வேறு துறைகளில் சாதனை புரிந்தவர்களுக்கு மத்திய அரசு உயரிய விருதான பத்மஶ்ரீ, பத்ம விபூஷண், பத்ம பூஷண் விருதுகளை வழங்கி வருகிறது. இந்த வரிசையில் இந்த வருடத்துக்கான பத்மபூஷண் விருதுக்கு இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மகேந்திரசிங் டோனியின் பெயரை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை பரிந்துரை செய்துள்ளது.
டோனி இதுவரை 90 டெஸ்ட், 302 ஒருநாள், 78 ரி-20 ஆட்டங்களில் விளையாடியுள்ளார். பன்னாட்டு அரங்கில் 15 ஆயிரத்துக்கும் அதிகமான ஓட்டங்களை எடுத்துள்ளார். இந்திய அணியைப் பல தொடர்களில் வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றுள்ளார். ரி-20 உலகக்கிண்ணம், உலகக்கிண்ணம், மினி உலகக்கிண்ணம் என்று அத்தனை கிண்ணங்களையும் வென்ற ஒரே தலைவராகவும் உள்ளார். சமீபத்தில், பன்னாட்டு கிரிக்கெட் அரங்கில் 100 அரைச்சதங்கள், ஒருநாள் ஆட்டங்களில் 100 ஸ்டம்பிங்குகள் ஆகிய முக்கிய அடைவுகளையும் எட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



# எய்பரை வீழ்த்தியது பார்சிலோனா அணி



லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் பார்சிலோனா அணி அபார வெற்றி பெற்றது. மெஸ்ஸி மீண்டுமொரு தடவை மிகச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி பார்சிலோனாவின் வெற்றிக்கு வித்திட்டார்.

பார்சிலோனாவை எதிர்த்து எய்பர் மோதியது. ஆட்டத்தின் 21ஆவது நிமிடத்தில் பார்சிலோனாவின் முதல் கோலைப் பதிவுசெய்தார் மெஸ்ஸி. பவுலினோ 37ஆவது நிமிடத்தில் மற்றொரு கோலைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 2:0 என்று ஆதிக்கம் செலுத்தியது பார்சிலோனா அணி.

53ஆவது நிமிடத்தில் பார்சிலோனாவின் மூன்றாவது கோலைப் பதிவுசெய்தார் சுவாரஸ். 57ஆவது நிமிடத்தில் சேர்ஜி, எய்பரின் கோலைப் பதிவுசெய்தார். அதன் பின்னர் மெஸ்ஸி மீண்டுமொருமுறை அதிரடி காட்டினார். அவர் 59ஆவது, 62ஆவது, 87ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் 6:1என்ற கோல் கணக்கில் அபார வெற்றிபெற்றது பார்சிலோனா அணி.

(ம)

# தேசியமட்ட கால்பந்தாட்டம்; வென்றது வடமாகாண அணி



யாழ்ப்பாணம், செப். 21

43ஆவது தேசிய விளையாட்டு விழாவின் ஒரு அங்கமான கால்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் நேற்று நடைபெற்ற ஆட்ட மொன்றில் வடக்கு மாகாண அணி வெற்றிபெற்றது.

மாத்தறை பொதுவிளையாட்டு மைதானத்தில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் வடக்கு மாகாண அணியை எதிர்த்து கிழக்கு மாகாண அணி மோதியது. இதில் வடக்கு மாகாண அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இன்று வியாழக் கிழமை இடம்பறும் ஆட்டத்தில் வடக்கு மாகாண அணி, வடமேல் மாகாண அணியுடன் மோதவுள்ளது.

(ம-23)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை A/L எழுதியோர், இளைஞர், யுவதிகள், வெளிநாடு செல்வோர், தொழில்புரிவோர் இணையமுடியும்.
சனி, ஞாயிறு பயிற்சி ஆரம்பம் : 23.09.2017
பிரிவு 1 : காலை 08.00-10.00 பிரிவு 2 : மு.ப 10.00-12.00
பிரிவு 3 : பி.ப 01.00-03.00 பிரிவு 4 : மாலை 03.00-05.00
ஆங்கிலத்தில் ஓரெழுத்துத்தெரியாதவர்களும் எமது பயிற்சியில் இணைந்து சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்.
வாரநாள் பிரிவுகள் (திங்கள் மற்றும் புதன்) - 25.09.2017
1. காலை : 08-10 2. காலை 10-12
ஷாம்சன் ஆசிரியரின் நேரடி வகுப்பு - ஒரு பிரிவில் 20 பேர் மட்டும்
SAAMSON
Experts in English Training
179, வெலிங்டன் சந்தி அருகில், யாழ்நகர். 077 1570 486 021 320 3313

FLC FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்சு வகுப்புக்கள்
V. ஜெகன் (Trained in France- 2007)
2006 முதல் இன்றுவரை 1305 மாணவர்கள்.
40, பலாலி வீதி, இலுப்பையடி 0779 789 456 / 021 221 7781
181, பிரதான வீதி, நெல்லியடி. 021 320 2973
திருமணம் முடித்து U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் Grammar வகுப்புக்களும் நடை பெறுகின்றன.

இலவச ஆங்கில வகுப்பு
யாழ்ப்பாணத்தில்
இலகு முறையில் ஆங்கிலத்தினை கற்பதற்கு
2நாள் பயிற்சி பட்டறை
23, 24ஆம் திகதிகளில் 9 a.m to 1.00 p.m
முன் பதிவுகளுக்கு - 076 697 3040
021 221 2410, 077 050 4446
ELAS Sir Pon. Ramanathan Rd, Jaffna.
பல்கலை எதிரில்.

NEW SCIENCE HALL
KANNATHIDDY ROAD, JAFFNA
2018 A/L
DAY CLASS
தொழில்நுட்பப்பிரிவு
தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
திரு.R.சரவணன்
BSC IN BIOTECHNOLOGY, MSC IN BIOTECHNOLOGY
பொறியியல் தொழில்நுட்பவியல்
திரு.K.அருண்குமார்
HNDE MECHANICAL ENGINEERING (MANIPAY HINDU COLLEGE)
உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல்
செல்வி S.பகீரதி
BSC AGRICULTURE TECHNOLOGY AND MANAGMENT (PERADENIYA), MSC IN HORTICULTURE
ஆரம்பம் : 22.09.2017
FRIDAY, 04.00 P.M

வேலை வாய்ப்பு JOB
யாழ்ப்பாணம் வேம்படிச்சந்திக்கு அருகாமையில் அமைந்திருக்கும் எமது (KINGS ELECTRONICS(PVT) LTD) நிறுவனத்திற்கு
விற்பனை பிரதிநிதிகள்(பெண்)
கணக்கு உதவியாளர்(பெண்)
(கணனி அறிவு விரும்பத்தக்கது)
பணியாளர்கள் உடன் தேவை 01.10.2017ம் திகதிக்கு முன்னர் சுயவிபரக்கோவையுடன் நேரில் சமுகமளிக்கவும்.
KINGS ELECTRONICS (PVT) LTD
12, Point Petro Road, Jaffna. TEL-021-4546699

உடனடி வேலை வாய்ப்பு
விற்பனையாளர் தேவை
• மாதாந்த அடிப்படை சம்பளம் - 13500/-
• தங்குமிட வசதி, சாப்பாடு இலவசம்
• மேலதிக கொடுப்பனவுடன் மாதம் 50, 000/- எடுக்கலாம்
1 மாதம் 50, 000/- எடுக்கலாம்
பட்டா லொறி வாடகைக்கு உடன்தேவை.
மாதாந்தம் 43, 000/- வழங்கப்படும்.
தொடர்பு : 077 437 5353
சுஜித் என்ரபிறைசஸ்
பரந்தன்-வவுனியா-யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.09.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.